# நமது
# சுதந்திர வரலாறு

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்
எழுதியது

பிரசுரகர்த்தர்:
லோடஸ் பப்ளிஷர்ஸ்
P. B. 269 :: சென்னை-1.

பதிப்புரிமை] [விலை 0-15-0

முதற் பதிப்பு—1951

V2:51
N51
TAMIL NADU ARCHIVES … MADRAS
112752
44525

Printed at the B. N. Press, Madras—2

## முகவுரை

நமது சுதந்திர வரலாறு இராமாயணம், பாரதம் போல் விரியும். அதனை இளைஞர் அறிய வேண்டியே, காசிக்குப் போனான்; காவடி கொணர்ந்தான், என்ற பான்மையில் வரைந்துள்ளோம்.

சுதந்திரப் போரின் நோக்கும் போக்கும், இளைஞருக்கு உள்ளக் கிளர்ச்சியையும், உயரிய உணர்ச்சியையும் ஊட்டி, அவர்களின் மனத்தைப் பண்படுத்திப் பரிமளிக்கச் செய்யும்; பெருமைக்கும் வழிகாட்டும்.

மேலெழுந்த வாரியாக எழுதியுள்ள வரலாற்றினை வாசிக்கும் இளைஞர், பின்னாளிலே அப்போரின் முழு விவரத்தையும், தேச சரித்திரத்தையும் நுனித்து அறிய ஆவல் கொள்வர்.


ஆசிரியர்

# பொருளடக்கம்


| என் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இயற்கை நலம் | ... | 1 |
| 2. | மக்களின் வீர நிலை | ... | 5 |
| 3. | ஆங்கிலேயரின் சூழ்ச்சி | ... | 9 |
| 4. | பாளையப் போர் | ... | 13 |
| 5. | வேலுத் தம்பியின் வீருப்பு | ... | 17 |
| 6. | வேலூரில் கலகம் | ... | 20 |
| 7. | மராட்டியரின் பெரு முயற்சி | ... | 23 |
| 8. | வங்கத்தில் கொதிப்பு | ... | 26 |
| 9. | மன வெடிப்பு | ... | 29 |
| 10. | யுத்த மூட்டம் | ... | 32 |
| 11. | முதல் மகாயுத்தம் | ... | 35 |
| 12. | கும்பினி கவிழ்தல் | ... | 38 |
| 13. | காங்கிரஸ் உதயம் | ... | 41 |
| 14. | சுயராஜ்யம் பிறப்புரிமை | ... | 44 |
| 15. | சுதேசியக் கிளர்ச்சி | ... | 47 |
| 16. | வெடிகுண்டு வீச்சு | ... | 50 |
| 17. | பஞ்சாப் படுகொலை | ... | 53 |
| 18. | ஒத்துழையா இயக்கம் | ... | 57 |
| 19. | உப்புச் சண்டை | ... | 60 |
| 20. | கொடுங்கோல் தர்பார் | ... | 63 |
| 21. | காங்கிரஸ் ஆட்சி | ... | 66 |
| 22. | சுபாஷின் முனைப்பு | ... | 69 |
| 23. | இங்கிலாந்தின் ஏக்கம் | ... | 72 |
| 24. | வெள்ளையரே ! வெளியேறுக ! | ... | 75 |
| 25. | ஆகஸ்ட் புரட்சி | ... | 78 |
| 26. | தேசீயச் சேனை | ... | 81 |
| 27. | டில்லி மீது பாய | ... | 85 |
| 28. | தேசீய அரசின் அறிக்கை | ... | 88 |
| 29. | படுகளப் பாய்ச்சல் | ... | 91 |
| 30. | இராஜ தந்திர சூழ்ச்சி | ... | 94 |
| 31. | அரசுரிமை அடைதல் | ... | 97 |
| 32. | பாரதக் குடியரசு | ... | 100 |
| 33. | முஸ்லீம் லீக் | ... | 102 |
| 34. | முடிவுரை | ... | 106 |



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 352
MADRAS




# நமது சுதந்திர வரலாறு

---

## 1. இயற்கை நலம்

**பா**ருக்குள்ளே நல்ல பூமி நமது பாரத பூமி! இது மிகவும் பழமையான பெரும் பூமி; பல்லாண்டு பல்லாண்டாகப் பெருமையும் பொருந்தியதாம். இதனை, **பரத கண்டம்** என்றும் சொல்லுவர். பாரசீகரும் கிரேக்கரும் அறியாது இட்ட பெயர் இந்தியா என்பதாம்.

இதன் பரப்பு இருபது இலட்சம் சதுரமைல். தென் வடலாக இது இரண்டாயிரம் மைல் நீளம் உள்ளது. கிழ மேலாகவும் அவ்வளவு தூரம் இருக்கும். இதன் ஜனத்தொகை நாற்பது கோடியாகும். உலக ஜனங்களிலே ஐந்தில் ஒரு பங்கு மக்கள் நம் தேசத்தில் வசிக்கிறார்கள்.

பாரத பூமியின் உயர்வை உணர்த்துவதே போல் வடக்கே இமயமலை வானளாவ விளங்கும். அம்மலையிலிருந்து கங்கை, சிந்து முதலிய நதிகள் புரண்டு ஓடும். அவ் விரு நதிகளும் பாயும் பிரதேசங்கள் மிகவும் செழிப்பு உள்ளவை.

தென் கோடியிலே காவிரி, வைகை முதலிய ஆறுகளும் ஓடுகின்றன. ஆங்காங்கே இதர நீர்நிலைகளும் ஏராளமாக உண்டு. காவிரிநதி பாயும் தஞ்சைச் சீமை, தென் இந்தியாவின் **நெற் களஞ்சியம்** எனப்படும்.

நீர்வளத்தினால் நிலவளம் கொழிக்க, உணவுக்கும் உடைக்கும் உரிய அனைத்தும் நம் தேசத்திலே நிரம்பக் கிடைக்கும். இங்கே முன்னம் பாலும் தேனும் வழிந்து ஓடின; பொன்னும் மணியும் கொழித்துக் கிடந்தன.

ஆதலினால், அந் நாளிலே உரோமரும் கிரேக்கரும், எகிப்தியரும் சீனரும் இங்கிருந்து மணியும் முத்தும், மிளகும் மயிலும், யானைத் தந்தமும் வண்ணத் துகிலும், இன்னும் அரியன பிறவும் பெற்றுக் களித்தனர்; அதனால் பெரும் போகமும் துய்த்தனர்.

இனி, கல்விப் பெருக்கும் காவியச் செருக்கும் சமயச் சிறப்பும் நாகரிக நேர்த்தியும் இங்கே மிகுதியும் உண்டு. இதற்கு வேத சாஸ்திரங்களும் உபநிஷத நூல்களும் சாட்சி பகரும்; பகவத் கீதையும் துணை நிற்கும்.

வான்மீக முனிவரும் வியாச பகவானும் ஈடிலா இதிகாசங்கள் இயற்றியுள்ளர். மகா வீரர், புத்தர் பிரான் ஆகிய இருவரும் அன்பும் அருளும் ததும்ப, அரிய ஞான போதம் புகட்டியுளர். அசோக மகாராஜன் அவனி யெங்கும் அறப்பயிர் விளைக்க முயன்றான்.

சந்திர குப்தனும் சமுத்திர குப்தனும் ஆண்மைக் கொடி தூக்கினர். பிருதிவி ராஜனும், பிரதாப சிம்மனும் பெருமிதமான வீறு காட்டினர். நம் தமிழ் வேந்தரும் கிழக்குத் திசையிலே நெடுகச் சென்று, அங்கெல்லாம் புகழும் பெருமையும் பரப்பினர்.



ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலிய மகாபுருஷர் அரிய தருமமே பேசி, உலக மாந்தருக்கு நல்வழி காட்டினர். இராமதாஸ், கபீர்தாஸ் முதலிய மகான்கள், தெய்வம் ஒன்றே என்று அறிவுறுத்தினர். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி மணத்தைப் பெருக்கி, அனைவருக்கும் பரவசம் ஊட்டினர்.

கம்பனும் காளிதாஸனும் இனிய கவிபாடி, எல்லாருக்கும் களிப்பை எழுப்பினர். திருவள்ளுவரும் திருமூலரும் தேன் மொழியாம் தமிழ் மொழியில் நான்மறையின் மெய்ப் பொருளை நன்கு உணர்த்தியுளர். சீதையும் கண்ணகியும் கற்பின் இலக்கணத்தை உலக மகளிர்க்கு எடுத்துக் காட்டுவர்.

இயற்கை வனப்பெல்லாம் ஒருங்கே ததும்பும் காச்மீர நாட்டினைப் போல், இனிய சுகவாசத் தலத்தை உலகெங்கும் காணமுடியாது. பலவாறான இயற்கை அமைப்பும் தட்ப வெட்ப நிலையும் சமவெளியும் பீடபூமியும் மண்வாசியும் பொருந்தியது இப்பாரத பூமியே. இதனை ஒரு குட்டி உலகம் என்னலாம்.

நானாவிதமான மொழியும் மதமும், பிரிவும் பாகுபாடும், நடையும் உடையும் பாரத மக்களிடம் காணப்படும். உடலின் நிறமும் உடையின் கோலமும் உள்ளத்தின் நிலையும் வேறுபடினும் என்ன? எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம் என்னும் உணர்ச்சியே மிகுந்து தோன்றும்.

ஆதி நாளிலே கிரேக்கர் இங்கு வந்து, வேத உபநிஷத்துக்களின் கருத்துக்களையும் காவிய வளத்தையும் நாகரிக நலத்தையும் நன்கு அறிந்து நலம் எய்திச் சென்

றனர். அவர்களின் மூலம் உரோமாபுரியில் அவை பரவின; அப்பால் ஐரோப்பா எங்கும் பரிமளித்தன.

அன்றியும் ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா முதலிய இடங்களுக்கு அசோக மகாராஜன் தனது மத போதகரை அனுப்பி, அங்கெல்லாம் ஞான விளக்கு ஏற்றி வைத்தார். தமிழ் வேந்தரும் சீனு, ஜப்பான், ஜாவா, இலங்கை முதலிய தேசங்களில் அறிவுச் சுடர் கொளுத்தினர்; ஆன்ற பண்பாடும் பரப்பினர்!

இவற்றை யெல்லாம் மனத்துட் கொண்டே நமது தேசிய கவிராஜ சிங்கமான சுப்பிரமணிய **பாரதியார்** இப் பாரத தேசத்தைப் பற்றி இவ்வாறு பாடிப்போனுர்:—

ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் தேசம்!
தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே உயர் தேசம்!

## 2. மக்களின் வீர நிலை

**எ**ங்கும் ஞான விளக்கு ஏற்றிவைத்து, உலக மக்களைப் பண்படுத்தி வந்த பாரத புத்திர புத்திரிகள் தமது நாட்டிலே பிறர்க்கு அடிமையாக வாழ்வரோ? சென்ற ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் தமது பெருமை எங்கும் பொங்க வாழ்ந்துவந்தனர்.

ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னம், உலகையெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆள எண்ணிய கிரேக்க வேந்தனும் மகா அலெக்ஸாந்தர் என்பான் ஒரு பெருஞ் சேனையுடன் புறப்பட்டான்; வழியில் உள்ள நாடுகளை எல்லாம் வென்று, இந்தியாவின் வடமேல் கோடியில் ஒரு சிறிது பாகத்தையும் பிடித்துக்கொண்டான்.

சிறிது நாள் சென்றதும், அக் கிரேக்கப் படை வெள்ளத்தை நமது சந்திரகுப்த சக்கரவர்த்தி புரட்டியெறிந்து மிக்க வீறு காட்டினுர். அவர் கண்ட **மகதப் பேரரசும்** அப்பால் கிளம்பிய **குப்த வல்லரசும்** அன்னியரை இங்கே அண்டவிடாமல் ஆண்மை காட்டி நின்றன.

இந்தியாவுக்கு மேற்கேயுள்ள அரபிக் கடலை யடுத்து, **அரேபியா** என்று ஒரு சிறு நாடு உண்டு. ஆரும் நூற்றுண்டிலே அங்கு **முகம்மது நபி** என்னும் தீர்க்கதரிசி ஒருவர் தோன்றினுர்; அந்த அரபியருக்கு உகந்த **இஸ்லாம்** என்னும் மதத்தை அங்கே ஏற்படுத்தினுர். இஸ்லாம் என்ருல் சாந்தி என்றே அர்த்தம்.

அப் புதிய மதத்தில் மோகங் கொண்ட அரபியர் அம்மதத்தை எங்கும் பரப்ப எண்ணினர்; எட்டாம் நூற்றுண்டின் துவக்கத்திலே நமது **சிந்து நாட்டின்மீது**

படைகொண்டு பாய்ந்தனர். அந் நாட்டு அரசனும் அரசியும் தமது ஆவி போகும் வரையில் அருஞ்சமர் செய்யத் தவறவில்லை.

அந்த இருவரும் இறந்தபின்பே, சிந்துநாடு அரபியரின் வசமாயிற்று. உடனே வலுக்கட்டாயமாக அம் மதத்தைப் பரப்ப அவர்கள் முயன்றார்கள்; பின்பு உள்நாட்டிலும் படைகொண்டு பாய முனைந்தார்கள். அப்போது இரஜபுத்திர வேந்தன் **பூபசிம்மன்** என்பான் அவர்களைப் போர்முகத்தே முறியடித்தான். பின்பு அவர்கள் அச் சிந்து நாட்டையும் கைவிட்டு இத் தேசத்தைத் துறந்து ஓட நேர்ந்தது.

இதற்கு இடையில் பாரத பூமியை அடுத்து மேற்கேயுள்ள நாடுகளில் எல்லாம் இஸ்லாமிய மதம் பரவியது. அதனால் அந் நாடுகள் முகம்மதிய நாடுகள் ஆயின. அங்குள்ள கஜனி நாட்டை ஆண்டு வந்த **கஜனி முகம்மது** என்பான் நமது பூமியின் செல்வச் சிறப்பைக் கேள்வியுற்றான்; உடனே அந்த ஆசையினால் தண்டு கொண்டும் புறப்பட்டான்,

வடமேற்கு எல்லைப்புறத்தில் வேந்தராக விளங்கியிருந்த **ஜெயபாலன், அநங்கபாலன்** முதலியோர் அக் கஜனி முகம்மதை மறித்து நிறுத்திப் போர் தொடுத்தனர். பாரத மாதரும் அப்போருக்கு உரிய உதவியெல்லாம் செய்து வந்தனர். அவ்வேந்தர் வீரசுவர்க்கம் புகுந்த பின்பே அவன் இப்பூமிக்குள் நுழைந்தான்.

பதினேழு முறை அவன் படையுடன் வந்து கொள்ளை பல கொண்டான்; ஆனாலும் ஒவ்வொரு தடவையிலும் செம்மையாக அடி வாங்கிக்கொண்டே திரும்பினான். மேலைக் கடற்கரையில் அன்று அவன் அழித்துச் சென்ற **சோமநாத ஆலயம்** சமீபத்திலே முன்போல் நிறுவப்பட்டுள்ளது.



இங்கே அரசு கொள்ள அக்கஜனி முகம்மது கருதவில்லை. அவனுக்குப் பின் **கோரி முகம்மது** என்பான் நமது பாரத பூமிக்குள் பல தடவை நுழைந்தான். டில்லி சக்கரவர்த்தியான **பிருதிவி ராஜன்** கையில் ஆறு தடவை சிக்கி அவன் சீரழிய நேர்ந்தது.

முடிவிலே அப் பிருதிவி ராஜன் போர்முனையிலே மாண்டு மடிந்தனன். அதன்பின் பதின்மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்திலே, அக் கோரிமுகம்மதின் அடிமைகளில் ஒருவன் டில்லிமாநகரில் அரசுகொண்டான். அப்போதுதான் முதன் முதலாக இங்கே முகம்மதிய அரசு முளைக்கலாயிற்று.

வட இந்தியாவிலே சிறிது சிறிதாக அம் முகம்மதிய அரசு பரவி வந்தது. முன்னூறு வருஷ காலம் பல முகம்மதிய அரச வமிசங்கள் அங்கிருந்து ஆட்சி செலுத்தி வந்தன. ஆனாலும் இத் தேச மக்கள் ஓயாமல் ஒழியாமல் அந்த அரசுடன் மல்லுக்கு நின்றனர். அதனால் பலபல பெருஞ்சண்டைகள் நடந்தன.

அச் சண்டைகளின் பலனாக அந்த முகம்மதிய அரசரில் சிலர் இத்தேசமக்களை அணைத்து ஆதரிக்கவும், அம்மக்களின் துணைகொண்டு ஆட்சி நடத்தவும் ஆவல் மிகுந்தனர். அதனால் அடிபிடி கட்டாயத்தின்மேல் மக்களை மதங்கெடுப்பதும் குறையலாயிற்று. ஆயினும் மக்களின் சுதந்திர உணர்ச்சி தணிந்து விடவில்லை.

முகம்மதியரிலே ஒரு சாராரான மொகலாயர் என்போர் பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே அந்த அரசைப் போக்கி இங்கே அரசுகொண்டனர். அவர்

களில் முதல் அரசன் **பாபர்** எனப்படுவான். இரஜ புத்திர வேந்தனை **சங்கரசிம்மன்** என்பானுக்கு அந்தப் பாபர் ஆற்ருது போயினுன் ; ஆதலின் சங்கரனுக்குக் கப்பம் கட்டி வாழவும் கருத்துக்கொண்டான்.

சங்கர சிம்மன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அத ஞல் அம் மொகலாய அரசு எப்போதும் இரஜபுத்திர ருடன் சண்டை போட்டுவர நேர்ந்தது. அம் மொக லாய வேந்தரில் சிறந்தவர் **மகா அக்பர்** எனப்படுவார். இவர் அந்த இரஜபுத்திரருடன் நேசமாக வாழவே விரும்பினுர் ; அவர்களின் மாதரை மணந்து உறவு பூணவும் முற்பட்டார்.

மேலும் ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் இடையே நிகழும் சமயப் பூசலைக் கண்டு, இவர் மனம் புழுங்கியது. ஆதலின் இருதிறத்தாரும் ஒப்பக் கூடிய புதிய சமரச மதம் ஒன்று காணவும் இவர் முனையலா ஞர். இருவரும் ஒற்றுமை கொண்டால்தான் தேசம் உயரும்; ஆட்சியும் சிறக்கும் என்பது இவரது கருத் தாம்.

அப்போது பாரத பூமியின் நாகரிகம், சிற்பம், கலை இவற்றுடன் இஸ்லாமிய கலாசாரம் குழையத் தொடங் கியது. என்ருலும் இரஜபுத்திர வேந்தன் **பிரதாப சிம்மன்** என்பார் சுதந்திர உணர்ச்சியே மேலிட்டு நின்று அக்பருடன் நெடுங்காலம் சண்டை போட்டு வந்தார்.

## 3. ஆங்கிலேயரின் சூழ்ச்சி

**இந்தியாவின் வளத்தையும் வாழ்வையும் அறிந்து வியந்தே** கஜனி முகம்மதும் கோரி முகம்மதும் இங்கே வந்தனர் அல்லவா ? ஐரோப்பிய தேசத்தாரும் நமது செல்வ மிகுதியை உணர்ந்தே இங்கு வர மிகவும் விரும்பினர். அவர்கள் வந்த விதம் பார்ப்போம்.

முதன் முதல் போர்த்துகல் தேசக்காரர் வர்த்தகம் புரிய இங்கு வந்தனர். அவர்களின் தலைவன் **வாஸ்கோடிகாமா** என்பவன் **கோழிக்கோடு** வேந்தனை அடைந்து மண் டியிட்டுச் சலாம் செய்து இங்கே வர்த்தகம் செய்ய அனுமதி பெற்ருன். நூறு வருஷ காலம் அவர்களின் வர்த்தகம் இங்கே ஓங்கியிருந்தது.

அப்போது அவர்கள் கோவா, தையு, தாமன் என்ற நமது நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். இன்றும் அம்மூன்றும் அவர்கள் வசம் உள. அவர்களை அடுத்து டச்சுக்காரர் என்போர் வாணிபம் நடத்த இங்கு வந்தனர். அதன் பிறகே ஆங்கிலேயருக்கு வர்த் தக ஆசை உதித்தது.

ஆயிரத்து அறுநூரும் ஆண்டு இலண்டன் மாநகரிலே ஒரு நூறு பேர் சேர்ந்து கிழக்கு இந்தியா கம்பெனி என்பதை நிறுவினர். அச்சமயம் இங்கி லாந்தை ஆண்டுவந்த எலிஸபத் ராணி அக் கம்பெனிக்கு ஆதரவு அளித்தாள்.

மொகலாயரின் ஆட்சிக் காலத்திலேதான் ஆங்கி லேயர் இங்கு வந்தனர். மகா அக்பரின் பிள்ளையான ஜஹாங்கீர், [illegible]னை ஷா ஜஹான் ஆகிய இருவரி

தயவால் சூரத் நகரிலே அவர்கள் வர்த்தகம் செய்யத் தொடங்கினர் ; நல்ல இலாபமும் அடைந்து வந்தனர்.

ஆரம்பத்திலே அக் கும்பினியார் தங்களது வர்த்தகத்திலேயே கண்ணாயிருந்தனர்; தென்னாட்டிலே திருப்பதிக்கு அடுத்த **சந்திரகிரி** நாட்டின் அரசனை அண்டி நின்று, சென்னைப் பக்கத்திலே வாணிபம் செய்ய இடம் பெற்றனர்.

இங்கிருந்து மிளகு, சுக்கு, வாசனைத் திரவியங்கள், ஜவுளி இவற்றை மலிவான விலைக்கு வாங்கி, இங்கிலாந்துக்கு அனுப்பியதில் அவர்களுக்கு ஏராளமான வருவாய் கிடைத்தது. கிடைக்கவே இத் தேசத்தில் ஆங்காங்கே அவர்கள் பண்டகசாலை கொண்டனர்; அவற்றைக் காவல் புரிய ஆட்களையும் அமர்த்திக் கொண்டனர்.

மொகலாய வல்லரசு நிலையாக இருந்த வரையில் அக் கும்பினியார் நல்ல பிள்ளைகளாகவே நடந்து வந்தனர். அந்த மொகலாய வமிசத்தில் வந்த **ஔரங்கசீப்** என்னும் சக்கரவர்த்தியோ மதப்பற்று மிகுந்து இத்தேச மக்களை இலேசாக எண்ணினார் ; முகம்மதிய மதத்தில் சேராதவர்களை ஆள் வரி கொடுக்கவேண்டும் என்று கட்டாயம் செய்தார்.

அது கண்டு வீர மரபினரான இரஜபுத்திரர் ஒரு பக்கம் பொங்கியெழுந்தனர். மராட்டிய வீரரான **சிவாஜி** என்பார் சீறி எழுந்து, தனியரசு ஒன்று கண்டு, அந்த வல்லரசை எப்போதும் வாட்டி நின்றார். மற்றொரு பக்கத்திலோ **சீக்கியர்** என்போரும் சினந்து எழுந்து, அந்த அரசைத் தாக்கிவந்தனர். அதனால் அந்த அரசு ஆண்மை இழந்து நிலைகுலைந்தது.



ஔரங்கசீபுக்குப் பின் மொகலாய வல்லரசு சின்னாபின்னம் ஆகிவிட்டது. அதற்கு உட்பட்டிருந்த சிற்றரசர், தளபதிகள் முதலியோர் தனியரசு கொண்டுவிட்டனர். அக் காலத்தில் நமது தமிழ்நாடு அந்த அரசுக்கு அடங்கியிருந்தது. ஆர்க்காட்டு நவாப் என்பவர் நமது தமிழகத்திலே அதன் தலைவராக இருந்து வந்தார்.

அச் சமயம் தமிழகத்தில் இருந்த சிற்றரசரும் ஜமீன்தார்களும் அந்நவாபுக்குக் காணிக்கை செலுத்தி வந்தனர். இதற்கு இடையில் கும்பினியாரின் வர்த்தகம் வளர்ந்து வந்தது. அத்துடன் அவர்களின் ஆசையும் பெருகியெழுந்தது. எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பது ஒரு பழமொழி.

அவ்வாறே மொகலாய வல்லரசின் குலைவைக் கண்டு, கொஞ்சம் கொஞ்சமாக நாட்டைக் கட்டியாள வேண்டும் என்று அக் கும்பினியர் கருதினர் ; வர்த்தகத்தைத் தொடர்ந்து தங்களது கிறிஸ்தவ மதத்தை இங்கே பரப்பி வந்தனர்; இங்குள்ள சிற்றரசரின் சச்சரவில் தலையிட்டுச் சிறிது சிறிதாக மண் சேர்க்கவும் முனைந்தனர் ; நாட்டின் தொழில்களையும் கொஞ்சங் கொஞ்சமாக நசுக்கி வந்தனர்.

உதாரணமாக இத் தேசத்திலே வேளாண்மைக்கு அடுத்தபடி பிரசித்தி பெற்ற தொழில் நெசவாம். இத் தேசத்துக்கு வேண்டிய ஆடைகள் எல்லாம் இங்கே நெசவாயின. மிஞ்சிய ஆடைகளை அயல் நாடுகளுக்குக் கப்பல் கப்பலாகவும் நம்மவர் அனுப்பி வந்தனர்; அத் துறையில் இலட்சக் கணக்கிலே இலாபமும் அடைந்து வந்தனர்.

1803-ம் வருஷம் இங்கிலாந்திலிருந்து இங்கே இறக்குமதியான துணியின் மதிப்பு மூன்றே இலட்சம் ரூபாய் !. 1829-ம் வருஷத்திலே 30 லட்சம் ரூபாய் ! 1929-ம் வருஷத்திலோ எழுபத்தி இரண்டு கோடி ரூபாய் ஆகும் !

பாலாவியும் பாம்புரியும் போன்ற மெல்லிய உடைகளை ஏராளமாக வெளிநாடுகளுக்கு இந்தியா அனுப்பி வந்திருக்க, ஆங்கிலக் கும்பினியாரின் மாயச் சூழ்ச்சியினால் அந் நெசவுத் தொழில் இங்கே அடியோடு அழிந்து மறைந்து போனது ஒருபுறம் இருக்கட்டும். மக்கள் தங்களது உடலை மூடிக்கொள்வதற்குரிய ஆடைக்கும் இங்கிலாந்தின் கையை எதிர்பார்த்து நிற்க நேர்ந்துவிட்டது.

தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் செய்து வந்த சீமான் தனது உடைமையெல்லாம் இழந்து, தட்டுப் பிச்சை எடுக்க நேர்ந்த கதையாக முடிந்தது நமது நிலைமை. நெசவுத் தொழில் மட்டும் அன்று, எல்லாத் தொழில்களும் அவ்வாறே அழிந்து போயின. அதனால் இத் தேசமக்கள் வயிறு நிரம்பக் கஞ்சி குடிக்கவும் வகையின்றி, வறுமை நோய்க்கு ஆளாகி, வாடி வதங்கி வந்தனர்.

மழைக்கு ஒதுங்க இடம் கொடுத்தால், மனைக்கே வழக்குத் தொடுத்தான் என்பதுபோல் கும்பினியார் நடந்து வந்தது வியப்பாயிருக்கும்.

## 4. பாளையப் போர்

**ஆங்கிலேயரைப் போலவே பிரெஞ்சுக்காரரும் வாணிபம்** செய்து பெரும் பணம் திரட்ட இங்கே வந்திருந்தனர். தேசம் குலைந்து கிடப்பதைக் கண்டு, பிரெஞ்சுக்காரருக்கும் இங்கே நாடுகொள்ள ஆசை எழுந்தது. அவர்களின் தலைவனாக இங்கே இருந்தவர் **டூப்ளே** எனப்படுவார்.

ஆற்காட்டு நவாபுப் பதவிக்குப் போட்டி ஏற்பட்டது. ஒரு பக்கம் பிரெஞ்சுக்காரர் சேர்ந்து கொண்டனர். மற்றொரு பக்கத்தைச் சேர்ந்த **முகம்மது அலி** என்பவரை ஆங்கிலக் கும்பினியார் சார்ந்து நின்றனர். அப்போது முகம்மது அலிக்கு ஏராளமான கடன் கொடுத்து அவரைத் தம் வசம் ஆக்கிக் கொண்டனர் அக் கும்பினியார்.

அம் முகம்மது அலி பெருங் கடனாளியாகவே, தமது அதிகாரத்தையும் உரிமையையும் அக் கும்பினியாரிடம் ஒப்படைத்தார். உடனே தமிழ் மக்களிடமிருந்து வரி வசூலிக்க அக் கும்பினியார் முற்பட்டனர். நவாபின் ஆட்சியைக் கண்டு புழுங்கி நின்ற தமிழ் மக்களும், ஜமீன்தார்களும் ஆத்திரம் மிகுந்து அவரைப் போக்கி விட அருமுயற்சி செய்து வந்தனர்.

அதனால், தமிழகத்திலே கொந்தளிப்பு மூண்டது. அது பாளையக்காரரின் போராக முற்றியது. அந்நிலையில் கும்பினியார் அரசுரிமை கொண்டது கண்டு, தமிழகப் பாளையக்காரர் பதைத்து எழுந்தனர். அச் சமயம் திருநெல்வேலிச் சீமையின் பாளையக்காரரில் ஒருவர் **கட்ட பொம்மு** எனப்படுவார். இவர் நவாபுக்கு வரி கட்டியது கிடையாது.

எனவே கும்பினியாருக்கு வரி கட்ட இவர் ஒப்பவில்லை; வெகுண்டெழுந்து போருக்கு ஆயத்தமானுர். அவ்வேளை கும்பினியாரை நோக்கி இவர் கூறியது வருமாறு :

வானம் பொழியுது, பூமி விளையுது
கும்பினிக்கு ஏது தீர்வைப் பணம்?
தானம் தெரியாமல் வந்து தலையிட்டால்
மானம் அழிந்து மடிந்திடுவீர்!

வங்காளம், டில்லி, வடகாசி எங்குமே
மங்காமலே திறை கொண்டாலும்,
இங்கு ஆளும் சிங்கம் ஒன்று உண்டு என எண்ணுமல்
ஏறி வரினே இடறு ஆகும்!

நாட்டில் சுதந்தரம் இல்லை என்ருல், அது
கோட்டித்தனமான வாழ்க்கை அன்ருே?
வீட்டில் சுதந்தரம் இல்லாமல் வந்த நீர்
வேறே சுதந்தரம் வேண்டுகிறீர்!

கண்ணை இமை காக்கும் காரியம் போலவே
மண்ணை நான் மன்னவன் காத்து வாரேன்,
பெண்ணை இடைகேட்கும் பேயரைப் போலவே
பேராசை கொண்டு பிதற்றுகிறீர்!

அவ்விதம் இவர் வீரம் பேசி, நாட்டு மக்களை எல்லாம் தட்டி எழுப்பினுர்; கும்பினியாரின் ஆட்சியினுல் நேர்ந்த கொடுமைகளையும் எடுத்து உரைத்தார்; தேசத் தொழில்கள் எல்லாவற்றையும் அவர்கள் அழித்து விட்டதனுல், இங்கே வாழ்வில்லாச் சங்கடம் நிரம்பி நிற்பதையும் விளங்க வைத்தார்.



"இந் நாளிலே நாம் குடிக்கும் புட்டிப்பால், உடுக்கும் மல்லாடை, எரிக்கும் விளக்கு, எழுதும் பேனு, ஏறும் வண்டி, படுக்கும் கட்டில், அணியும் கடிகாரம், தைக்கும் ஊசி, ஆடும் பந்து முதலியவை பெற, அவர்களின் கையை எதிர்நோக்கி ஏமாந்து நிற்கின்ருேம்" என்றும் இவர் சுட்டிச் சொன்னுர்.

பலரும் அதுகேட்டு, இவருக்குத் துணையாக நின்றனர். பாளையப் போர் ஓர் ஐம்பது வருஷம் நடந்தது என்ருல், கட்ட பொம்முவுடன் நடந்த போரோ பத்தாண்டு வரையில் நீண்டது. பாளையக்காரரில் பலரும் இவருக்குப் பேராதரவு தந்தனர். தரவே சண்டை கன கடுமையாக நடந்தது.

அதில் கும்பினிப் படைகள் குலைந்து ஓடின. அச்சமயம் **எட்டையாபுர** ஜமீன்தாரும் **புதுக்கோட்டைத்** தொண்டைமானும் கும்பினிக்கு உடந்தையாக இருந்தனர்; வஞ்சனை வழியில் இவரைக் காட்டிக் கொடுக்கவும் பெரு முயற்சி செய்தனர். முதலில் அம் முயற்சி பலிக்கவில்லை.

முடிவிலே, புதுக்கோட்டைத் தொண்டைமான் இவரைக் காட்டிக் கொடுத்தான். அதனுல் இவரை அவர்கள் சிறைசெய்து, **கயத்தாற்**றிலே தூக்குப் போட்டு விட்டனர்; அவரது நகரையும் கோட்டையையும் இடித்துத் தள்ளி அழித்து ஒழித்தனர்; சுற்றத்தாரையும் சிறையில் போட்டனர்.

சிறிது நாள் சென்றதும், இவரது தம்பி **ஊமைத்துரை** என்பார் சிவகங்கை ஜமீன்தாரான **மருது சோதரரின்** துணைகொண்டு, கும்பினியை நெடுநாள் கலக்கி வந்தார். முடிவில் வஞ்சனையும் துரோகமும்

விளைந்தமை கண்டு, வெறுப்பு மிகுந்து, துறவு பூண்டு கானகம் போய்விட்டார்.

அப்பால் தமிழகத்தில் இருந்த பாளையக்காரரின் கோட்டை கொத்தளங்களை யெல்லாம் கும்பினியார் இடித்துத் தள்ளினர்; ஜமீன்தார்களின் சேனைகளைக் கலைத்தனர்; ஆயுதங்களைப் பறித்தனர்; ஒருவரும் ஆயுதம் தரிக்கக் கூடாது என்று ஆணையிட்டனர்; இவ்விதமெல்லாம் அட்டகாசம் செய்து மக்களிடையே திகிலை ஊட்டினர்.

ஆனாலும் மக்களிடம் மூண்டெழுந்த மனக் கொதிப்போ முற்றிலும் அடங்கிவிடவில்லை! சுதந்திர உணர்ச்சியும் சாய்ந்துவிடவில்லை! நீறுபூத்த நெருப்பே போல் மக்கள் இருந்து வந்தனர். எனவே சுதந்திரப் போர் கருதி, முதன் முதல் போர் முரசு கொட்டிய பெருமை நமது தமிழகத்தையே சாரும்.

# 5. வேலுத் தம்பியின் வீருப்பு

**கும்பினியாரின் மண்ணாசை கண்டு, மைசூர் சுல்தான்** ஹைதர் அலி என்பவர் கொதித்து எழுந்தார். தென் இந்தியாவிலிருந்து கும்பினியாரைத் தொலைத்து விடவேண்டும் என்பதே அவர் கருத்தாம். அதனால் அவருக்கும் கும்பினியாருக்கும் இடையே நெடுநாள் பற்பல சண்டைகள் நடந்தன.

ஹைதர் அலிக்குப் பின் அவரது மைந்தரான **திப்பு சுல்தானும்** அக் கும்பினியின் மீது போர் தொடுத்து நின்றார். எத்தனையோ போராட்டங்கள் நிகழ்ந்தன. பல தடவைகளில் கும்பினிப் படைகள் குலைந்து சிதறிப் போயின. ஆயினும் சண்டை ஓயவில்லை.

அப்போது, திருவாங்கூர் சமஸ்தான வேந்தருக்கும் ஆங்கிலக் கும்பினியாருக்கும் வர்த்தகத் துறையில் தொடர்பும் உறவும் அதிகம். ஆதலின் கும்பினிக்கு அக்கொற்றவர் உதவி புரிய நேர்ந்தது. அது கண்டு திருவாங்கூர் மீது மைசூர் சுல்தானுக்குக் கோபமும் தாபமும் பொங்கின.

மைசூர்ப் படைஞர் திருவாங்கூரைப் பன்முறை தாக்கினர். அச்சமயம் கும்பினியார் தமது படை வகுப்பை அனுப்பி உதவி புரிந்தனர். அப் படைக்கு ஆன செலவை அவர் ஏற்றுக் கொண்டார். கும்பினியாரோ மேலும் மேலும் பணம் கேட்டு வந்தனர். இரு நிதி கொடுக்க அவரிடம் வகையில்லை.

கும்பினியாரோ அச் சமஸ்தானத்திலே காவல் படைகளை நிறுத்தினர்; அவற்றிற்கு உரிய செலவை

யும் கேட்டனர்; அத்துடன் சமஸ்தான நிர்வாகத்திலும் தலையிட்டனர். உதாரணமாக, அநந்த பத்மநாப ஆலயத்துக்கு இவ்வளவு செலவு ஏன்? அன்ன சத்திரங்கள் எதற்கு? என்று கூறினர்.

அப்போது திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவானாக இருந்தவர் **வேலுத்தம்பி** என்பவர். கும்பினியின் போக்கைக் கண்டு அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. கடவுளின் தலையில் கை வைக்கவும் கும்பினியார் கருதுகின்றனரே என்று அவர் கறுவி எழுந்தார்; கொச்சி திவானையும் துணை கொண்டார்.

அந்த இரண்டு சமஸ்தானங்களின் படைகளும் போருக்கு எழுந்தன. அதனால் அங்கே கும்பினியின் நலபலன்கள் நாசமாயின. கும்பினி அதிகாரிகளில் பலரும் கொலையுண்டனர். கும்பினியின் காற்றே திருவாங்கூரில் வீசா வண்ணம் அவர் செய்து விட்டார். பின்பு கும்பினிக்குத் துணைப்படைகள் வந்து சேர்ந்தன.

அப் படைகள் திருவாங்கூரின் கிராமங்களிலே புகுந்து, கொடுமை இழைத்து வந்தன. அது கண்டு சமஸ்தான மக்களிலே பலரும் பயந்து வேலுத்தம்பியைக் கைவிடக் கருதினர். திவான் அது அறிந்தும், தளரவில்லை; எங்கும் கும்பினியாரைத் தாக்கி வந்தார்.

ஆயினும் நாளுக்குநாள் சமஸ்தான மக்களின் பக்கபலம் குறைந்து வந்தது. அதனால் அவரது படை வலியும் குன்றி வரலாயிற்று. இதற்கு இடையில் கும்பினியார் திருவனந்தபுரத்தில் புகுந்து, அனந்த பத்மநாப ஆலயத்தை அழித்து விடுவதாக அச்சுறுத்தினர். அரசர் அது கண்டு அவர்களுடன் விதியின்றி ஓர் உடன்பாடு கொள்ள நேர்ந்தது.



அரசரும் கைவிட்டமை கண்டு திவான் திடுக்கிட்டார்; ஆயினும் கும்பினிக்குப் பணிய மனம் ஒப்பவில்லை; நாட்டினூடே புகுந்து படை திரட்டவே முனைந்து வந்தார். அவரைப் பிடித்துத் தந்தால், நிரம்ப வெகுமதி கிடைக்கும் என்று கும்பினியார் பறை சாற்றினர்.

ஒருநாள் துரோகியரும் கும்பினி வீரரும் அவரைக் கூப்பிடு தூரத்தில் குறுகி விட்டனர். உடனே அவர் அருகே இருந்த **பகவதி**யின் கோயிலில் புகுந்து தேவியை வணங்கி, "அன்னாய்! நமது தர்மத்தை அழித்து வரும் கும்பினியிடம் சிறைப்பட எனக்கு மனமில்லை. எனது தலை உனக்கே அர்ப்பணம்," என்று கூறி, உடைவாளால் தனது தலையைச் சீவிக் கொண்டார்.

பின்பு கும்பினியார் அத்தலையை எடுத்துச்சென்று, திருவனந்தபுரத்திலே ஓரிடத்தில் உயர்ந்த கம்பிலே செருகி வைத்து, மக்களுக்கு அச்சம் ஊட்டினர்; அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர்; அவருக்கு உதவி புரிந்த பலரையும் உயிர் வாங்கினர்.

அவ்விதமெல்லாம் கும்பினியார் பயங்கரம் விளைத்தும், மக்களில் பலரோ மனம் மறுகியே நின்றனர். சமயம் பார்த்துப் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணம் மறையவில்லை.

# 6. வேலூரில் கலகம்

நயவஞ்சகமும் பெருஞ் சூழ்ச்சியும் கையாண்டு, கும்பினியார் இங்கே மண்சேர்த்து வந்தனர். அதுகண்டு மைசூர் சுல்தான்கள் மண்டியெழுந்து நாற்பது வருஷ காலம் அவர்களுடன் போராடி நின்றனர். முடிவிலே திப்பு சுல்தானும் வீர சுவர்க்கம் புகுந்தார். அவரது மைந்தரையும் குடும்பத்தாரில் பிறரையும் வேலூரிலே கும்பினியார் காவலில் வைத்திருந்தனர்.

தமிழகத்திலே தஞ்சைச் சீமை ஒரு தனியரசாக இருந்தது. அதனை மராட்டிய மன்னர் ஆண்டுவந்தனர். கடைசி அரசன் பிள்ளை இல்லாமல் இறந்து போனான். அவனது உறவினர் இருவர் அந்த அரசுக்காக வாதாடினர். அந்த இருவருக்கும் பெருந்தொகை கொடுத்துவிட்டு, அந் நாட்டைக் கும்பினியார் கட்டிக்கொண்டனர். தஞ்சை அரசு அவ்விதம் மறைந்தது.

கிடைத்த நாட்டைக் கட்டிக் காக்கவும், மேலும் மேலும் சண்டை போடவும், கும்பினியாருக்குச் சேனை வேண்டும் அல்லவா? அதுபற்றி அவர்கள் தங்களது சேனையைப் பெருக்கி வந்தனர். பிழைக்க வேறுவழி இல்லாமல் போனதனால், இந்துக்களும் முகம்மதியர்களும் விதியின்றி அச்சேனையில் சேவித்து வந்தனர். ஆயினும் தேசப்பற்றும் மதப்பற்றும் அச் சிப்பாய்களிடம் மறைந்து விடவில்லை.

தேசத்திலே ஆங்காங்கு இருந்த அரசர்களையும், சீமான்களையும் கும்பினியார் அழித்து வருதல் கண்டு, அச் சிப்பாய்களுக்கு மனத்தூடே ஆத்திரம் உண்டு. அந்நிலையில் ஆங்கில தளபதிகள் பலரும் சமயம் வாய்த்த



போதெல்லாம் அவர்களிடையே இயேசு மத போதமும் புரிந்து வந்தனர். இதனால் அந்த ஆத்திரம் மிகவும் பெருகலாயிற்று.

அந்நாளிலே முகம்மதிய சிப்பாய்கள் நீண்ட தாடி கொள்வர். இந்து சிப்பாய்களோ நீண்ட மீசையும், நெற்றியில் திலகமும், காதில் கடுக்கனும் கொள்வது உண்டு. "நீண்ட தாடி மீசை கூடா; நெற்றியிலே திலகம் தரித்தல் ஆகாது. தலையிலே தொப்பி தரிக்கவேண்டும்," என்று அவர்களுக்கு ஆணை பிறந்தது.

வடஆற்காடு ஜில்லாவிலே வேலூர் ஒரு முக்கிய நகரம். அங்கே பழமையான கோட்டையும் கொத்தளமும் உண்டு. அக் கோட்டையிலே காவலில் கிடந்த திப்புவின் குடும்பத்தார் அச் சிப்பாய்களைக் குத்திப் பேசிக் கிளப்பிவிட்டனர். உடனே தேசப்பற்றும் மதப்பற்றும் பொங்கியெழ, அச் சிப்பாய்கள் கலகமாகக் கிளம்பினார்கள்.

உடனே அந் நகரம் ஒரே இரணகளம் ஆயிற்று. ஆங்கிருந்த கும்பினியின் தலங்கள் அழிந்தன. கும்பினி அதிகாரிகளும் ஆவி யிழந்தார்கள். கோட்டைமீது பறந்துநின்ற கும்பினியின் கொடி பறியுண்டது. மைசூரின் சுல்தானது கொடி பறக்கலாயிற்று.

வேலூர்க் கோட்டையைக் கைப்பற்றியபின் வேறு இடங்களுக்குச் சென்று வீரக்கொடி தூக்க அச்சிப்பாய்கள் எண்ணியிருந்தார்கள். அவர்களுக்குத் துணை கிட்டும் முன்னம், சென்னையிலிருந்து கும்பினிப்படைகள் திரண்டு வந்துவிட்டன. சிப்பாய்களுக்கும் அப்படைகளுக்கும் இடையே கடும்போர் மூண்டது. தொகை

யில் மிகவும் சிறுத்த சிப்பாய்கள் முடிவிலே முறியுண்டார்கள்.

கும்பினி அதிகாரிகள் அச் சிப்பாய்களின் தலைவர்களைக் கொன்று போட்டனர்; அவர்களது உடைமைகளைப் பறித்துவிட்டனர்; பிறரை நீண்டகாலம் சிறையில் போட்டு வைத்தனர்; திப்புவின் குடும்பத்தை அங்கிருந்து கல்கத்தாவுக்கு மாற்றினர். வேலூர்க் கலகம் அவ்விதம் தீர்ந்தது.

ஆனாலும் கும்பினியாரின் கொடுமை கண்டும், மண்ணாசை பார்த்தும், நாட்டு மக்களின் மனம் புழுங்கா நின்றது. விரைவிலே தேசமெங்கும் கொதிப்பு மூளும் என்னும் பேச்சும் எங்கும் செவிடுபட்டது. பிற இடங்களிலிருந்த சிப்பாய்களும் வேலூரின் நிகழ்ச்சி கேட்டு, அக் கும்பினியின்மீது வெறுப்பு மிகுந்து நின்றனர்.

சென்னை, பம்பாய், வங்காள மாகாணங்களில் கும்பினியார் ஆட்சிகொண்டும் என்ன? 'அங்கங்கே கவர்னர் என்னும் அதிகாரி இருந்தும் என்ன? மக்களின் மனக்கோளை அக் கவர்னர்கள் மதிக்கவில்லை; தமது ஆட்சியைப் பெருக்குவதிலும், தேச வளத்தைச் சுரண்டுவதிலுமே கண்ணாக இருந்துவந்தனர்.

## 7. மராட்டியரின் பெரு முயற்சி

தேசம் முழுவதற்கும் சுய அரசு காணவேண்டும் என்பதே வீர சிவாஜியின் உறுதியாம். அதுபற்றியே அவர் மராட்டிய அரசை நிறுவினார்; மொகலாய வல்லரசையும் சிதைத்து வந்தார். அவருக்குப் பின்வந்த அரசரும் தளகர்த்தரும் மராட்டிய அரசை மேலும் மேலும் வளர்த்து, மொகலாய அரசை எங்கும் வதைத்து வந்தனர்.

ஔரங்கசீபுக்குப்பின் டில்லியிலே பட்டஞ் சூடிய மொகலாய மன்னர் பெயரளவில் மன்னராக இருந்து வந்தனரேயன்றி வலிமையுடன் இருக்கவில்லை. அந்நிலையில் தேசமெங்கும் மராட்டியரின் ஆண்மை ஓங்கி வந்தது. அந்த ஆண்மை மொகலாய மன்னவரையும் தாக்கியது. அம்மன்னவர் மராட்டியருக்கு அஞ்சிக் கிடந்தனர்.

அப்போது, மைசூர் சுல்தான்களையும், ஹைதராபாத் நிஜாமையும் தம்முடன் சேருமாறு அம் மராட்டியர் அழைத்தும், பலிக்கவில்லை. ஆதலினால், தனியே நின்று மொகலாய அரசைச் சிதைத்து, எங்கும் சுய அரசை நிலைநாட்ட மராட்டியர் மிகவும் முயன்று வருகையில் கும்பினியார் குறுக்கிட்டனர்.

குறுக்கிடவே, பாரத பூமியில் மராட்டிய அரசு ஓங்குவதா? அல்லது கும்பினியின் அரசு நிலைப்பதா? என்று இருவரும் நெடுநாள் சண்டை செய்து வந்தனர். மராட்டியரில் பற்பல பிரிவுகள் இருந்தாலும், கும்பினியைத் தொலைப்பதில் எல்லாரும் ஒருமுகமாக முனைந்து நின்றனர்.

# 8. வங்கத்தில் கொதிப்பு

**மொகலாய வல்லரசின் பிரதிநிதியாக நம் தமிழகத்திலே** ஆர்க்காட்டு நவாப் இருந்ததே போல், வங்காளத்திலும் நவாப் ஒருவர் இருந்தார். அங்கே கும்பினியார் வர்த்தக உரிமையும் சலுகையும் பெற்றிருந்தனர். ஆயினும் வரம்பு மீறி அவற்றை அடைய விரும்பினர் அக்கும்பினியார்.

வங்காள நவாபான சிராஜுதௌலன் என்பவர் அதற்கு ஒப்பவில்லை. அதனால் அவரை அகற்றிவிடக் கும்பினியார் முயன்றனர். **பிளாஸி** என்னும் இடத்தில் பெரும் போர் மூண்டது. சண்டையின் நடுவே நவாபின் தளபதி துரோகம் புரிந்து கும்பினியுடன் சேர்ந்து கொண்டான்.

1757-ம் வருஷம் நடந்த பிளாஸி யுத்தத்தில் அந் நவாப் அழிந்து போனான். அப்போது கும்பினியார் செய்த வஞ்சனையும் சூதும் கண்டு, மக்களுக்கு மனக் கொதிப்பு பெருகியது. கும்பினியார் அத் தளபதியை நவாபாக ஆக்கி, நாடும் இலாபமும் அடைந்தனர்; கொள்ளை கொள்ளையாக அவர்களுக்குப் பொருள் சேர்ந்தது.

இங்கே ஆர்க்காட்டு நவாபைப் போக்கியது போல் வங்காள நவாபையும் கும்பினியார் போக்கி விட்டனர்; பின்பு வங்காளம், பீகார், ஒரிஸா இந்த மாகாணங்களின் அதிகார உரிமையும் அடைந்தனர். அடையவே, வங்கத்தின் தொழில்கள் நசுக்குண்டன. நாளடைவில் அம் மாகாணமும் வறுமைக்கும் பஞ்சத்துக்கும் ஆளாகி வருந்திற்று.



அப்போது டில்லியிலிருந்த மொகலாய மன்னவன் மராட்டியருக்கு அஞ்சிக் கிடந்ததைக் கண்டு கும்பினியார் பொறுக்கவில்லை. மராட்டியரின் செல்வாக்கு வளரக்கூடாது என்பதே அவர்களின் கருத்து. ஆதலின் அவனுக்கு ஆசை வார்த்தை காட்டித் தம் பக்கம் இழுத்துக் கொண்டனர்.

அதன் பலனாக வங்காள அரசுரிமையை அவன் கும்பினியாருக்கு அளித்தான்; இன்னும் சில நாடுகளையும் கொடுத்தான். இவ்விதம் வங்கத்தில் கும்பினியின் ஆட்சி பெருகியது. பெருகவே பணமுடை ஏற்பட்டது. உடனே சீமான்களிடமிருந்து பல வழியிலும் பணத்தைப் பறித்து முட்டுப்பாட்டைப் போக்கிக் கொண்டனர்.

கும்பினி ஆட்சியினால் சிற்றரசர் மறைந்து, சீமான்களும் ஒழிந்து, தொழில்கள் குன்றி வந்தமையால், மக்களிடமோ வாழ்வில்லாச் சங்கடம் பெருகிற்று; கும்பினியின் மீது கடுப்பும் வெறுப்பும் அதிகரித்தன. அந் நிலையில் பிண்டாரிகள் என்போர் கிளம்பினர்.

முன்னம் சிற்றரசரிடமும் சீமான்களிடமும் சேவித்து நின்று, அப்பால் பிழைக்க வழியில்லாது போனவர்களெல்லாம் ஒரு கூட்டமாகச் சேர்ந்தனர். அவர்களில் முகம்மதியர், இந்துக்கள் ஆகிய இரு சாராரும் இருந்தனர். அவர்களின் தொகை ஆயிரக் கணக்காம்.

கும்பினியை ஒழித்துக் கட்டுவது என்று அவர்கள் போர்க்கோலம் பூண்டனர்; கும்பினிக்குச் சொந்தமான இடங்களைத் தாக்கிக் கொள்ளை அடித்தனர். ஆதலின்

மராட்டியரின் ஒருமை கண்டு கும்பினியார் ஆற்றவில்லை; ஆதலின் அவர்களுக்குள்ளே பிளவுகளை உண்டு பண்ணி வந்தனர். ஊரை இரண்டு பண்ணும் தந்திரத்தில் கும்பினியார் கைதேர்ந்தவர்கள், ஆகவே அத் துறையிலே அவர்கள் மிக்க பலனடைய முடிந்தது.

மராட்டியருக்குள் பிளவை உண்டு பண்ணியதும், அவர்களின் தலைவர்களிலே சிற்சிலரிடம் கும்பினியார் நட்புரிமை கொண்டனர்; நல் உறவினர்போல் நடித்தும் அந்நேசத்தை வளர்த்து வந்தனர். காட்டுப் பசு நம்மை நக்கும் பொழுது நமக்கு இன்பம் விளையினும், முடிவில் நாசமே விளையும் என்பது போல், கும்பினியின் நட்பு இருந்து வந்ததை அத் தலைவர்கள் நன்கு உணர்ந்து கொள்ளவில்லை.

ஆதலினால் கும்பினியார் தனித் தனியே அத் தலைவர்களை ஜெயித்தும் பிரித்தும் அச்சுறுத்தியும் வர, மராட்டியரின் பெரு முயற்சியும் போர் ஆண்மையும் சிதறிவிட்டன. என்றாலும் அவர்களுடனும் ஒரு முப்பது வருஷ காலம் கும்பினியார் பெரும் போர் புரிய நேர்ந்தது. முடிவில் கும்பினியாரே ஒருவாறு வெற்றி கண்டனர்.

அதன் விளைவாக மராட்டியத் தலைவர்கள் ஆங்காங்கே சிறுசிறு நாடுகளின் அதிபர்களாக வாழ்ந்து வர நேர்ந்தது. அவர்களுக்கும் கும்பினிக்கும் இடையே மாயமான நேச உடன்பாடும் உண்டாயிற்று. வீர சிவாஜியின் வழிவந்த ஒருவர் அம் மராட்டிய சமூகத்தின் மன்னவரென்று பெயரளவில் விளங்கி வந்தார்.

அத்தகைய மராட்டிய மன்னவரின் மந்திரி **பேஷ்வா** என்ற பட்டத்துடன் மராட்டிய அரசை ஆண்டு வந்தார். சிறுசிறு நாடுகளின் அதிபர்களான மராட்டியத் தலைவர்களும் ஒப்புக்கு அந்தப் பேஷ்வாவிடம் பக்தி விசுவாசம் காட்டி வந்தனர். இதுவும் கும்பினிக்குப் பிடிக்கவில்லை.



ஆதலினால், அப் பேஷ்வாவுடன் கும்பினியார் போருக்கு எழுந்தனர். அதில் அப் பேஷ்வா தோற்றுப் போனார். போகவே அவரது அரசைக் கும்பினியார் கட்டிக் கொண்டனர்; அதற்கு ஈடாக அவருக்கும் அவர் சந்ததிக்கும் ஆண்டுதோறும் எட்டு லட்சம் ரூபாய் கொடுத்துவர இசைந்தனர். அவ்விதம் பேஷ்வாக்கள் மறைந்து விடவே, மராட்டியத் தலைவர்கள் அக் கும்பினியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டு அடங்கி வாழ்ந்து வரத் தலைப்பட்டனர்.

மொகலாய வல்லரசின் சிதைவினால், பஞ்சநதப் பிரதேசத்திலே சீக்கியர் என்போர் தனியரசு கொண்டு குலவினர். பிரித்து ஆளும் தந்திரத்தையும், மித்திர பேதத்தையும் கடைப் பிடித்து, அச் சீக்கியரின் ஒற்றுமையையும் கும்பினியார் குலைத்து வந்தனர். அவர்களுடனும் கும்பினியார் நீண்ட நாள் கொடுஞ் சண்டை போட நேர்ந்தது. முடிவில் கும்பினிக்கே வெற்றி கிட்ட, அச் சீக்கியரும் விதியின்றி அடங்கி வாழ்ந்து வர மனம் ஒப்பினர்.

அவர்களைக் கொள்ளைக் கூட்டத்தார், அல்லது பிண்டாரிகள் என்பர் கும்பினியார். உண்மையில் அவர்களா சுதந்திர வீரரே!

அவ் வீரருடன் கும்பினியார் நெடுநாள் சண்டை போட்டனர்; கடைசியில் ஒரு சிறிது ஜெயம் அடைந்தனர்; உடனே அவ் வீரரின் தலைவர்களுக்கு மானியம் அளித்தனர். அதனால் அத் தலைவர்கள் ஆறி நின்றனர். வீரர்களோ வயிரமே மிகுந்து காலம் பார்த்திருந்தனர்.

அவ்விதம் தேசமெங்கும் மக்களிடையே கொதிப்பும் கடுப்பும், வெறுப்பும் சலிப்பும் வளர்ந்து வந்தாலும் ஜெயம் உள்ள வரையில் பயம் இல்லை என்றே கும்பினியார் நடந்து வந்தனர். மண் சேர்த்தல் ஒன்றே அவர்களின் நோக்கமாக இருந்தது.

ஆதலினால் பிள்ளையில்லாது இறந்து போன சிற்றரசரின் நாடுகளையும் அவர்கள் கட்டிக் கொண்டார்கள்; சீமான்களின் சொத்து சுதந்தரங்களையும் அவ்விதமே பறித்து வந்தார்கள்; முன்னம் அரசரும் பிரபுக்களும் பலருக்கு அளித்திருந்த மானியங்களையும் பிடுங்கிப் பறித்து வந்தார்கள். அவ்வாறு மண் சேர்த்து வருகையில், பாரத பூமி யெங்கும் ஒரே கொந்தளிப்பு உதித்து எழுந்தது.

## 9. மன வெடிப்பு

**சுவர் வெடித்தால் சாந்து பூசிப் பழுது பார்த்து விடலாம்.** மனம் வெடித்தால் அதனை மாற்ற மருந்து உண்டோ? 1857-ம் ஆண்டிலே பாரத மக்களின் மனம் ஒரே வெடிப்புக் கொண்டது. உடனே அரசியல் பிரளயம் உண்டாயிற்று. அதன் விவரம் பார்ப்போம்.

இருபது இலட்சம் சதுர மைல் பரப்பு வாய்ந்த பாரத பூமியிலே மூன்றில் இரண்டு பங்கு கும்பினியின் ஆட்சிக்குள் அடங்கிவிட்ட பின்னர், வேளாண்மை வளரவில்லை. வர்த்தகத்துக்கு வழியில்லை. தொழிலுக்கோ கேடே விளைந்தது. அரசிலே வேலை பார்க்கலாம் என்றால், கூலி வேலையே கிட்டியது. வரியின் பளுவோ தாங்க முடியவில்லை. இந்தியருக்கு ஒரு நீதி; ஆங்கிலேயருக்கு ஒரு நீதி என்றும் இருந்தது.

மூன்றில் ஒரு பங்கான பூமியிலே சிறு சிறு இராஜ்யங்கள் மலிந்திருந்தன. அவற்றின் தொகை சுமார் அறுநூறு ஆகும். அவற்றின் அரசரோ, கும்பினியின் கைப் பொம்மைகளாக இருந்து வந்தனர். கும்பினியின் மனப்போக்கை மதித்தே அந்த அரசர் ஆட்சி நடத்த வேண்டும்.

சந்ததி யில்லாத அரசுகளைக் கும்பினியார் கட்டிக் கொண்டனர் அல்லவா? அது கண்டு தமது நாட்டுக்கும் அக்கதி நேருமோ என்று அந்த அரசர் அச்சம் மிகுந்தனர். நாட்டு மக்களும் நைந்து நிற்க நேர்ந்தது. கும்பினியார் இட்டதே சட்டம், செய்ததே தீர்ப்பு என்னும் நிலைதான் எங்கும்.

மராட்டியப் பேஷ்வா இறந்துபோனதும், ஆண்டு தோறும் அவருக்குக் கொடுத்து வந்தபடி தனக்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று அவர் மைந்தன் **நானு பத்மநாபன்** என்பார் வாதாடினுர். அவ்வாறே கொடுத்துவரக் கும்பினியார் கடமைப் பட்டிருந்தனர். ஆனுலும் அவ்விதம் நடக்க அவர்கள் ஒப்பவில்லை.

அதன்மேல் அவர் தமது தூதராக ஒரு முகம் மதியரை இங்கிலாந்துக்கு அனுப்பிக் கும்பினியின் மேலதிகாரிகளிடம் மன்ருடிப் பார்த்தார். அது பலிக்க வில்லை. அதனுல் அவர் மனம் ஒடிந்து மறுகினுர்; கும்பினியைக் கவிழ்க்க வேண்டும் என்றும் திட்ட மிட்டுவந்தார்; அதற்கு ஏற்ற காலத்தையும் கருதி நின்ருர்.

டில்லிமா நகரிலே பெயரளவில் மொகலாய சக்கர வர்த்தியாக இருந்துவந்தார் **பகதூர் ஷா** என்பார். நகரை விட்டு வெளியேறி, வேறு இடத்தில் வசிக்கவேண்டும் என்று அப் பகதூர் ஷாவுக்குக் கும்பினியார் அறிவித் தனர்; அவரது உரிமைகளையும் ஒடுக்க முயன்றனர். அது பற்றி அவர் தமது தூதராக **இராஜா இராம மோகன ராய்** என்பவரை இலண்டன் மாநகருக்கு அனுப்பி வாதாடினுர்; ஒன்றும் பலிக்கவில்லை. அத னுல் அவரும் மனம் புழுங்கிப் போருக்குரிய உபாயங் களை ஆராய்ந்து வந்தார்.

சுவீகார புத்திரனை ஒப்புக்கொள்ளாமல் அரசைப் பறித்துக் கொண்ட கும்பினியார் மீது ஜான்ஸி நாட் டின் இராணியான **இலட்சுமி தேவி**யும் சண்டைக்கு உரிய ஆயத்தங்களை யெல்லாம் தந்திரமாகச் செய்து வந்தாள். ஒன்று சிம்மாசனம், இன்றேல் சுடுகாடு



என்று அத்தேவி கூறியதைக் கேட்டு மக்கள் பலரும் மண்டி யெழவே விரும்பினர்.

இந்தியச் சிப்பாய்களைக் கொண்டே இந்தியா முழு வதையும் கும்பினியார் அடிமைப் படுத்தினர். ஆனு லும் ஆங்கில வீரருக்கே சம்பளம் அதிகம்! படிப் பண மும் மிகுதி! இந்திய வீரருக்கோ இரண்டும் மிகக் குறைவு. சலுகைகளும் கிடையா. இந்த ஏற்றத் தாழ்வு இந்தியரைப் புண்படுத்தியது.

வேலைக்கு எடுத்துக்கொள்ளும் பொழுது, இந்தியா வுக்குள்ளே சேவகம் செய்தால் போதும் என்று கும்பினியார் கூறி யிருந்தனர். ஆனுலும் பர்மா நாட் டின்மீது படையெடுக்க அக் கும்பினியார் கருதிய பொழுது, இந்தியச் சிப்பாய்கள் கடல் கடந்து வேற்று நாடு போக நேர்ந்தது. இது கண்டும் சிப்பாய்கள் பிணக்குக் கொண்டனர்.

அல்லாமலும் பன்றியின் கொழுப்பும், பசுவின் கொழுப்பும் பூசி ஒட்டப்பட்டிருந்த தோட்டாப் பொட்டலங்களைக் கையாளுகையில், இந்திய வீரர் பல்லால் கடித்து இழுத்தே அத் தோட்டாக்களின் மூடியை நீக்க வேண்டும். இது கண்டும் சிப்பாய்களின் மனத்திடையே சீற்றம் பொங்கி நின்றது.

கைம்பெண்கள் கடிமணங் கொள்ளச் சாதகமாக வும், பத்தினிப் பெண்கள் உடன் கட்டை ஏறுவதற்கு எதிராகவும், கும்பினியார் செய்திருந்த சட்டங்கள் பலருக்கும் கோபத்தை மூட்டின; கலக்கத்தையும் விளைத்தன.

# 10. யுத்த மூட்டம்

**வெடி மருந்து நிரம்பிய அறையைச் சுற்றி நெருப்பு எழுந்**ததே போல், மனக்கொதிப்பு மூண்டு கிடந்த மக்களைக் கிளப்பிவிட நானா சாகிபும் பகதூர் ஷாவும் முயற்சி செய்தனர். நானாவின் தூதர் இரகசியமாக இத்தேசம் எங்கும் சென்று, "சுதர்மம் சிதறுவதோ? சுயராஜ்யம் இன்றி நாம் சிறுமை அடைவதோ?" என்று மக்களிடமும் மன்னர்களிடமும் காதோடு ஓதி வந்தார்.

பகதூர் ஷாவின் சார்பாக எழுந்த அறிக்கையின் கருத்து பின்வருமாறு :-"ஹிந்து முகம்மதிய சோதரரே! விழித்து எழுக! வெகுண்டு போர் புரிக! சுயராஜ்யப் பேறு இல்லாமல் தவிக்கின்றோம். அதனைப் பறித்த கும்பினியை நாம் சும்மா விடுவதோ? கும்பினியின் கொடுமைகளோ அனந்தம். அவை போதா என்று நமது மதத்திலும் அவர்கள் கை வைக்கத் துணிந்தனர்.

"கும்பினியின் ஆட்சி ஒழிந்தாலன்றி நாம் சுக வாழ்வு, சுயராஜ்ய வாழ்வு, காண முடியாது. கீர்த்தி நிறைந்த ஹிந்துஸ்தானம் குன்றிக் கிடப்பதோ? நாம் அனைவரும் தர்ம யுத்தத்தில் குதித்தே ஆகவேண்டும். ஹிந்து முகம்மதிய சோதரரே! தோள் தட்டிக் கிளம்புங்கள். படுகளத்தில் பாயுங்கள். அகிலம் வல்ல ஆண்டவன் அருள் புரிவான்!"

சுதர்மம், சுயராஜ்யம், சுதேசம், சுதந்திரம், என்னும் சொற்கள் பலருக்கும் பரவசம் ஊட்டின. குழந்தைகளும் பூரிப்புக்கொண்டு, சுதந்திரக் கொடி தாங்கி, "நானாவுக்கு ஜே! பகதூர் ஷாவுக்கு ஜே!"



என்னும் கோஷங்கள் எழுப்பி நகரெங்கும் வீதிவலம் வந்தனர். கிழவரும் பெண்டிரும் அக்காட்சி கண்டு பிரமித்தனர்.

இதற்கிடையில் தேசத்திலே ஆங்காங்கு இருந்த பண்டிதர் பலரும் தேசத்தின் இழிநிலையை விரித்துரைக்கும் வகையில், வீரப் பாடல்கள் பாடி மக்களின் மனத்தே உணர்ச்சியை ஊட்டிவந்தனர். தேவாலயங்களிலே, தேர்த் திருநாட்களிலே, புண்ணியத் தலங்களிலே, பண்டிகைக் காலங்களிலே, மக்களிடையே தேசத்தைப் பற்றிய பேச்சுத்தான் நடக்கும்.

சோதிடமும் குறியும் சொல்லும் குறத்தியரும், கை ரேகை பார்க்கும் காரிகையரும், வனமூலிகை விற்கும் வனிதையரும் வீடுவீடாகச் செல்லும்பொழுது, கும்பினியின் கொடுமையைக் குறித்தே கூறுவர்; சுயராஜ்யமே வேண்டும் என்று வலியுறுத்துவர். தெருக்கூத்திலும், நாடக அரங்கிலும், சுதந்திர ஆவேசத்தை எழுப்பும் நிகழ்ச்சிகள் இடை இடையே தோன்றும்.

1757-ம் ஆண்டிலே நிகழ்ந்த பிளாஸி யுத்தம் கும்பினி ஆட்சிக்கு அடிப்படை ஆயிற்று. 1857-ம் ஆண்டிலோ நூறாவது ஆண்டு நிரம்புகையில், கும்பினியின் ஆட்சி கவிழும் என்னும் வார்த்தை கிராமந்தோறும் பரவா நின்றது. கருத்தில் கொண்ட காரியத்தைக் கண்டெடுக்க ஆங்காங்கு இரகசியச் சங்கங்கள் முளைத்தன.

மிகவும் பரந்து விரிந்த பாரத தேசத்திலே ஆங்காங்கு இராணுவ ஸ்தலங்கள், அதாவது படைவீடுகள் இருந்தன. அங்கெல்லாம் சிப்பாய்கள் நிரம்பி

யிருந்தனர். குறித்த காலத்தில் எல்லாரும் கிளம்ப வேண்டும் என்னும் கடிதங்கள் ஆயிரக் கணக்கில் எங்கும் சென்றன. அவை கண்டு கும்பினி அதிகாரிகளில் சிலர் ஐயுறவு கொண்டனர்.

ஓர் அதிகாரி அக்கடிதங்களில் ஒன்றை உடைத்துப் பார்த்தான்; அதில், ‘சோதர சிப்பாய்களே! நமது கையைக் கொண்டே நமது கண்ணைக் குத்துகின்றனர்,” என்று கண்டிருந்தது. அதனை அறிந்ததும், ‘அந்தோ! சிப்பாய்கள் ஒரு முகமாகத் திரளின் ஆங்கிலேயராகிய நாம் பெருங்கடலிலே ஒரு சிறு துளி ஆவோம்,” என்று கருதி நடுங்கினர்.

முக்கியமான நகரங்களின் சுவர்களிலே விளம்பரங்களும் தோன்றலாயின. “தேச மக்களே! மதாபிமானிகளே! எல்லாரும் ஒரு மனங் கொண்டு கிளம்புங்கள்! கிளம்பின், சுயராஜ்ய சித்தி பெறலாம்!” என்பனவே அவ் விளம்பரங்களின் வாசகமாம்.

“சுதந்திர மகாயுத்தம்—மதப் பாதுகாப்பான தர்மயுத்தம்—மூளப்போகிறது! அப்போரில் சாவோருக்கு சுவர்க்கம் நிச்சயம். வீரத் தியாக மூர்த்தி என்னும் புகழும் திண்ணம். கோழைகளுக்கு நரகமே கிட்டும். எனவே! நரகமா, சுவர்க்கமா? மக்களே! கண்டு கொள்க!” என்றும் சில விளம்பரங்கள் எழுந்தன.

கும்பினி அதிகாரிகளில் சிலர் அவற்றையெல்லாம் கூர்ந்து உணர்ந்தனர்; உணரவே பேராபத்து நேரப்போகிறது என்று பயங்கொண்டனர்; அதனைத் தவிர்க்கும் உபாயம் யாது, என்றும் சிந்தனை செய்தனர்.

# 11. முதல் மகாயுத்தம்

**புகைந்து கனிந்து வந்த நெருப்பு பற்றி எரிவதே போல்,** 1857-ஆம் ஆண்டிலே பாரத பூமியெங்கும் சுதந்திரத் தீ பற்றி எரிந்து கொழுந்து விட்டது. **மீரத்** என்னும் நகரிலிருந்த சிப்பாய்களே முதன் முதல் சீறியெழுந்து ஆங்கிருந்த ஆங்கிலேயரையெல்லாம் அழித்துப் போட்டு, டில்லிமா நகரை நோக்கிப் போயினர்.

அவ்விதமே இந்தியச் சிப்பாய்கள் தங்கியிருந்த இராணுவ ஸ்தலங்களிலெல்லாம் சிப்பாய்கள் பதறி எழுந்தார்கள். அவ்வளவில் கும்பினியின் பண்டகசாலைகள், அலுவலகங்கள், வர்த்தகச் சாலைகள் முதலியன எல்லாம் அழிந்து போயின. சிப்பாய்களின் வீர வெறிக்கு ஆளாகி உயிர் இழவாத ஆங்கிலேயரோ காடுகளிலே பதுங்கி வசிக்க நேர்ந்தது.

வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையில் அத்தகைய போராட்டமும் பேயாட்டமுமே நிகழ்ந்து வந்தன. இரத்தக் கொதிப்பும் சுதந்திரத் துடிப்பும் மக்களிடம் மிகுந்துவிடவே, நகரங்களும் கிராமங்களும் இரணகளங்கள் ஆயின. எங்கும் பிணக்காடு நிரம்பியது. நிணச்சேறும் செறிந்தது.

ஆங்கிலேயரின் மாடமாளிகைகள், மண்ணோடு மண்ணாயின. கூடகோபுரங்கள் தவிடுபொடி பட்டன. ஆங்கிலேயரும் ஏட்டிக்குப் போட்டியாக இந்தியரின் நகரங்களை அழித்தனர்; கிராமங்களில் தீ வைத்தனர். கண்ட கண்ட இடங்களிலெல்லாம் இந்தியரைக் கொன்று குவித்தனர்.

அதனால் இரு திறத்தாரிலும் இலட்சோப இலட்சம் ஜனங்கள் மாண்டு மடிந்தனர். செல்வச் சீமான்கள் பிச்சைக்கார ராயினர். பஞ்சமும் பசியும் எங்கும் தாண்டவம் ஆடின. கொள்ளை நோய்களும் பல இடங்களில் பரவி மக்களை வாட்டின. எங்கும் வாள்வரிசை, துப்பாக்கி வேட்டு, பீரங்கிப் பிரயோகம் இவைதான்.

அஃது மகத்தான இராஜீயப் பிரளயம் அல்லது தேசீயக் கொந்தளிப்பு எனப்படும். அதனை வெறும் **சிப்பாய்க் கலகம்** என்பர் சிலர். 1857-ம் ஆண்டு மூண்ட அம் மகாயுத்தம் அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இதற்கு இடையிலே கும்பினிக்கு உதவி புரிய இங்கிலாந்திலிருந்து ஆங்கிலப் படைகள் ஏராளமாக வந்து சேர்ந்தன.

பாரத மக்களிலே பலரும் அந்த யுத்தத்தில் பங்கு கொண்டாலும், சீக்கியர் என்போர் ஒதுங்கி நின்றனர். இரஜபுத்திரரும் வாளா இருந்தனர். ஹைதராபாத் நிஜாமும் மௌனம் சாதித்தார். ஆதலின், சுதந்திர யுத்த வீரருக்குப் போதிய பக்கபலம் கிட்டவில்லை. ஆயுத வசதியும் குன்றிவந்தது.

ஆனாலும் நானா பத்மநாபர், பகதூர் ஷா, ஜான்ஸி ராணி இலட்சுமிபாய் முதலியோர் கடைசி வரையில் கடும் போர் புரிந்து வீரம் விளைத்தனர். அப்போரின் கடுமையை ஆற்றாது பல இடங்களிலே ஆங்கிலப் படைஞர் வேசாறினர்; தமது கதி யாதாகுமோ என்றும் கலங்கினர்.

வீரப் பெண்ணரசியான இலட்சுமியைச் சிறை செய்துவிட அல்லது கொன்றுபோடக் கும்பினியின் தளகர்த்தர் மிக மிக முயன்றனர். ஆயினும் முடியவில்லை. முடிவு வரையில் பெரும் போர் புரிந்துவந்த நானா பத்மநாபர் அப்பால் துறவு பூண்டு இமயமலைச் சாரலில் புகுந்து விட்டார்.



பகதூர்ஷாவை ஆங்கிலேயர் சிறை செய்து விசாரணை நடத்தி **இரங்கூனிலே** காவலில் வைத்தனர். சுதந்திர யுத்தத் தலைவர்கள் மறைந்த பின்பு, கும்பினியாரிடம் பழிவாங்கும் வெறி மிகுந்தது. அதனால் கண்ணில் காணும் மக்களை எல்லாம் ஒன்று வாளுக்கு இரையாக்கினர்; அல்லது மரக்கிளையில் தூக்குப்போட்டனர்; பீரங்கி வாயில் வைத்தும் சுட்டெரித்தனர்.

அத்துடன் ஆயிரக்கணக்கில் நம்மவரை **அந்தமான்** தீவுக்கு அனுப்பி, அங்கே வாடிவதங்கச் செய்தனர். ஆனாலும், ஆங்கிலேயருக்கு உதைப்பு மிகுந்தது. ஏனென்றால் :—

"அம் மகாயுத்தம் அன்னியர் பூட்டிய அடிமை விலங்கை உடைத்தெறிய எழுந்த தேசீய யுத்தமாம். நாட்டு மக்களின் நல்லாட்சியை நிலைநிறுத்தும் யுத்தமுமாம்," என்று ஆங்கில மதியூகிகள் கண்டு கொண்டனர். சாதி, மத, வகுப்பு, வர்ண வேற்றுமைகளை விடுத்து, சுதந்திரத் துடிப்பில் இந்தியர் அனைவரும் ஒருமை கொண்டதையும் ஆங்கிலேயர் அறிந்து கொண்டனர்.

இந்திய மக்களின் நல்லெண்ணத்தையும் கூட்டுறவையும் நாடி அடைந்தால் அல்லாமல், இங்கே வாழ முடியாது என்று இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயரும் விக்டோரியா ராணியும் அறியவந்தனர். இந்தியாவை இழந்துவிட அவர்களுக்கு மனமில்லை.

# 12. கும்பினி கவிழ்தல்

**ப**டுமோசம் செய்து பிளாஸி சண்டையில் வெற்றி கண்ட பின், ஆங்கிலத் தளபதியான **கிளைவ்** என்பான் 1757-ம் ஆண்டிலே கும்பினி அரசு முளைக்க விதை தூவினான். சரியாக ஒரு நூறு வருஷகாலம் ஆனதும், கும்பினியின் ஆட்சி கவிழ இங்கே சுதந்திர மகாயுத்தம் மூண்டது.

கும்பினியின் ஆட்சி இங்கே வளர வளர, இங்கிலாந்திலுள்ள துரைத்தனத்தார் சிறிது சிறிதாக அந்த ஆட்சியின் மீது ஆதிக்கம் அடைந்துவந்தனர். 'அதனால்' தான், அங்கிருந்து ஆங்கிலப் படைகள் இங்கே துணை புரிய வரலாயின. இந்தியரின் மனப்புண்ணை மாற்றி, ஆங்கிலேயரையும் இந்தியரையும் நேசத்தினால் பிணைக்க வேண்டும் என்று அத் துரைத்தனத்தார் தீர்மானித்தனர். அதன் தலைவியான **விக்டோரியா** ராணி 1858-ம் ஆண்டு இந்தியருக்கு விடுத்த மகத்தான பிரகடனத்தின் சாரம் வருமாறு :—

(1) இனிமேல் இந்தியாவில் நாடு பிடிக்க நாட்டம் இல்லை. (2) இந்திய மன்னரின் உரிமை, மதிப்பு இவற்றிற்கு ஒரு குறைவும் நேராது. (3) பாரத மக்களின் மத விஷயத்தில் தலையிட உத்தேசமே கிடையாது. (4) தகுதி, திறமை இவற்றை மதித்து, ஜாதி மத பேதம் இன்றி இந்தியர் அனைவருக்கும் இந்திய அரசியலிலே எந்த உத்தியோகமும் கொடுக்கப்பெறும். (5) தேசக் கைத்தொழில்களுக்கு ஆதரவு தந்து, பொது நல வேலைகளை வளர்த்து, மக்களின் நலத்துக்காகவே அரசு நடந்து வரும். (6) தேச மக்களின் நலபலமே எங்களது



(ஆங்கில அரசினது) பலத்தினுக்கு அடிப்படை. அவர்களின் திருப்தியே எங்களது பாதுகாப்பு. அவர்களின் நன்றியே எங்களுக்கு வெகுமதியாம்.

அப்போது இங்கே கவர்னர் ஜெனரலாக இருந்த **கானிங்** பிரபு என்பார் 1858-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதி **அலகபாத்** நகரிலே, சுதேச மன்னர் பலரையும் கூட்டிவைத்து, அந்த விளம்பரத்தை வாசித்துக் காட்டினார். அன்றியும் அவ்விளம்பரம் எங்கும் பறை சாற்றப்பட்டது. அது கண்டு மக்களுக்கு ஒரு சிறிது மன அமைதி உண்டாயிற்று.

அதுவரையில் இங்கே நடந்துவந்த கும்பினி ஆட்சி அடியோடு ஒழிந்தது. இங்கிலாந்தின் நேர்முகமான ஆட்சி ஏற்பட்டது. அந்த யுத்தத்தின் பயனாக இந்தியர் எவரும் ஆயுதம் தரிக்கக் கூடாது என்றும் ஏற்பட்டது, இங்கே ஆட்சியின் போக்கும் மாறியது. இதன் முக்கிய விவரங்கள்.

(1) இங்கிலாந்திலுள்ள அரசாங்கத்துக்கு உட்பட்டே இந்தியாவின் ஆட்சியை கவர்னர் ஜெனரல் என்பவர் நடத்தி வருவார். (2) அக் கவர்னர் ஜெனரலோ இங்கிலாந்திலுள்ள அரசரின் பிரதிநிதி. ஆதலின் அரசப் பிரதிநிதி என்றும் பெயர் பெறுவார். (3) இங்கிலாந்தின் மந்திரிகளிலே ஒருவர் இந்தியா மந்திரியாக இருந்து, இந்தியாவின் ஆட்சியை நன்கு கவனித்து வருவார். (4) அந்த மந்திரிக்கு உதவியாக ஒரு சபை ஏற்படும். அம் மந்திரிக்கு உட்பட்டே அரசப் பிரதிநிதி நடந்துவருவார்.

அவ்விதம் இத்தேச அரசியல் மாறியது. ஆரம்பத்தில் அரசப் பிரதிநிதியாக இருந்தோரும் ஆங்கில

அதிகாரிகளும் நேர்மையுடன் நடக்கவே தலைப்பட்டனர். இதனை அறிந்து தேச மக்களிலே பலரும் நிம்மதி கொண்டனர். ஆனாலும் சுய அரசு இல்லாத வாழ்வு என்ன வாழ்வு, என்று மக்களில் சில பலர் துடித்து நின்றனர்.

சுதந்திர மகாயுத்தத்துக்குப் பின் இந்தியாவின் சேனையிலே சீக்கியரை மட்டும் ஆங்கிலேயர் சேர்த்துக் கொண்டனர். மற்றையோரைச் சேர்த்துக் கொள்ள வில்லை. சூடு கண்ட பூனை அடுப்பண்டை போகாது என்பது வசனம் அல்லவா?

விக்டோரியா ராணியின் விளம்பரத்தில் கண்ட வண்ணம் இங்கே ஆட்சி நடக்கவில்லை. சுதந்திர வீரருக்கு அது கண்டு ஆத்திரம் ஓங்கியது. ஆதலின் மீண்டும் சுதந்திர யுத்தம் நடத்தியாக வேண்டும் என்னும் நினைப்பு பலரிடையே பெருகிற்று. பெருகவே 1880-ம் ஆண்டு மறுபடியும் கலக மூட்டம் நேர்ந்தது.

அது கண்டு ஆங்கில அதிகாரிகளில் சிலர் அச்சம் அடைந்தனர். இரண்டொருவரோ இந்தியரை அமைதிப் படுத்த யாது வழி என்று ஆலோசித்தனர். அந்த இரண்டொருவரில் ஒருவன் **ஆலன் ஆக்டவோ ஹியூம்** என்பவர். இவர் 1857-ம் ஆண்டு யுத்தத்தில் சிக்கிச் சீரழிந்தவர்.

## 13. காங்கிரஸ் உதயம்

**மறுபடியும் தேசத்திலே கொந்தளிப்பு ஏற்பட்டால்,** ஆங்கிலேயர் அழிந்து போக நேரும்; அவர்களின் சுக வாழ்வுக்கு உரிய உபாயமும் கைதவறும், என்று அந்த ஹியூம் என்பாருக்குத் தோன்றியது. அச்சமயம் இங்கே அரசப் பிரதிநிதியாக இருந்தவர் லார்ட் டப்ரின் என்பவர்.

அந்த இருவரும் கலந்து பேசி, "தேசத்தின் கலகப் போக்கை மாற்ற வேண்டும். மக்களின் மனத்தை ஒரு வழியில் திருப்ப வேண்டும்," என்று முடிவு செய்தனர். ஆங்கிலக் கல்வி பயின்று, ஆங்கில நாகரிகத்தில் மோகம் கொண்டு கிடந்த படித்த வகுப்பார் என்போரின் மீது அவர்களின் கவனம் பாய்ந்தது.

ஆங்கிலேயரின் நேர்முகமான ஆட்சி உதித்ததும் இங்கே ஆங்கிலக் கல்வி பரவி வந்தது. உயர் வகுப்பாரும் செல்வரும் அக் கல்வியை விரும்பிக் கற்றனர். அதன் பலனாக அரசில் உத்தியோகம் பெறவும் முயன்றனர். படித்தவர் அனைவருக்கும் உத்தியோகம் கொடுக்க வகையில்லை. அதனால் படித்த வகுப்பாரிடையே மனப் பிணக்கு மிகுந்தது.

மேலும் அரசு முறையில் அங்கம் வகிக்கவும், செல்வாக்கு எய்தவும் அப் படித்த வகுப்பாருக்கு ஆவல் வளர்ந்து வந்தது. தொழில் துறையிலோ, வர்த்தக மார்க்கத்திலோ புகுந்து பெயரும் புகழும், பணமும் பதவியும் அடைய வழியில்லை. எனவே அரசாங்க உத்தியோகம் ஒன்றே அனைவருக்கும் இலட்சியமாக இருந்து வரலாயிற்று.

அந்நிலையில் சென்னை, பம்பாய், கல்கத்தா இந்த நகரங்களிலே படித்த வகுப்பாரிடம் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. எல்லாரும் ஒன்று கூடி, அரசாங்கத்துடன் வாதாட வேண்டும் என்னும் உணர்ச்சியும் ஓங்கியது. அதன் விளைவாக அந்நகரங்களிலே சபைகளும் சங்கங்களும் ஏற்படலாயின. அவை அவ்வப்போது கூடி, உத்தியோகத்தை நாடிக் கிளர்ச்சி செய்து வந்தன.

இதற்கு இடையில் அரசிலே உயர்ந்த உத்தியோகங்களை வகித்த ஆங்கிலேயரோ தங்களைக்குட்டி அரசர் என்று எண்ணங் கொண்டனர்; ஆளப் பிறந்தோம் என்னும் அகந்தையும் எய்தினர்; வர்த்தகமும் தொழிலும் நடத்தி வந்த ஆங்கிலேயருக்கே உதவி பலவும் புரிந்து வந்தனர்.

நாளடைவில், ஆங்கிலேயரே அரசாளும் இனம், இந்தியரோ ஆளப்படும் இனம், என்னும் ஏற்றத் தாழ்வு உதிக்கலாயிற்று. அரசாங்கத்தின் அலுவல் அகங்களிலும், புகை வண்டிகளின் நிலையங்களிலும் ஆங்கிலேயருக்கு உரிமையும் சலுகையும் மிகுதியும் இருந்து வந்தன. இந்தியருக்கோ நியாயமான உரிமையும் சலுகையும் கிட்டுதல் அரிதாயிற்று. இந்தியர் என்றால் கறுப்பர், சுதேசிகள் என்ற இழி மொழிகளும் பரவி வந்தன.

இவையெல்லாம் பார்க்கவே படித்த வகுப்பாரில் சிலர் கொதிப்புக் கொண்டனர். தொழிலிலும் வர்த்தகத்திலும் ஆங்கிலேயருக்கே அரிய உதவியெல்லாம் கிடைத்தல் கண்டும், அக் கொதிப்பு பெருகி வந்தது. சொந்த நாட்டிலே இந்த ஈன வாழ்வா, என்னும் ஏக்கம் பொது மக்களிடம் பரவா நின்றது.



அத்தகைய நிலையில் தான் ஹியூம் என்பார் நம்மவரை நோக்கி, “ஒன்றுபடுங்கள்! ஒருமித்துக் கேட்டால், அரசு இணங்கும்,” என்று கூறி வந்தார். அவரது வாக்கின் நயத்தைக் கண்டு நம்மவரில் பலரும் சொக்கிப் போயினர்; அவரது சொற்படி நடக்கவும் முற்பட்டனர்.

அத் தறுவாயில் சென்னைமா நகரிலே இந்தியப் பிரமுகரில் பலர் ஒன்று கூடி, “இந்தியா முழுவதற்கும் பொதுவாக ஒரு சபை வேண்டும். அச் சபையின் மூலம் நமது குறைகளைக் கூறி அவற்றினுக்குப் பரிகாரம் தேட வேண்டும். அவ்விதம் செய்தால் நமக்குள்ளே ஒற்றுமை பரவி ஓங்கும்,” என்று கருதினர்.

அக் கருத்தும் ஹியூமின் வாக்கும் கூடிக் கொள்ளவே 1885-ம் வருஷம் டிசம்பர் மாதம் **பம்பாய்** நகரிலே **காங்கிரஸ் மகா சபை** என்பது தோன்றியது. இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்தும் இந்தியப் பிரமுகர் பலர் வந்திருந்தனர். ஹியூம் என்பாரும் உடனிருந்து உரிய ஆலோசனை சொல்லி வந்தார். அவ்விதம் காங்கிரஸ் மகாசபை உதயமாயிற்று.

# 14. சுயராஜ்யம் பிறப்புரிமை

**காங்கிரஸ் மகாசபை ஆண்டு தோறும் இந்தியாவில் ஒரு** முக்கியமான நகரில் கூடும்; அரசிலே இந்தியருக்கு உயர்ந்த உத்தியோகம் வேண்டும் என்று தீர்மானம் செய்யும்; ஆங்கில அரசரிடம் அதிவிசுவாசம் பூண்டிருப்பதாக ஓர் தீர்மானம் நிறைவேற்றிய பின்பே இதர விஷயங்களைக் கவனிக்கும்.

படித்த வகுப்பாரே அச் சபையில் கலந்துகொள்வர். அவர்களில் சிலர் காரசாரமாகவும் பேசுவர். அந்நாளில் இங்கே வேலைபார்த்து விலகிய ஆங்கிலேயரில் மூன்று நான்கு பேர் அச் சபையினிடம் அன்பும் பரிவும் காட்டிவந்தனர். ஹியூம் என்பாரே ஓர் இருபத்தைந்து வருஷ காலம் அதன் காரியதரிசியாக இருந்து வந்தார்.

அச் சபையில் முதன்மையாகவும் மேதையாகவும் விளங்கியவர்களில் சிலரை ஆங்கில அரசாங்கம் தனது வலையில் சிக்கவைத்து வந்தது. எப்படி யென்றால் அரசிலே உயர்ந்த உத்தியோகம் ஒன்றை அம் மேதைகளுக்கு அரசாங்கம் அளிக்கும். அளிக்கவே அவர் அந்த அரசின் கையாளாக ஆகிவிடுவார். அது கண்டு மற்றையோரும் அடுத்த சமயம் தமக்கு உயர் பதம் கிடைக்கும் என்று எண்ணி அண்ணாந்து நிற்பர்.

ஏனையோரோ நம்மவருக்கு அரசிலே பட்டமும் பதவியும் கிட்டுகின்றன. அரசாங்கத்துக்கு நம்மிடம் அன்பும் பரிவும் உண்டு என்று எண்ணி மதிமோசம் போவர். அத்தகைய உபாயத்தை வெகு தந்திரமாக அரசாங்கத்தார் கையாண்டு வந்தனர். அதனால் காங்



கிரஸ் கிளர்ச்சியின் வேகமும், சுதந்திர உணர்ச்சியின் பற்றும் குன்றிவந்தன.

அச் சூழ்ச்சியை ஒரு சிலரே உணர்ந்துகொள்ள முடிந்தது. அச் சிலருக்கோ ஆத்திரமும் துடிப்பும் உதித்து ஓங்கின. "நாடு நமது! பிழைக்க வந்தோர் நம்மைக் கட்டி ஆளுகின்றனர்! அவர்களிடம் உத்தியோகத்துக்கா நாம் கையேந்தி நிற்பது; அடிமடியில் கையைப் போடுவது போல் அரசுரிமையையே நாடி அடைதல் வேண்டும்," என்று தீவிர நோக்கம் கொண்டனர்.

கொள்ளவே, "பிழைக்க வந்தவரிடம் பிச்சைகேட்பதா? என்ன மானக்கேடு இது! ஆண்டு தோறும் இராஜ விசுவாசத் தீர்மானம் செய்வதும் ஈனத்தனமே ஆகும். நாட்டை மீட்க முயலுவோம், சுயராஜ்யம் எய்துவோம்", என்று வலியுறுத்தத் தொடங்கினர்.

அவர்களைத் **தீவிரக் கட்சியார்** என்பர். அரசினிடம் நல்ல பிள்ளையாக நடந்து, நாளடைவில் காரியத்தைக் கண்டெடுப்போம் என்றே அச் சபையில் பலரும் கருதிக் கிடந்தனர். இவர்களை **மிதவாதிகள்** என்பர். அச் சபையிலே தீவிரக் கட்சியாரின் வாக்கு ஓங்கவில்லை.

அத் தீவிரக் கட்சியில் **பால கங்காதர திலகர், பாபு அரவிந்த கோஷ், விபின சந்திர பாலர், லாலா லஜபதிராய்** முதலியோர் தலை சிறந்த மனிதராவர். திலகர் மராட்டிய மரபில் வந்தவர். இவர் "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன். உத்தியோகம் வேண்டி, ஆங்கிலேயரிடம் மண்டியிடேன்!" என்று வீர கர்ஜனை செய்தார்.

அரவிந்தர், பாலர், முதலியோர் தேசமெங்கும்

சென்று "சுயராஜ்யமே வேண்டும், சுதந்திரம் இல்லா வாழ்வு சிறுமையே தரும்," என்று பேசி வந்தனர். அப் பேச்சின் கருத்தும் இலட்சியமும் மக்களின் மனத்தைக் கவர்ந்தன. தேசத்தில் தீவிரக் கட்சியாரின் செல்வாக்கே ஓங்கி வந்தது. மிதவாதிகளின் போக்கைக் கண்டு வெறுப்பும் தோன்றியது.

அரசாங்க அதிகாரிகளோ அம் மிதவாதிகளை அணைத்து முதுகில் தட்டிக் கொடுத்து ஆதரித்து வந்தனர்; தீவிரக் கட்சியாரை அடக்கி ஒடுக்கப் பலவாறான கடுஞ் சட்டங்களும் செய்யப் புகுந்தனர். புகவே தேச வாலிபரிடம் படபடப்பு மிகுந்தது. எங்கும் சுயராஜ்ய கோஷம் செவிடு பட்டது. தேசத்தின் போக்கை அறிந்தும் மிதவாதிகள் விழிப்புக் கொள்ளவில்லை.

ஆதலின், காங்கிரஸ் மகாசபையை முறித்துப் போடவேண்டும் என்னும் உ ண ர் ச் சி தேசத்திலே பரவி வந்தது. அதிகாரிகளோ மிடுக்கும் துடுக்கும் காட்டி நடந்துவரத் தலைப்பட்டனர்.

## 15. சுதேசியக் கிளர்ச்சி

**அச் சமயத்திலே லார்டு கர்ஸன் என்பவர் இங்கே அரசப்** பிரதிநிதியாக இருந்து வந்தார். நமது சுயராஜ்யக் கிளர்ச்சி கண்டு அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அக்கிளர்ச்சியிலே வங்காள மாகாணமே முன்னணியில் நின்றது. முகம்மதிய சமூகத்தார் காங்கிரஸ் மகா சபையில் பெருவாரியாகச் சேரவில்லை.

பிரித்தாளும் தந்திரத்தில் அவர் கைதேர்ந்தவர்; ஆதலின் முகம்மதியரை முதுகில் தட்டிக் கொடுத்து இனிமையாகப் பேசி வந்தார்; வங்காளத்திலே முகம்மதியர் நிறைந்த பாகத்தைத் தனி மாகாணமாக ஆக்கினார்: அதனால் முகம்மதியருக்கும் இந்துக்களுக்கும் இடையே ஒற்றுமை உண்டாகாமல் பிளவே பெருகும் என்று எண்ணினார்.

அவரது இராஜ தந்திரத்தை வங்காளிகள் கூர்ந்து உணர்ந்து கொண்டனர்; கொள்ளவே வங்காளத்தை இரு துண்டாக ஆக்கக்கூடாது என்று பெருங்கிளர்ச்சி செய்தனர்; அக் கிளர்ச்சியை அரசாங்கம் சட்டை செய்யவில்லை. ஆதலின் தக்க உபாயத்தைக் கையாள வங்காளியர் முனைந்தனர். அந்த உபாயம் யாதெனில்:-

இங்கே ஆங்கில ஆட்சிக்கு அடிப்படை வர்த்தகமே. ஆங்கிலத் துணி மணிகளும், பிறபொருள்களும் இங்கே ஏராளமாக வந்து குவியும். அவற்றைத் தடுக்கவும், நமது தேசச் சரக்குகளுக்கே ஆதரவு அளிக்கவும் சுதேசியப் பற்று அவசியம். எனவே எல்லாரும் சுதேசிய விரதம் கொள்ளவேண்டும் என்பது ஒன்று.

சுதேசியம் சிறக்க வேண்டுமானால், பரதேசப் பொருள்களை நாம் விலக்குதல் வேண்டும். முக்கியமாக ஆங்கில ஜவுளி, சோப்பு, சீப்பு இவற்றை அறவே ஒழித்தல் தேவையாம். இது பகிஷ்காரம் அல்லது அன்னியப் பொருள் விலக்கு எனப்படும். ஆங்கிலக் கல்வியின் மோகத்தை விடுத்து, நம் தேசத்துக்கு உகந்த கல்வியை நாம் மேற்கொள்ள வேண்டும் என்பது மற்றொன்று.

அம்மூன்றையும் நன்கு கையாண்டு வந்தால், நம்மிடையே தேசப்பற்று நனி சிறந்து ஓங்கும்; சுய ராஜ்ய தாகமும் தலை சிறக்கும். ஆதலின் சுயராஜ்யமே நமது இலட்சியமாகும் என்பது இன்னொன்று. இந்த நான்கு உபாயங்களையும் மேற்கொண்டு நடக்கவேண்டு மென மக்களை வங்காளத்தார் பரிந்து அழைத்தனர். வங்கம் முழுவதும் அதில் ஈடுபட்டது.

வங்காளத்திலே தோன்றிய சுதேசியக் கிளர்ச்சி நம் தேசம் எங்கும் தாக்கியது. அதனால் நமது தமிழகம் பெரிதும் தாக்குண்டது. தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவம் முதலியோர் அக் கிளர்ச் சியை இங்கே மிகவும் பரப்பினர். ஆங்கிலேயருக்குப் போட்டியாக இந்தியக் கப்பலை ஓட்டவும் முன் வந்தனர்.

சுதேசியக் கிளர்ச்சியின் வேகம் கண்டு ஆங்கில அரசுக்கு அச்சம் பிடித்து விட்டது. ஆதலின் அதனை அடக்க மிக மிடுக்கான சட்டங்கள் உதித்தன. கிளர்ச்சியிலே ஈடுபட்டவர்கள் சிறைபுக நேர்ந்தது. அடக்குமுறை அதிகரிக்க, அதிகரிக்க மக்களின் கிளர்ச்சி யும் மிகமிக வலுத்து வந்தது. வேலெறி வந்து தாக்கத் தாக்க, வேங்கைப்புலி சீறிச் சீறிப் பாயும்.



அரசின் மிடுக்கையும் துடுக்கையும் கண்ட வாலிபர் வெடி குண்டையும் துப்பாக்கியையும் மேற் கொண்டனர். அரசை அண்டி நின்று தேசத்தைக் காட்டிக் கொடுப்போர் ஆவியிழக்க நேர்ந்தது. அது போது எண்ணிறந்த வாலிபரை அரசாங்கம் சிறை செய்து காவலில் போட்டது. போடவே வாலிப ரிடையே பயங்கர இயக்கம் மேலோங்கியே நின்றது.

மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டவும், அவர்களைத் தட்டி யெழுப்பவும் **வந்தே மாதர** கீதம் வானுற ஓங்கிற்று. அக் கோஷமும் வானை முட்டியது. அக் கீதத்தையும் கோஷத்தையும் தடுக்க அதிகாரிகள் முயன்றனர். ஆயினும் பலிக்கவில்லை. தேசம் துடி துடித்து நின்றது. அதிகாரிகளும் படபடத்து ஒன்றும் புரியாமல் நின்றார்கள்.

அச் சமயத்தில் கண்ணைத் துடைக்கும் வேலையாக ஆங்கிலேயர் ஒரு சிறிது அரசியலைத் திருத்தினர். அது மிண்டோ மார்லி திருத்தம் எனப்படும். அது கண்டு மிதவாதிகளும் திருப்தி அடையவில்லை. தீவிரக் கட்சி யாரின் சுதந்திரக் கிளர்ச்சி வளர் பிறைபோல் வளர்ந்தே வந்தது.

## 16. வெடிகுண்டு வீச்சு

**அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான்** என்பது ஒரு பழமொழி. அதனை மதித்து ஆங்கில அதிகார வர்க்கம் நடக்கத் தொடங்கவே படிப்பின் நிமித்தம் சீமை சென்றிருந்த நமது வாலிபரில் பலரும் தமது படிப்பைக் கட்டிவைத்தனர் ; ருஷ்யா தேசத்திலிருந்து வெடிகுண்டு செய்யும் மார்க்கத்தைக் கற்றுத் தேர்ந்தனர்.

அவர்களின் மூலம் வெடிகுண்டு செய்யும் உபாயம் இரகசியமாக இந்தியாவிலே பரவிற்று. பற்பல இடங்களில் வெடிகுண்டு செய்யும் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. வெளி நாடுகளிலிருந்து ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. வெடிகுண்டும் ஆயுதமும் எங்கிருந்து கிடைக்கின்றன என்று ஆங்கில அரசாங்கம் அறிய முடியவில்லை.

அரசப் பிரதிநிதி முதல் கிராமத் தலையாரி வரையில் அனைவரும் வெடி குண்டு வீச்சைக் கண்டும் கேட்டும் நடுங்கிக் கிடந்தனர். வெடிகுண்டு வீச்சின் பயனாகவே **மிண்டோ மார்லி திருத்தம்** ஏற்பட்டது. அத்திருத்தத்தைக்காட்டி, மிதவாதிகளைக் கட்டி அணைத்துக் கொண்டு, தீவிரக் கட்சியாரைக் கசக்கிப் பிழிந்துவிட அரசாங்கம் முனைந்தது. அதனால் தீவிரவாதிகளில் பலரும் சிறைபுக நேர்ந்தது.

பால காங்காதர திலகர் ஆறு வருஷத் தீவாந்திர சிட்சைக்கு ஆளானார். பாபு அரவிந்தர் ஒரு வெடி குண்டு வழக்கிலிருந்து விடுதலையாகி புதுச்சேரியிலே ஒதுங்கி வாழலானார். பாஞ்சால சிங்கமான லாலா



லஜபதிராய் நாடு கடத்தப்பட்டார். வங்காளத்தின் பெருந் தலைவர்களில் எழுவர் எங்கேயோ தூக்கிச் செல்லப்பெற்றனர்.

நமது தமிழகத்திலே தூத்துக்குடியில் சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவம் முதலியோர் கடுங்காவல் தண்டனை அடைந்தனர். வெடிகுண்டின் பிதா எனப்படும் விநயக தாமோதர சாவர்க்கார் என்பாரும் அவரது சோதரரும் தீவாந்திரத் தண்டனை பெற்று அந்தமான் தீவிலே வாட நேர்ந்தது. கன்னையலால் தத்தர், குதிராம் போஸ் முதலிய இளைஞர்கள் தூக்குமேடையில் ஆவியை விடுத்தனர்.

ஆயிரக் கணக்கான வாலிபர் விசாரணை யில்லாமல் காவலிலே வைக்கப் பெற்றனர். பலரது சொத்து சுதந்திரங்கள் பறிமுதல் ஆயின. அவ்விதம் தேசத்திலே பயங்கர ஆட்சி நடைபெற்று வந்தாலும் மக்களின் சுயராஜ்யத் துடிப்பும் சுதந்திர தாகமும் மங்கிவிடவில்லை. பெருவெள்ளத்தைக் கண்டு சிறிது தலை சாய்ந்து கொடுக்கும் நாணலை போல் அத்தாகமும் துடிப்பும் துலங்கின.

மிண்டோ மார்லி திருத்தங்களின் வண்ணம் மிதவாதிகளுக்கு அரசிலே பட்டங்களும் பதவிகளும் நிரம்பக் கிட்டி வந்தன. ஆதலின் தேசத்தின் மனத் துடிப்பை மிதவாதிகள் அவ்வளவா[...] நடக்கவில்லை. அது கண்டு அதிகா[...]க்கம் [...]தி கொண்டது.

பாரத பூமியின் அரசிய[...] கிளர்ச்சி உலகின் இதர தேசங்களுக்கும் எட்டியது. ஆதலின் அயல் நாட்டார் அக் கிளர்ச்சியைக் கூர்ந்து கவனித்து வந்தனர். இங்கே

MADRAS ... LIBRARY 112752

பிழைக்க வழியின்றி அயல் நாடுகளுக்குச் சென்றிருந்த நம்மவரும் அக் கிளர்ச்சியில் அக்கறை கொண்டு ஆதரவு காட்டி வந்தனர். அங்கே அவர்களின் நிலை மோசமாக இருந்தது.

உதாரணமாகத் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றிருந்த நம்மவரை மிருகங்களே போல அங்குள்ள வெள்ளையர் நடத்தி வந்தனர். அங்கே வக்கீலாகச் சென்றிருந்த மோகனதாஸ் கரம்சந்து காந்தி—மகாத்மா காந்தி—அந்நிலை கண்டு சத்தியாக்கிரக இயக்கம் தோற்றுவித்தார். அங்குள்ள நம்மவரைத் திரட்டி அந்த அரசாங்கத்துடன் மல்லுக்கு நின்றார். அது கேட்டு இங்குள்ள இந்தியர் பரிவு மிகுந்தனர்.

சொந்த நாட்டில் அடிமையாக இருப்பதனால்தான் பிற நாடுகளில் அல்லல் அடையும் நம்மவரைக் காக்க முடியவில்லை. ஆதலின் சொந்த நாட்டிலே சுயராஜ்யம் எய்தியாக வேண்டும் என்று இந்தியர் அனைவருக்கும் தீவிர எண்ணம் உதித்தது.

## 17. பஞ்சாப் படுகொலை

இதற்கு இடையில் திலகர் விடுதலை அடைந்தார்; சுயராஜ்யம் என்னும் பெயர் கண்டு சிலர் மருளுவதை அறிந்தார்; ஆதலின் ஹோம் ரூல் என்னும் பெயருடன் மறுபடியும் சுதந்திரக் கிளர்ச்சியை மூட்டினார்; தேசத்தின் பல பாகங்களிலும் ஹோம் ரூல் சங்கங்களை ஏற்படுத்தினார்.

ஆனதுபற்றி தேசமெங்கும் சுதந்தர ஆவேசம் பெருகியது. சென்னைமா நகரிலே பிரம்மஞான சங்கத்தின் தலைவியாகத் திகழ்ந்த அன்னி பெஸண்ட் அம்மையாரும் நமது மாகாணத்திலே ஹோம் ரூல் சங்கங்களை நிறுவினார். மிக்கத் தீவிரமாகக் கிளர்ச்சியை அச் சங்கங்களின் மூலம் நடத்தி வந்தார்.

அது கண்டு, சென்னை மாகாணக் கவர்னர் அச்சம் கொண்டார்; உடனே அந்த அம்மையாரையும் அவரது தோழர்களான வாடியா, அருண்டேல் என்பவர்களையும் சிறை செய்து காவலில் வைத்தார். சுதந்திரக் கிளர்ச்சியோ அடங்கினபாடில்லை. மற்று வலுத்தே நின்றது.

1914-ம் ஆண்டிலே ஐரோப்பாவில் முதல் உலக மகாயுத்தம் மூண்டது. ஜெர்மன் சக்கரவர்த்தியான கெய்ஸர் என்பார் ஐரோப்பா முழுவதையும் அடிப்படுத்த ஆர்ப்பரித்து எழுந்தார். அது கண்டு இங்கிலாந்து தேசம் தொடை நடுக்கம் கொண்டது.

அப்போது, "ஆபத்திலே தலை கொடுங்கள், உங்களை மறக்க மாட்டோம்; உங்களது அரசியல் ஆசைகளைப் பூர்த்தி செய்வோம். உலகிலே எங்கும் சுதந்

திரத்தையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டவே போர் நடக்கின்றது,'' என்று இங்கிலாந்து தேச மந்திரிகள் நம்மை நயந்து வேண்டிக் கொண்டனர்.

அந்த அபயக் குரலைக் கேட்டு நம்மவர் தலை கொடுக்க முன் வந்தனர். நமது வீரர் ஐரோப்பிய அரங்கங்களில் ஆவி கொடுத்து இங்கிலாந்தைக் காத்தனர். இங்கிருந்து பொன்னும் பொருளும் மலைமலையாகச் சென்றன. அவை கொண்டு தனது கஷ்ட நஷ்டங்களை இங்கிலாந்து வெகுவாகத் தணித்துக் கொண்டது.

ஆங்கில மந்திரிகள் நமது உதவியைப் புகழ்ந்து பேசி நன்றி மறவோம் என்று பறை சாற்றினர். காதலின் நடுவிலும், போரின் மத்தியிலும், பேசும் பேச்சை நம்பி மோசம் போக வேண்டாம் என்று பாரத சுதந்திர வீரர் பலரும் வற்புறுத்தினர். இதனை ஆங்கில அதிகார வர்க்கம் உணர்ந்து ஒரு சட்டம் இயற்றி ஆயிரக் கணக்கான வாலிபரைச் சிறைக்குள் போட்டது.

அமெரிக்கா, கனடா, முதலிய நாடுகளில் வசித்து வந்த நம்மவர் ஆங்கில மந்திரிகளின் இனிய வார்த்தையில் நம்பிக்கை வைக்கவில்லை. ஆதலின், ஆபத்தில் சிக்கியுள்ள இங்கிலாந்தை எதிர்த்து இனிய சுதந்தரம் பெற இதுவே தருணம் என முனைந்தனர்.

அது பற்றி அவர்கள் ஆயுதங்களுடன் இங்கு வந்து, ஆங்காங்குள்ள படை வீடுகளில் தங்கி, இந்தியச் சிப்பாய்களைத் தூண்டி விட்டனர். இத்துரையில் ஜெர்மானியரும் இயன்ற உதவியெல்லாம் அந்தரங்கத்திலே செய்து கொடுத்தனர். சிப்பாய்களிடமும் சுதந்திர நினைப்புடன் முனைப்பும் மிகுந்தது.



அந் நிலையிலே உலக மகாயுத்தம் முடிவுற்றது. உடனே ஆங்கில மந்திரிகளின் இனிய பேச்சு மறைந்தது. அவர்களின் செயலில் மிடுக்கும் பதட்டமும் தலை காட்டின. நம்மவரின் சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்கும் நோக்குடன் **ரௌலட் சட்டம்** என்பது பிறந்து, மிகக் கடுமையாகக் கையாளப்பட்டது.

அச்சட்டத்தின்படி எந்தப் போலீஸ்காரனும் நம்மவரில் யாரையும் பிடித்து அடைத்து வைத்து விட்லாம். அது கண்டதும் இலவு காத்தக் கிளி போல் ஆனோமே என்று பலரும் பதைத்தனர்; சுதந்திர வீரரோ துடிதுடித்தனர் ; யுத்தத்திலே தலை கொடுத்ததற்கு வெகுமதியா இது என்று பெரிதும் மனம் புழுங்கினர்.

இச்சமயம் தேசமெங்கும் கோபாவேசம் தலைமிஞ்சியது. அதனால் மீண்டும் பயங்கர இயக்கம் தோன்றி விடுமோ என்று மகாத்மா காந்தி பயந்தார். தேசத்தின் துடிப்பை நேர்மையான முறையில் திருப்பச் சத்தியாக்கிரக இயக்கம் தோற்றுவித்தார்.

1919-ம் ஆண்டு ஏப்ரல் 6-ந்தேதி முதல் 13-ந்தேதி வரையில் சத்தியாக்கிரக வாரம் கொண்டாடப் பெற்றது. அதிகாலையில் அனைவரும் எழுந்து ஆண்டவனைத் தொழுது, உண்ணு நோன்பு இருந்து, அலுவல்களை எல்லாம் நிறுத்தி வைத்து, அந்தச் சட்டம் தொலைய வேண்டுமென ஆண்டவனை வணங்கி, மாலையிலே பொதுக் கூட்டம் கூட்டிச் சத்திய நெறியில் அச் சட்டத்தை எதிர்த்தாக வேண்டும் என மக்கள் அனைவரும் விரதம் கொண்டனர்.

வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையில் தேச மகாஜனங்கள் ஒரு முகமாகத் திரண்டு அன்பு வழியில் சத்திய விரதம் பூண்டனர். பஞ்சாப் மாகாணத்திலே அமிர்தசரஸ் நகரிலும் மக்கள் அவ்வாறு கூடியிருக்க **ஜெனரல் டயர்** எனும் ஆங்கில தளகர்த்தன் அக் கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தான்.

அதில் நூற்றுக் கணக்கான மக்கள் மாண்டனர். இன்னும் பலர் காயமுண்டனர். இந் நிகழ்ச்சி வெளியே தெரியாவண்ணம் அதிகாரிகள் தடுத்து வைத்தார்கள். **பண்டித மதன மோகன மாளவியா** அப் படுகொலையை அம்பலப் படுத்தினர். படுத்தவே தேசத்தின் ஆத்திரம் கரை கடந்து விட்டது. மறுகணத்தில் யாது நிகழுமோ என்று எல்லாரும் அஞ்சிக் கிடந்தனர்.

## 18. ஒத்துழையா இயக்கம்

**அடிக்கும் ஒரு கை, அணைக்கும் ஒரு கை என்பர். இங்கே** கிளர்ச்சி ஓங்கும்போதெல்லாம் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையும் ஓங்கும். ஓரளவு அரசியல் திருத்தமும் உண்டாகும். **ஹோம்ரூல்** கிளர்ச்சி ஓங்கிய போது இந்தியா மந்திரியாக இருந்த **மாண்டேகு** என்பார் 1917-ம் ஆண்டு ஓர் அறிக்கை வெளியிட்டார்.

படிப்படியாக இந்தியாவை அரசியலில் சேர்த்துக் கொள்வோம் என்பதே அந்த அறிக்கையின் கருத்தாம். அது கண்டு இங்கே ஒருவரும் திருப்தி அடையவில்லை. பின்பு அம் மந்திரி அங்கிருந்து இங்கு வந்து, ஜனத் தலைவர்களுடன் கலந்து பேசினர். அச்சமயம் இங்கே அரசப் பிரதிநிதியாக இருந்த **செம்ஸ் போர்ட்** என்பவருடன் ஆலோசனை செய்தார்.

அதன் பயனாக "மாண்டெகு-செம்ஸ் போர்ட் சீர் திருத்தங்கள்" ஏற்பட்டன. அவை மர மாம்பழம் போன்றவை. ஆதலின், பலருக்கும் அவை கண்டு பிடித்தம் இல்லை. ஆனாலும், கிடைத்ததைப் பெற்றுக் கொண்டு, மேலும் திருத்தங்கள் பெற நாம் போராடலாம் என்றார் திலகர். முடிவிலே அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை என்று காங்கிரஸ் மகாசபை தீர்மானம் செய்தது.

சத்தியமான வழியில் சுதந்திரப் போராட்டத்தை நடத்த மகாத்மா காந்தி முன் வந்தார். அதற்கு ஒரு திட்டமும் வகுத்தார். அது ஒத்துழையாப் போர் முறை எனப்படும்.

" அரசாங்கம் அமைக்கும் சட்ட சபைகளில் புகுவதில்லை. ஆங்கிலக் கலாசாலைகளுக்கு மாணவரை அனுப்புவதில்லை. அன்னியச் சரக்குகளை வாங்குவதில்லை," என்பன அத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாம். அன்றியும் மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் உற்பத்தி, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை இவையும் வேறு சில அம்சங்கள் ஆகும்.

மகாத்மா காந்தி முன்னின்று அப்போரை நடத்தி வந்தார். காங்கிரஸ்காரர்கள் அத் திட்டத்தின்படி செயலாற்றி வந்தனர்; வரவே, தேச மக்கள் அம் மகா சபையைத் தழுவி நின்றனர்; அரசாங்கத்தின் வாக்கினுக்கு எதிர்வாக்கு ஏற்பட்டதைக் கண்டு அதிகார வர்க்கம் திகைத்தது. அரசப் பிரதிநிதியும் மனங் குழம்பி மயங்கினார்.

தேச மக்களிலே ஒரு சாரார் அத்திருத்தங்களை ஏற்றுக் கொண்டதனால், அரசாங்கத்துக்குத் துணிவு பிறந்தது ; பிறக்கவே, காங்கிரஸ்காரரில் பதினாயிரக் கணக்கான மக்களைச் சிறைக்குள் தள்ளியது ; முடிவில் மகாத்மா காந்தியையும் ஆறு வருஷத் தண்டனைக்கு ஆளாக்கியது.

மூன்று வருஷ காலம் மும்முரமாக அப்போர் நடந்து வந்தது. முடிவிலே தேசம் சிறிது களைத்துப் போயிற்று. அதிகார வர்க்கத்தை அண்டி நின்ற மக்கள் சட்ட சபைகளிலே புகுந்து, தேசத்துக்கு விரோதமாக நடந்து வந்தனர்; சிறையிலிருந்து விடுதலையான பண்டித **மோதிலால் நேரு, சித்த ரஞ்சன தாஸர்** இவர்கள் அச் சுயநலக்காரரை அகற்ற எண்ணி, **சுயராஜ்யக் கட்சி** என்ற கட்சி கண்டனர்; அக்கட்சியினரே சட்டசபைகளுக்குள் புகுந்து, அதிகாரவர்க்கத்துடன் அதிதீவிரமாக மல்லுக்கு நின்றனர்; அது கண்டு அவ் வர்க்கம் நடுங்கிற்று. இந்தியா மந்திரியாக இருந்தவரும் திடுக்கிட்டுப்போனார்.



அதன்மேல் இந்தியர் அனைவரும் சேர்ந்து ஒரு முகமாக அரசியல் திருத்தமொன்று வகுத்து உரைத்தால், அதனை ஏற்றுக்கொள்ளுவதாக அம்மந்திரி அறிவித்தார். அவ்வாறே பாரத புத்திரர் எல்லாரும் ஒரு திட்டம் வகுத்து விடுத்தனர். அதனை அம்மந்திரி ஏற்றுக்கொள்ளவில்லை.

அப்பால் ஸைமன் என்பவரைத் தலைவராகக் கொண்டு ஆங்கிலேயரிலே ஓர் எழுவர் இங்கிலாந்திலிருந்து இங்கு வந்து, அரசியல் திருத்தத்தை ஆராய்ந்து இந்தியா மந்திரிக்கு அறிவிக்க முயன்றனர் ; **ஸைமன் கமிஷன்** என்ற சபை சென்ற இடமெல்லாம் அதனை மக்கள் புறக்கணித்தனர் ; 'திரும்பிப் போ' என்று கூக்குரல் எழுப்பினர் ; அதனால் அக் கமிஷன் வந்த வழியே திரும்பிப் போக நேர்ந்தது.

சட்டத்தை ஒட்டிய வழியில் சண்டை போட்டும் அரசாங்கம் இணங்குவதாக இல்லை. ஆதலின் சட்டத்தை மீறிப் போர்முறையை மீண்டும் வகுத்தார் மகாத்மா காந்தி.

# 19. உப்புச் சண்டை

**நியாயத்தையும் தர்மத்தையும் தழுவிய வழியிலேயே** காந்தி மகான் போர் தொடுத்தார். அஹிம்சை என்பதே அவரது போர் முறையின் முக்கிய ஆயுதம்; சத்தியமும் சீலமுமே கவசங்களாம்; உப்புச் சண்டையும் அவ்விதமே உதித்து ஓங்கியது.

உப்புக் காய்ச்சி விற்றல் அன்று அரசாங்கத்தின் ஏகபோகமான உரிமை. கடல் நீரிலிருந்து மலைமலையாக உப்பை எளிதில் காய்ச்சலாம். அதில் அரசாங்கம் அதிக இலாபம் அடைந்து வந்தது. ஏழை முதல் அரசன் வரையில் அனைவருக்கும் உப்பு இல்லாமல் முடியாது.

ஆதலினால், அரசாங்கத்தின் ஏகபோகமான உரிமை தொலைய வேண்டும் என்று மகாத்மா விரும்பினார்; எல்லாரும் உப்புக் காய்ச்சும் உரிமையை மேற்கொண்டு உப்புச் சட்டத்தை மீற வேண்டும் என்று உரைத்தார்; தாமும் எழுபது தொண்டர்களுடன் **தண்டி** நகரிலே உப்பளத்தைத் தாக்கப் புறப்பட்டார்.

முன்னதாகவே அரசாங்கத்துக்கு அவர் ஓர் இறுதிக் கடிதம் அனுப்பினார்; பின்பே தண்டி நகரம் சேர்ந்து, உப்பை அள்ளினார்; இதற்குள் அயல் நாடுகள் அப் போரை அறிந்து, அதன் போக்கை நன்கு கவனித்து வந்தன. அயல் நாட்டுப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் இங்கு வந்து அப் போர் முறையை நேரில் கவனித்து வந்தனர். அவர்களின் மூலம் உலகெங்கும் அப் போரின் விவரம் பரவியது.



ஆங்காங்கு ஆயிரக் கணக்கில் மக்கள் சேர்ந்து, கடலோரங்களிலும் பிற இடங்களிலும் உப்பைக் காய்ச்சி வந்தனர். அரசாங்கம் அது கண்டு அடிதடியில் இறங்கிற்று. தமிழகத்திலே **வேதாரண்யம்** என்னுமிடத்தில் உப்புக் காய்ச்சிய தொண்டர்கள் புளியங்கொம்பினால் அடிபட்டனர். உப்புச் சண்டையில் இறங்கியுள்ள மக்களுக்கு யாதோர் ஆதாரவும் கிடைக்காவண்ணம் அதிகாரிகள் முனைந்து முயன்றனர்.

ஆனாலும் தேசம் ஒரு முகமாகத் திரண்டு கொந்தளிப்புக் கொண்டு நின்றது; மகாத்துமா காந்தி உள்பட எண்ணிறந்த தலைவர்களையும் தொண்டர்களையும் பிடித்துச் சிறைக்குள்ளே தள்ளியும், போரின் வேகம் சிறிதும் குன்றாமல் நாளுக்கு நாள் பெரிதும் ஓங்கி வளர்ந்து வந்தது. வரவே அரசுக்கு அச்சமும் நடுக்கமும் எடுத்தன.

அதன் பயனாக, ஆங்கில சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியான **இர்வின்** பிரபு என்பவர் நமது தேசப் பிரதிநிதியான காந்தியை ஓர் உடன்பாட்டினுக்கு அழைத்தார்; மக்கள் தமது உபயோகத்துக்கு வேண்டிய அளவு உப்பைக் காய்ச்சிக் கொள்ளலாம் என்று எழுத்து மூலம் உறுதி மொழியும் தந்தார்.

மேலும், "இந்தியாவின் அரசியலை வகுக்க, இங்கிலாந்திலே வட்ட மேஜை மகாநாடு ஒன்று கூட்டுகிறோம். இந்தியாவின் பிரதிநிதிகளை வரவழைக்கிறோம். காங்கிரஸ் மகாசபையும் அதில் கலந்து கொண்டு உதவி புரிய வேண்டும்", என்றும் இர்வின் பிரபு வேண்டிக் கொண்டார். ஆங்கில அரசரின் விருந்தாளியாக மகாத்மாவை இலண்டனுக்கு அழைத்துச் செல்லவும் ஆங்கில மந்திரிகள் ஏற்பாடு செய்தனர்.

அவ்வாறே மகாத்மா, இலண்டன் மா நகரம் சென்ருர்; அம் மகாநாட்டின் போக்கை அறிந்தார்; உடனே இந்தியாவின் அரசியலே இந்தியரிடம் ஒப்படைத்தால் அல்லாமல், இங்கே அரசியல் போராட்டம் இம்மியளவும் தணியாது என்று எச்சரிக்கை செய்தார். இனிமையாகப் பேசி மழுப்பிவிடலாம் என்று ஆங்கில மந்திரிகள் எண்ணிய எண்ணம் வீணுயிற்று.

இதற்கு இடையிலே இங்கு இருந்த அதிகாரிகளோ அந்த **காந்தி-இர்வின்** உடன்பாட்டை மீறி நடந்து, தமது தலைவர்களை எல்லாம் மறுபடியும் சிறைக்குள் தள்ளி வந்தார்கள். அது கண்டு மீண்டும் போர் முரசு கொட்டினுர் மகாத்மா.

## 20. கொடுங்கோல் தர்பார்

அரசாங்கத்தில் உத்தியோகம் வேண்டும் என்றே ஆதியில் காங்கிரஸ் மகாசபை போராடியது. அப்பால் திலகர் தோன்றிச் சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று கர்ஜனை செய்ததும், ஆங்கிலக் குடை நிழலுக்கு உட்பட்ட சுய ஆட்சி வேண்டும் என்று அம் மகாசபை கருத்துக் கொண்டது. 1906-ம் ஆண்டு கல்கத்தாவில் கூடிய காங்கிரஸில்தான், சுயராஜ்ய இலட்சியம் உதிக்கலாயிற்று.

ஆனுலும், சுயராஜ்யம் என்று வற்புறுத்திக்கூற மிதவாதிகளிலே பலரும் தயங்கினர்; 1907-ம் ஆண்டில் சூரத் நகரிலே காங்கிரஸ் மகாசபை முறிந்து போனதும் தீவிர வாதிகள் அச் சபையிலிருந்து விலகிக் கொண்டனர். அதன்பின் ஒரு பத்து வருஷ காலம் மிதவாதிகளே அச்சபையில் ஆதிக்கம் பெற்றிருந்தனர்.

அன்னி பெஸண்ட் அம்மையின் முயற்சியினுல் 1916-ம் ஆண்டு தீவிர வாதிகளும் அச்சபையில் வந்து சேர்ந்தனர். சேரவே, அச்சபை வலுக்கொண்டது. காந்தி மகான் ஒத்துழையாப் போர் துவக்கியதும், அச்சபையின் செல்வாக்கும் சிறப்பும் மிக விரிந்து ஓங்கின.

அப்போது, இங்கிலாந்துக்கு உட்பட்ட சுயராஜ்யம் அடைவதா, அல்லது இங்கிலாந்தை விட்டுப் பிரிந்து நின்று சுயராஜ்யம் பெறுவதா, என்னும் கருத்து வேற்றுமைகள் உதித்தன. 1929-ம் ஆண்டு லாகூரிலே அம் மகாசபை கூடிய பின்பு தான், பரிபூரணமான சுயராஜ்யமே இலட்சியமென ஏற்பட்டது. அந்த இலட்சியத்தைத் தழுவியே உப்புச் சண்டை நடைபெற்றது.

அச் சண்டையிலே அரசாங்கத்துக்கும் காங்கிரஸுக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டும், அதனை உடைத்தெறியவே அதிகார வர்க்கம் முனைப்புக் கொண்டதனால் மீண்டும் உக்கிரகமான போராட்டம் உண்டாயிற்று. மாமன் காணிபோல் இந்தியாவை ஆண்டு அனுபவித்து வந்த அதிகார வர்க்கத்தார் நமது பரிபூரண சுயராஜ்ய இலட்சியங் கண்டு உள்ளத்திலே கொதிப்புக் கொண்டனர்.

அதனை அறிந்த காங்கிரஸ் மகா சபையும் முடிவான போராட்டம் புரியவே முற்பட்டது. தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், சொத்துப் பறிமுதல் முதலிய அனைத்தையும் அதிகாரிகள் கையாண்டு, கொடுங்கோல் புரியத் தலைப்பட்டனர். காங்கிரஸைக் கசக்கிப் பிழிந்துவிட வேண்டிய முயற்சிகள் நடந்தன.

அவசரச் சட்டங்கள் செய்து அதிகாரிகள் ஆட்சி நடத்தினார்கள்; காங்கிரஸ் மகா சபையைச் சட்ட விரோதமான சபை என்று பறைசாற்றினர், காங்கிரஸ்காரர் அனைவரையும் பிடித்துச் சிறைக்குள் தள்ளினார்கள்; ஆயிரக் கணக்கில் காங்கிரஸ் காரருக்கு அபராதம் விதித்தார்கள். சுருங்கச் சொன்னால் சித்திரவதையே செய்து வந்தார்கள் என்னலாம்.

அவ்வளவு கோரமும் கொலையும் கொக்கரித்து நின்றும், ஆண்டு தோறும் வழக்கம்போல் காங்கிரஸ் மகாசபை நடந்து வந்தது. காங்கிரஸைச் சட்ட விரோதமான சபை என்று ஆணையிட்டும், காங்கிரஸ்காரருடன் யாரும் எவ்விதமான தொடர்பும் கொள்ளக்கூடாதென உத்தரவு போட்டும், தேசத்தின் நாலு



பக்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து, காங்கிரஸ் மகாசபையை நடத்தி வந்தது கண்டு, அதிகார வர்க்கத்துக்கு ஆச்சரியமும், திகிலும், ஆத்திரமும், அகங்காரமும் ஒருங்கே உதித்து ஓங்கின.

அம் மகாசபையைப் பொசுக்கிவிட அதிகாரிகளால் ஆகவில்லை. ஆதலின் அதனை ஓரளவேனும் திருப்தி செய்யக் கருதி அதிகார வர்க்கம் 1935-ம் ஆண்டில் அரசியலைத் திருத்தியது. அத் திருத்தத்தினுக்கு இணங்க ஆங்காங்கே சட்டசபைகளுக்குத் தேர்தல் நடத்த அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்கள்.

மகா சபையைக் பொசுக்காவிட்டாலும் நசுக்கிவிட்டோம் என்றே அதிகார வர்க்கம் எண்ணிக் கிடந்தது. ஆனாலும் தேச மக்களோ அம் மகாசபையிடம் கொண்டிருந்த பற்றிலும் பக்தியிலும் சிறிதும் குறைந்து விடவில்லை. சட்ட சபைகளுக்கான தேர்தல்களே அதனை உலகறியச் செய்தன. எவ்விதம் என்று பார்ப்போம்.

## 21. காங்கிரஸ் ஆட்சி

**சட்ட சபைத் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் போட்டி** போட்டனர். ஒன்பது மாகாணங்களில் அவர்களுக்கே பெருமித வெற்றி கிட்டியது. கிட்டவே காங்கிரஸின் செல்வாக்கைக் கண்டு அரசாங்கம் திகைத்தது. அதிகார வர்க்கம் கலங்கியது.

மக்களால் தேர்ந்து எடுக்கப் பெற்ற காங்கிரஸ்காரர் அனைவரையும் பண்டித ஜவாஹர்லால் நேரு கூட்டி வைத்தார். அவர்கள் அனைவரும் ஆண்டவன் அறிய ஒரு பிரமாணம் கொண்டனர். அதன் கருத்து இது :—

"ஆங்கிலேயர் செய்துள்ள அரசியல் திருத்தத்தை நாங்கள் ஏற்க மாட்டோம். எங்கள் தேச அரசியலை வகுக்க ஆங்கிலேயருக்கு உரிமை கிடையாது. இத்தேச அரசியலை மக்களே தங்களுக்கு உகந்தவாறு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். பரிபூரணமான சுய ராஜ்யத்தை நிறுவவே நாங்கள் முயலுவோம்."

அந்தப் பிரமாணத்தை அறிந்ததும் அரசாங்கத்துக்கு அதிர்ச்சி உண்டாயிற்று ; ஆதலினால் காங்கிரஸ காரரையே அழைத்து, மந்திரி சபைகளை அமைக்கும்படி வேண்டிக் கொண்டது. அரசியல் திருத்தத்தில் காங்கிரஸ்காரருக்குப் பிடித்தம் இல்லையானாலும், மந்திரிகளாக அமர்ந்து இஷ்டப்படி அரசியலை நடத்தவே முனைந்தார்கள்.

அதுவரையில் சர்வாதிகாரமும் படைத்திருந்த மாகாண கவர்னர்களோ அம் மந்திரிகளின் ஆட்சிக்கு



இணங்கி நடந்து வந்தார்கள். ஏறக்குறைய இரண்டரை வருஷ காலம் மாகாணங்களிலே காங்கிரஸின் ஆட்சி அற்புதமாக நடைபெற்றது. கவர்னர்களும் இங்கிலாந்தின் மந்திரிகளும் அதனை அறிந்து ஆனந்தம் அடைந்தனர் ; பாராட்டியும் பேசினர்.

அவ்விதம் இருக்கையில் 1936-ம் ஆண்டிலே ஐரோப்பாவில் இரண்டாவது உலக மகாயுத்தம் மூண்டது. அதில் நம் மந்திரிகளைக் கலந்துகொள்ளாமல், இங்கிலாந்தின் மந்திரிகள் இந்தியாவையும் இழுத்து விட்டனர். அந்த அவமதிப்பைக் கண்டு காங்கிரஸ் கொதித்தது.

ஐரோப்பாவின் நன்மைக்காக நடக்கும் யுத்தத்தில் நம்மையும் இழுத்துவிட்டதனால் நமது ஆள் பலமும், படை பலமும், பண பலமும் வீணே செலவாகும். அதனால் இந்தியாவுக்குப் பெருங் கேடே நிகழும். அந் நிலையில் மந்திரிகளாய் இருக்க நம்மவர் ஒப்பவில்லை.

ஆதலினால் காங்கிரஸ்காரர் தாம் வகித்து வந்த மந்திரிப் பதவிகளை வீசியெறிந்து வெளியே வந்துவிட்டார்கள்.

அப்போது காங்கிரஸ் மகாசபையில் அக்கிராசனராக இருந்தவர் **சுபாஷ் சந்திர போஸ்** என்பவர். அவர் அதி தீவிர தேசபக்தர். இங்கிலாந்துடன் போராடி நமது இலட்சியத்தை எய்த இதுவே தருணம் என்று அவர் வாதித்தார். மகாத்மா காந்தி அதற்கு இணங்கவில்லை. ஆபத்துக் காலத்தில் நாமும் இங்கிலாந்துக்குத் தீங்கு இழைக்க வேண்டாம் என்பதே மகாத்மாவின் கருத்தாம்.

மகாயுத்தம் என்று சொல்லி, இங்கிருந்து படையும் பணமும் ஏராளமாக ஆங்கிலேயர் திரட்டிச் சென்றனர். அதனால் தேச ஜனங்கள் தத்தளிக்க நேர்ந்தது. அது பற்றி அந்த யுத்தத்தில் எங்களுக்கு ஈடுபாடு கிடையாது என்று மந்திரிகளும், சட்டசபை அங்கத்தினர்களும் கூறி ஒப்புக்குச் சுதந்திரப் போர் துவக்கினர்.

அவர்களை அரசாங்கம் சிறை செய்து காவலில் வைத்தது. இங்கிலாந்தின் நலத்தைக் கருதி, சுதந்திரப் போரை மும்முரமாக நடத்த மகாத்மா விரும்பவில்லை. ஆனால் ஜனங்களோ அரசாங்கத்தின் போக்கைக் கண்டு மிகப் பிணங்கியும் சுணங்கியும் நின்றார்கள்.

மகாயுத்தம் கடுமையாக நடந்து வந்ததனால் இங்கிருந்து பொருளையும் சரக்கையும் அரசாங்கம் அடிபிடி கட்டாயமாக எடுத்துச் சென்றது. மக்களோ வயிறு காய்ந்து வாடி வதங்கினர். பஞ்சநிலை தோன்றியது.

## 22. சுபாஷின் முனைப்பு

**தேசத்தின் நிலை கண்டும், மகாத்மாவின் தயக்கம் அறிந்தும்,** சுபாஷ் சந்திர போஸுக்கு உயிர்த் துடிப்பு ஓங்கியது. உடனே அரசாங்கம் அவரைச் சிறை செய்து அவரது வீட்டிலேயே பாதுகாப்பில் வைத்திருந்தது: சோம்பிக் கிடக்க அவர் மனம் ஒப்பவில்லை.

ஆதலினால், "இங்கிலாந்தைத் தாக்க இதுவே சமயம். இச்சமயம் தவறினால் வேறுசமயம் வாய்ப்பது அரிது. எனவே படைதிரட்டி இங்கிலாந்தை எதிர்த்து இலட்சியத்தை எய்த வேண்டும்," என்று, அவர் முடிவு கட்டினார்; ஒருநாள் மாயமாக இங்கிருந்து மறைந்து போனார்.

அவர் எங்கே போனார்? எவ்விதம் வீட்டைவிட்டு வெளியேறினார்? என்று அதிகாரிகள் அறிய முடியவில்லை; திகைப்பு மிகுந்து தேம்பி நின்றனர். அவரோ மாறுவேடம் புனைந்து, ஜெர்மனி சேர்ந்து, ஹிட்லரைக் கண்டு பேசினார்; ருஷியாவுக்கும் போனார்; பின்பு ஜப்பானுக்கும் சென்றார்.

ஆங்கிலேயரின் பகைவரது துணைகொண்டு இங்கிலாந்தைத் தாக்கி. சுயராஜ்யம் அடையவேண்டும் என்பதே அவர் கருத்து. ஆனாலும் இந்தியாவை எந்த அன்னியரிடமும் கட்டுப்படுத்த அவருக்கு உத்தேசம் கிடையாது.

அவர் ஜப்பான் தேசம் சேர்வதற்குள் கிழக்கு ஆசியாவிலே பர்மா, மலாய்த் தீவுகள், சிங்கப்பூர் இவைகளை ஆங்கிலேயரிடமிருந்து ஜப்பானியர் பிடித்

துக் கொண்டனர். அதனால் ஆங்கிருந்த இந்தியப்படைஞர் ஆயிரக் கணக்கில் ஐப்பானியரிடம் சிறைப்பட நேர்ந்தது. மேலும் இலட்சக் கணக்கில் அங்கிருந்த நம்மவர் திகைத்துத் திண்டாடினர்.

இந் நிலையை அவர் அறிய வந்தார்; உடனே ஜப்பானியரின் கூட்டுறவு கொண்டு, இந்திய வீரரை யெல்லாம் சிறை மீட்டார்; திண்டாடி நின்ற இந்தியருக்கு ஆறுதல் கூறினார்; பின்பு அந்த இந்திய வீரரையும் பிறரையும் கொண்டு ஒரு லட்சம் போர் வீரரைத் திரட்டினார்.

அத் தறுவாயில் பர்மாவிலிருந்த ஜப்பானியப் படைகள் நமது தேசத்தின் வடகிழக்கே உள்ள அஸ்ஸாம் நாட்டின் மீது படை யெடுத்து வந்தன. அவரும் தமது படை வகுப்புடன் இந்தியாவுக்குள் புகுந்தார்; மணிபுரம் என்னும் சமஸ்தானத்திலுள்ள **இம்பால்** என்னும் நகரை அடைந்து அங்கே நமது சுயராஜ்யக் கொடியை உயர்த்தினார்.

இதற்கு இடையிலே இந்தியாவின் வளத்தை யெல்லாம் ஆங்கிலேயர் உறிஞ்சிவிட்ட படியால் இங்கே பஞ்சநிலை காரணமாக மக்கள் பலரும் பசியால் வாடி வதங்கினர்; வங்காளத்திலே முப்பது இலட்சம் ஜனங்கள் பசிநோய் தாங்காமல் மாண்டு மடிந்தனர். சுபாஷ் போஸ் அதனை அறிந்து இரக்கம் மிகுந்தார்; ஏராளமாக அரிசி மூட்டைகளை அனுப்பி உதவுவதாக அறிவித்தார். ஆனால் அதிகார வர்க்கம் அந்த உதவியை ஏற்றுக் கொள்ளவில்லை.

கிழக்கு ஆசியாவிலே பதினாயிரக் கணக்கான இந்திய வீரரைக் கைவிட்டு ஆங்கிலேயர் ஓடிவந்த



செய்தி அங்குள்ள இந்தியச் சேனைக்கு எட்டியது; அது பற்றி அச் சேனை பெரிதும் வருந்தியது. இங்நிலையில் சுபாஷ் போஸிடம் சேவகம் புரிந்த இந்திய வீரரில் சிலர், ஆங்கிலேயரிடம் சிக்கிக் கொண்டனர்.

சிக்கிய வீரரில் சிலரை இங்கிருந்த அதிகாரிகள் சுட்டுக் கொன்றனர்; சிலரை விசாரணை செய்து தண்டிக்கக் காவலில் வைத்திருந்தனர்; இதனை அறிந்த மக்களும் இந்திய வீரரும் மனங்குழம்பி மறுக நேர்ந்தது. நேரவே ஆங்கிலேயருக்கு உயிர்நிலை போன்ற சேனையும் போலீஸும் பிணங்கி நின்றன. அவ்வேளை ஜப்பானியரும் பெரும் படையுடன் இந்தியாவில் புக முயலா நின்றனர். இது அறிந்து இங்கிலாந்தின் மந்திரிகளுக்கு உதைப்பு எடுத்தது.

# 23. இங்கிலாந்தின் ஏக்கம்

ஜெர்மனியின் தலைவரான ஹிட்லர் என்பவர் ஆகாய விமானங்களை ஏவி, இங்கிலாந்தின் மீது வெடி குண்டுகளைப் பொழியச் செய்தார். அதனால் இலண்டன் மா நகரிலே பற்பல அரிய பெரிய கட்டடங்களும், மாளிகைகளும் அழிந்துபோயின. ஆங்கிலேயரில் பலரும் பூமிக்குள்ளே பாதுகாப்புக்காகச் சுரங்க அறைகளில் வசிக்க நேர்ந்தது.

இங்கிலாந்தை அழித்துவிட வேண்டும் என்பதே ஹிட்லரின் நோக்கம். அதற்கான முயற்சிகளை யெல்லாம் அவர் பெருமிதமாகச் செய்து வந்தார். அந்நிலையில், கிழக்கு ஆசியாவிலே இங்கிலாந்தின் படைகள் ஜப்பானிடம் தோல்விமேல் தோல்வி கொண்டு, பின் வாங்கி ஓடிவந்தன. அதனால் உன்னத பதத்திலிருந்து இங்கிலாந்து வீழ்ந்து வந்தது.

இந்தியாவிலோ மக்கள் அனைவரும் மனம் மாறுபட்டு நின்றனர். இங்கிலாந்தின் மீது இந்தியருக்கு வெறுப்பும் கடுப்பும் ஓங்கி நின்றன. வெற்றிமேல் வெற்றிபெற்று வரும் ஜப்பானிடம் இந்தியருக்குப் பற்று மிகுந்துவிடும் என்பதாக இங்கிலாந்து ஏங்கி அஞ்சிக் கிடந்தது.

போரின் போக்கு மிக மோசமாக இருக்கையில் இந்தியாவை ஒருவாறு திருப்தி செய்து, அதன் மனப் பூர்வமான உதவியை நாடவேண்டும் என்று இங்கிலாந்தின் மந்திரிகள் பரபரப்புக் கொண்டனர்; அது பற்றி, தம்மில் ஒருவரான **கிரிப்ஸ்** என்பாரை இங்கே பேச்சு நடத்த அனுப்பினார்கள்.



அவரும் அவ்வாறே இங்கு வந்து, அரசியலைத் திருத்தம் செய்வதாகவும், அதனை மதித்து யுத்த முயற்சியில் 'மேலும் நம்மவர் ஈடுபடவேண்டும் என்றும் நமது தலைவர்களிடம் சொன்னார். இங்கிலாந்தின் நலத்தை மட்டும் கருதியே அவர் பேசுவதை நமது தலைவர்கள் நன்கு உணர்ந்து அவருடன் நுணுக்கமாக விவாதம் செய்தனர்.

அவரோ, தமது சொல்லழகினால் நமது தலைவர்களை மயக்கப் பார்த்தார். ஆயினும் நமது தலைவர்கள் மதிமோசம் போகவில்லை. ஆதலின் அவர் தமது வாயிழந்து, வந்த வழியே நோக்கிச் சென்றார். அவரை மடக்கிய தலைவர்கள் மீது குறையும் வசையும் கூறினார்.

இதற்குச் சற்று முன் பின்னதாக, இங்கிலாந்தின் முதல் மந்திரியான **சர்ச்சில்** என்பவரும், அமெரிக்காவின் தலைவரான **ரூஸ்வெல்ட்** என்பவரும், "அட்லாண்டிக் சாஸனம்" என்னும் அறிக்கை யொன்று வெளியிட்டனர். ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் தேசங்களுக்கு விடுதலை தேடித் தருதலே அச் சாசனத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதன்படி, இந்தியாவுக்கும் நல்லகாலம் பிறக்கும் என்று சிலர் எதிர்பார்த்தனர். ஆனால் இந்தியாவின் விஷயத்தில் அச் சாசனம் செல்லாது என்று சர்ச்சில் துரை அறிவிக்கலானார். அது அறிந்ததும் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போல் இந்திய மக்களின் நெஞ்சம் எரியத் தொடங்கியது.

ஆற்றோடு போனாலும் போவேன், ஓடக்காரனுக்கு அரைக் காசும் கொடேன் என்பதுபோல் இங்கிலாந்து

நடந்துவருதல் கண்டு, இந்திய மகாஜனங்கள் சீற்றம் மிகுந்தனர். பொங்கியெழும் பான்மையும் அவர்களிடம் தலைதூக்கியது. அதுகண்டு, மகாத்மா காந்தியின் மனம் சலிக்கத் தொடங்கிற்று.

சுதந்திரத்தை மறுப்பது ஒன்று, இந்தியாவின் வளத்தையெல்லாம் அடியோடு வாரிச் செல்வது ஒன்று, அதனால் இந்திய மக்கள் சோற்றுக்கும் இல்லாமல் திண்டாடுவது ஒன்று, இவையும் பிறவும் கூடிக் கொள்ளவே, தேச நிலைமை யாதாகுமோ என்று காந்தி மகான் நெடுநாளாகவே வருந்தி நின்றார்; நீண்ட ஆலோசனையும் செய்தார்.

அதன் விளைவாக, இறுதியான போராட்டத்தை நடத்தியாக வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. இல்லையானால் அன்றளவும் அவர் போதித்துவந்த அஹிம்சை காற்றில் பறக்கும், மக்கள் மண்டி யெழுந்து மீண்டும் பயங்கரச் செயல்களில் மனம் வைப்பர், வைத்தால் தமது ஆயுள் இலட்சியம் சிதறிப் போம், என்று அவர் சிந்தனை பூண்டார்.

## 24. வெள்ளையரே! வெளியேறுக!

**காந்தி மகான் வைசிய குலத்தில் வந்தவர். ஆங்கிலேயரும்** வாணிபத்திலேயே கண்ணுள்ள மக்களாம். வர்த்தகம் புரியவந்து, அவர்கள் இங்கு அரசு கொண்டனர். ஆதலின் அவ் வர்த்தகத் துறையிலேயே அவர்களை வீழ்த்தி, நாட்டை மீட்க வேண்டும் என்று அம் மகான் திட்டமிட்டார்.

சீமைத் துணி காரணமாக, இங்கிருந்து கோடிக்கணக்கான திரவியம் போவதைத் தடுக்கவே, கைராட்டையில் நூல் நூற்று, அந்நூலினால் கதராடை நெய்து கட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் ஓர் உபாயம் கண்டார். அது ஓரளவுக்கு மேல் பலன் அளித்தது. கருதிய பலனை முழுவதையும் எய்தவே, அவர் போர் முரசு கொட்டினார்.

அவர்களோ, உடும்புப் பிடிபோல் இத்தேசத்தைக் கட்டியாளக் கருதி நின்றனர். அவர்களின் ஆட்சிக்கு அடிப்படையாக இருந்தது வர்த்தகமே. ஆதலின் அந்த ஆட்சியைப் பறிக்கவே அவர் இறுதியான போர் முறை ஒன்றைக் குறித்து நெடுநாளாகச் சிந்தனை செய்து வந்தார்.

1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ந் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயிலே கூடிற்று. அப்போது 'ஆங்கிலேயரே இத்தேசத்தை விட்டு வெளியேறுக' என்று அவர் அழுத்தமாகக் கூறினார். தேசத்தை விட்டு வெளியேறுதல் என்றால், மூட்டை முடிச்சுக்களை எடுத்துக்கொண்டு மனைவி மக்களுடன் ஓடிப்போய் விடவேண்டும் என்பது அன்று,

இந்தியாவிலே ஆட்சி புரியும் உரிமையைக் கை விட்டு வெளியேற வேண்டும் என்பதே அதன் பொருளாம். நாட்டு மக்களைப் போல் அவர்கள் இங்கே வாழ்வதில் தடை கிடையாது. அரசாளும் அகம் பாவம் அகன்று ஒழியவேண்டும் என்பதே கருத்தாம்.

அவ்விதம் ஆங்கிலேயருக்கு அவர் எச்சரிக்கை செய்ததுடன் நிற்கவில்லை. நம்மவரை நோக்கி அவர், "அவர்கள் வெளியேறும் வண்ணம், ஒன்று செயலாற்றுங்கள் அல்லது செத்து மடியுங்கள்" என்று அறிவுறுத்தினர். காங்கிரஸ் கமிட்டி அதனை முழுதும் ஒப்புக் கொண்டது.

செயலாற்றுவதற்கு ஏற்ற வகைதுறைகளை அவர் வகுத்தும் தொகுத்தும் வைத்திருந்தார். அவற்றைக் கையாளுமுன், அரசப் பிரதிநிதியைக் கண்டு பேச விரும்பினர். அப் பிரதிநிதியுடன் பேசாமல் செயலில் இறங்க அவருக்கு உத்தேசம் இல்லை.

'ஆங்கிலேயரே! வெளியேறுக' என்ற வசனத்தைக் கேட்டதும் இங்கிருந்த ஆங்கில அரசுக்கும், ஆங்கில மக்களுக்கும் அடங்கா ஆத்திரமும் பயமும் ஒருங்கே தோன்றின. தோன்றவே, அரசாங்கம் மதிதவறி நிலை பிசகி இத் தேசத்தின் தலைவர்களை எல்லாம் இரவின் கடையாமத்திலே சிறை செய்தது. மகாத்மாவையும் இரவு மூன்று மணிக்கு அரசாங்கம் சிறை செய்து கொண்டு போய்விட்டது.

திடீரென்று தேசத் தலைவர்களை எல்லாம் சிறை செய்யவே, பாரத மக்கள் பதைபதைத்தனர். அத் தலைவர்களை எங்கே கொண்டு போனார்கள், என்று



ஒருவருக்கும் தெரியவில்லை. திகைப்பூண்டை மிதித்தவர்கள் போல் தேச ஜனங்கள் திகைப்பு மிகுந்தனர்.

அன்றியும் தேசத்திலே ஆங்காங்கு இருந்த காங்கிரஸ்காரர் அனைவரையும் அதிகாரிகள் சிறை செய்து காவலில் போட்டு வந்தனர்; மக்கள் அதுகண்டு மருட்சி கொண்டுவிட்டனர்; அரசாங்கம் நம் அனைவரையுமே பிடித்துப் போட்டுவிடுமோ என்றும் ஏங்காதார் கிடையாது. காந்தியும், ஜவாஹரும் இதர பிரபல தலைவர்களும் வெளிநாட்டினுக்குக் கொண்டு போகப்பட்டனர் என்ற வதந்தி எழுந்தது.

அருமைத் தலைவர்களைக் கொண்டு போவதா என்று இந்திய மக்களிலே படபடப்பு அடையாதார் இல்லை: தலைவர்களைத் துறந்து தவித்து நிற்கவும் மக்களுக்கு மனம் இல்லை. ஆதலின் செயலாற்றுவோம் அல்லது செத்து மடிவோம் என்ற எண்ணம் ஓங்கி விட்டது.

# 25. ஆகஸ்ட் புரட்சி

**மாலுமி இல்லா மரக்கலம்போல் ஆயிற்று நமது பாரத** தேசம். மகாத்மா காந்தி நம்மவருக்குக் கண் கண்ட தெய்வம். பண்டித ஜவாஹர்லால் நேருவோ மானிடரில் மாணிக்கம். அந்த இருவரும் பிறரும் போயின பின்பு ஆங்கில அரசை இங்கே நிலைக்க வைப்பதா என்று மக்களில் ஒரு சாரார் வீறிட்டு எழுந்தனர்.

அவ்வளவில் நமது தேசத்திலே இமயம் முதல் குமரி வரையில் ஓரே கொதிப்பும் துடிப்பும் ஓங்கிவிட்டன. உள்ளத் தீயும் கொழுந்துவிட்டது. விடவே புகை வண்டிகள் கவிழ்ந்தன; புகை வண்டிப் பாதைகளும் சிதைந்தன; தந்திக் கம்பிகள் அறுந்தன; பாலங்கள் உடைந்தன; கச்சேரிகள் தீக்கு இரையாயின.

சிற் சில இடங்களில் ஆங்கில ஆட்சியின் சின்னங்களெல்லாம் அடியோடு மறைந்துபோயின. மக்களின் ஆட்சியே நிலவியது. அதிகாரிகளும் சேவகரும் இருந்த இடம் தெரியவில்லை. அதிகாரிகளை அண்டி வாழ்ந்தோரும் உயிருக்கு அஞ்சி ஒளிந்துகொண்டனர்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்பர். தேசத் தலைவர்களைச் சிறை செய்துவிட்டால் தேசம் தணிந்துவிடும் என்று அரசாங்கம் எண்ணிக் கிடந்தது. ஆனால் தேச மக்களோ அரசின் மதிப்பைத் தவிடு பொடி செய்து ஆர்ப்பரித்தனர். அது கண்டு அரசாங்கம் அச்சப் பேய்க்கு ஆளாயிற்று.

தமது படைவலியைக் காட்ட அதிகாரிகள் முற்பட்டனர்; போலீஸ்காரரும் ராணுவ வீரரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; விமானங்கள் வெடிகுண்டு வீசிக் கிராமங்களை அழித்தன. ஏட்டிக்குப் போட்டியாக அரசாங்கமும் அக்கிரமமெல்லாம் செய்துவந்தது.



அதிகார அட்டூழியத்தினால் ஆவி துறந்த மக்கள் ஏழாயிரம் ஆவர். காயமுண்டோரோ பதினாயிரக் கணக்காம். சிறையுண்டவர்களோ இலட்சத்துக்கு மேலிருக்கும். பொருள் சேதமோ கோடிக் கணக்கு என்னலாம். இவ்விதமெல்லாம் அதிகாரிகள் கொடுமை இழைத்தும் தேசம் அடங்கினபாடில்லை.

சட்டதிட்டங் கொண்டு அரசாங்கம் ஆட்சி நடத்துதல் மலையேறி விட்டது. எங்கும் இராணுவத்தைக் கொண்டு, துப்பாக்கி முனையைக் காட்டி, வெடி குண்டுகளை வீசி, அல்லோலகல்லோலம் கண்டே அரசு நடந்து வந்தது. இந்த நிலை ஒருமாதம், இரண்டு மாதம் என்றில்லாமல் நாற்பத்து நான்கு மாதகாலம் நீடித்திருந்தது.

அதிகாரிகள் நடத்திவந்த கொள்ளை, கொலை, கொடுமை முதலியன வெளியாகா வண்ணம் இங்குள்ள பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டு இட்டுவிட்டனர் என்றாலும் அவ் விவரங்களோ அமெரிக்கா வெங்கும் பரவின. இங்கிலாந்துக்கும் எட்டின; அங்குள்ள மக்களெல்லாம் திடுக்கிட்டனர்.

இதற்கு இடையில், நமது பெருந் தலைவர்களை அகமத் நகரக் கோட்டைக்குள்ளே காவலில் வைத்திருக்கும் செய்தி வெளியாயிற்று. பின்பே மக்களுக்கு ஓரளவு சாந்தி பிறந்தது. ஆனாலும் அரசாங்கத்தின் கொடுமை கண்டு சிலர் அந்தரங்கத்திலே அரசுக்கு அல்லல் இழைத்து வந்தனர். அதனால் இங்கே அரசாங்கத்தின் யுத்த முயற்சிகள் பெரிதும் தடைப்பட்டன.

ஜப்பானுடன் போர் புரிவதற்கு வேண்டிய துருப்பு களும் தளவாடங்களும் இங்கிருந்தே போய் வந்தன. அப்போருக்கு இந்தியா ஓர் இராணுவ உக்கிராணம் போல் இருந்து வந்தது. ஜனக் கொந்தளிப்பினால் அந்த உக்கிராணம் நிரம்பாமல் வறிதாயிற்று. இந்நிலை கண்டு ஆங்கில மந்திரிகளுக்கு அதிர்ச்சியும் அச்சமும் ஓங்கின. ஆனாலும் இந்தியரின் அரசியல் ஆசையை நிறைவேற்ற அம்மந்திரிகளுக்கு மனம் வரவில்லை.

## 26. தேசியச் சேனை

**நமது தேசத்தின் சுதந்திரத்தை நாடி, மனைவி மக்களையும்** உற்றார் பெற்றாரையும் துறந்து, அயல் நாடு களில் சென்று வசித்தோர் ஆயிரக் கணக்காவர். அத் தகையவர்களில் ஒருவர் **ராஷ் விகாரி கோஷ்** என்பவர். முன்னம் இங்கே அரசப் பிரதிநிதியாக இருந்த **ஹார் டிஞ்சு** பிரபுவின் மீது வெடிகுண்டு வீசியவர்களில் அவர் ஒருவர்.

அவரைச் சிறை செய்ய வேண்டுமென்று ஆங்கில அதிகாரிகள் பகீரதப் பிரயத்தனம் செய்தும் பலிக்க வில்லை. அவர் வெகு தந்திரமாக இந்தியாவிலிருந்து மறைந்து போனார்; ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் வசிக்கும் நம்மவரிடையே அவர் சுதந்திரக் கனலை எழுப்பினார்; முடிவிலே ஜப்பான் தேசஞ் சென்று அவர் வசித்து வந்தார்.

அப்பொழுது, ஆங்கிருந்த நம்மவரிடம் நல்லுறவு கொண்டதுடன், ஜப்பானிய அதிகாரிகளுடனும் நெருங் கிப்பழகி அவர் நேசங்கொண்டார். இரண்டாவது உலக மகாயுத்தம் ஏற்பட்டவுடனே, இங்கிலாந்துக்கு விரோத மாக ஜெர்மனியுடன் சேர்ந்து, ஜப்பான் தேசம் போர் புரிந்தது; அப்போது கிழக்கு ஆசியாவிலே இங்கி லாந்துக்கு உட்பட்ட நாடுகள் பலவற்றையும் பிடித்துக் கொண்டது.

அந்நாடுகளிலே வர்த்தகம் செய்து காலந் தள்ள வும், கூலி வேலை செய்து ஊதியம் பெறவும் கருதி, ஆங் கிருந்த நம்மக்கள் ஏறக்குறைய முப்பது லட்சம் பேர் ஆவர். அவர்களின் நிலைமை கவலைக்கு இடமாயிற்று.

;லாவதாக, அவர்களுக்குத் தைரியம் ஊட்ட வேண்
; அடுத்தபடியாக, அவர்களையெல்லாம் திரட்டி,
தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு உதவி புரிய
ண்டும்.

மலாய்த் தீவுகளிலுள்ள **சிங்கப்பூர்** என்னும் நகரம்
ங்கிலேயரின் கையை விட்டகன்றதும், 1942-ம்
ண்டின் மத்தியிலே அம்முப்பது இலட்சம் மக்களின்
திநிதிகளை அந்த ராஷ் விகாரி கோஷ் வரவழைத்
ர். சுமார் 120 பிரதிநிதிகள் வந்து சேர்ந்தனர். **தாய்
ந்து** எனும் நாட்டின்தலை நகரான **பாங்காக்** என்ற
ரில் எல்லாரும் கூடினர். அக்கூட்டத்தினுக்கு அவர்
மை தாங்கினார்.

"இந்தியச் சுதந்திர சங்கம்" என்பது அப்போது
வப் பெற்றது. அச்சங்கத்தின் கிளைகள் ஆங்குள்ள
மா, தாய்லாந்து, சிங்கப்பூர், ஜப்பான், ஜாவா முத
பற்பல இடங்களிலும் தோன்றின. இந்தியா
சம் சுதந்திரம் அடைவதற்கான உதவி யனைத்தை
செய்தாக வேண்டும் என்பதே அச்சங்கத்தின் முக்
நோக்கமாம்.

ஆரம்பத்திலேயே அச்சங்கத்தின் அங்கத்தினர்
றரை இலட்சம் பேர். வரவர, அங்கத்தினரின்
தொகை பெருத்து வந்தது. இந்திய மக்களையும் இந்
ப வீரரையும் நட்டாற்றில் கைவிடுவதுபோல், விட்
கன்ற இங்கிலாந்தை இனி ஒரு கணமும் நம்பியிரா
ல், இந்த ஆபத்துக் காலத்தில் அதனைத் தாக்கி, இந்
யாவின் சுதந்திர சித்திக்கு வழி தேட வேண்டும்
ன்று அச்சங்கம் தீர்மானம் செய்தது.



ஜப்பானியரிடம் சிறைபட்டுக் கிடந்த இந்திய வீரரையும் பிற இந்தியரையும் அச்சங்கத்தார் வேண்டிக் கொள்ளவே, பலர் முன் வந்து போர்ச் சேவகம் புரிய ஒப்புக் கொண்டனர். அவ்விதம் திரண்ட சேனை **"இந்திய தேசீயச் சேனை"** என்று பெயர் கொண்டது. தங்களிடம் சிறை கிடந்த இந்திய வீரரையும் அச்சேனையில் சேருமாறு ஜப்பானிய அதிகாரிகள் வேண்டிக் கொண்டனர்.

முடிவிலே அச்சேனையில் ஓர் இலட்சம் பேர் சேர்ந்தனர். இந்தியாவின்மீது பாய்ந்து போர் புரிய ஆயுதமும் தளவாடங்களும் வேண்டும் அல்லவா? இதற்காக அம்மக்கள் அனைவரும் காசும் பணமும் பொருளுமாக இருபது கோடி ரூபாய் கொடுத்து உதவினர். அப்பணங் கொண்டு, ஆயுதங்கள் வாங்கி, அச்சேனை வீரருக்குப் பயிற்சி ஊட்டப்பட்டு வந்தது.

இதற்கு இடையில், தற்காலிக "இந்திய சுதந்திர அரசாங்கம்" ஒன்றும் அமைக்கப் பெற்றது. திறமையும் தகுதியும் வாய்ந்த பலர் அந்த அரசிலே அமைச்சர்களாக அமர்ந்தனர். இந்தியாவிலுள்ள காங்கிரஸ் மகாசபைக்குப் பக்க பலமாகவே அந்த அரசும் சேனையும் வேலை செய்ய வேண்டும் என்பதே திட்டமாம். ஜப்பானுக்கோ, ஜெர்மனிக்கோ கட்டுப்பட்டு நடக்க அந்த அரசும் சேனையும் ஒப்பவில்லை.

ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய தேசங்களெல்லாம் அந்த அரசையும் சேனையையும் அங்கீகரித்தன; இயன்ற உதவி புரியவும் வாக்களித்தன; அவ்வாறே உதவியும் செய்து வந்தன. அந்நிலையில் அந்த அரசு, சேனை ஆகிய இரண்டின் மீதும் ஆதிக்கம் வகிக்க

ஜப்பானிய அதிகாரிகள் விரும்பி முயன்றனர். நெடுங் காலம் ஜப்பானியருடன் பழகி வந்த பாசத்தினுல், அதற்கு ராஷ் விகாரி கோஷ் இசைந்தார்.

அந்த அரசும் சேனையும் அது கண்டு பிணங்கின. தலை வலி போகத் திருகு வலியைத் தேடிக் கொள்ள அவ்விரண்டும் சம்மதிக்கவில்லை. அது பற்றி அவருக்கும் அரசின் பிற உறுப்பினருக்கும் கருத்து வேற்றுமை வலுத்தது. அதன்மேல் சுபாஷ் சந்திர போஸை ஜெர் மனியிலிருந்து வரவழைக்க ஆயத்தங்கள் நடக்கலாயின. சுபாஷுக்கும் தந்தி போயிற்று.

## 27. டில்லி மீது பாய

சிறையிலிருந்து சுபாஷ் சந்திர போஸை விடுவித்ததும், அவரைக் கல்கத்தா நகரில் அவரது மாளிகையி லேயே ஆங்கில அதிகாரிகள் காவலில் வைத்திருந் தனர். அது கண்டு அவர் பொறுக்காமல், உண்ணு நோன்பு கொண்டு உயிர் துறக்க எண்ணினுர். தனது இலட்சியம் கைகூட ஒருவன் தன்னைப் பலிகொடுத்தலி னும் சிறந்த மார்க்கமில்லை என்று அந்த அதிகாரி களுக்கு அவர் அறிவித்தார்.

அன்றியும் தனிப்பட்ட மனிதர் தியாகத் தீயில் குளித்து மூழ்கினுல்தான், தேசம் சுதந்திர சித்திபெறும் என்றும் அவர் வலியுறுத்தினுர். 1941-ஆம் வருஷம் ஜனவரி மாத மத்தியில், அவர் எப்படியோ கல்கத் தாவிலிருந்து காணுமல் போனுர்; அம் மாதக் கடைசி யிலே அவர் பெஷாவர் நகரம் குறுகினுர் எவரும் அறியா வண்ணம்; பட்டாணிய உடையும் வடிவும் பெயருங் கொண்டார்; காபூல் நகரிலே உத்தம சந்தர் என்பவரின் விருந்தினராக விளங்கினுர்.

ஆப்கானி ஸ்தானத்தைச் சேர்ந்த காபூல் நகரில் அவர் ஐம்பது நாள் தங்கியிருந்தார். பின்பு அவர் ஜெர் மன் அதிகாரிகளின் துணை கொண்டு, விமான மூலம் மாஸ்கோ நகரம் நண்ணினுர். அங்கிருந்த ஜெர்மனியின் தலை நகரான பர்லின் போய்ச் சேர்ந்தார். அங்கே இரண்டு வருஷ காலம் தாமதித்தார். அப்போது, ஜெர் மனியில் சிறைபட்டிருந்த இந்திய வீரருக்கு விடுதலை தேடித் தந்து, இந்திய தேசியச் சேனை யொன்று திரட் டினுர்.

ஆங்கிருந்த இந்திய மாணவரும் அச் சேனையில் சேர்ந்து கொண்டனர். இந்தியாவின் சுதந்திர சித்திக் குப் பாடுபடுவதும், ஜெர்மனிக்கு உதவி புரிவதும் அச் சேனையின் நோக்கமாகும். ஜெர்மனியின் தலைவரா யிருந்த ஹிட்லர் என்பார் நமது சுபாஷ் சந்திரபோஸை வரவேற்று ஆசி கூறி, ஆதரவெல்லாம் அளிப்பதாக வாக்களித்தார். அந் நிலையில் ஜப்பானுக்கு வந்து சேர வேண்டுமென்று சுபாஷுக்குத் தந்தி வந்தது.

அவ்வாறே 1943-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவர் சிங்கப்பூர் சேர்ந்து தற்கால இந்திய சுதந்திர அரசு இந்திய தேசியச் சேனை இரண்டிற்கும் தலைமை பூண்டார். உடனே அந்த அரசும் சேனையும் திருத்தி அமைக்கப்பட்டன. மாதர் படை வகுப்பு ஒன்று தனியே ஏற்பட்டது. பாலசேனை ஒன்றும் தோன்றியது. சென்னை நகர வாசியான **இலட்மி சுவாமிநாதன்** அதன் தலைவி. அதற்கு **ஜான்ஸி ராணி படை வகுப்பு** என்று பெயர்.

மேலும் சென்னையைச் சேர்ந்த எல்லப்பா, உலக நாதன் என்பவர்களும் அந்த அரசின் அமைச்சர் குழாத்தில் அங்கம் பெற்றிருந்தனர். போஸ் தலைமை பூண்டதும், ஜப்பானிய மந்திரியார் மகிழ்ச்சி மிகுந்த னர்; வேண்டிய உதவி புரிய வாக்களித்ததோடு, தேசீ யச் சேனைமீது ஆதிக்கம் செலுத்துவதில்லை யென்றும், உறுதி கூறினர். தலைமை வகித்தவுடனே அவர் விடுத்த விளம்பரத்தின் கருத்து பின்வருமாறு.

"நமது சுதந்திர யுத்தம் மிகக் கடினமாக இருக்கும். எத்தயை தியாகத்துக்கும் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். நமது இலட்சியம் தெய்வ சம்மதம் வாய்ந் தது. உலக ஜனத் தொகையிலே ஐந்தில் ஒரு பங்கு மக்க ளாகிய நாம் சுதந்திரமின்றி வாழ்தல் அழகோ? உங் களது இரத்தத்தை வாரியிறைக்கச் சித்தமாயிருந்தால், நான் சுதந்திரம் தேடித் தருவேன். டில்லியின்மீது பாய் வதே நமது நோக்கம். அங்கே சுதந்திரக் கொடியைத் தூக்குவதே நமது ஆவல்!"



இவ்விதம் அவர் பேசியவுடனே, அங்கே குழுமி யிருந்த மக்கள் அனைவரும் தமது உடம்பிலிருந்து இரத் தத்தைக் கீறி எடுத்து, அதனைத் தொட்டுச் சத்தியம் செய்து கொடுத்தனர். முகம்மதிய கனவானொருவர் அக்கணமே நாற்பது இலட்சம் ரூபாய் கொடுத்தார்; மேலும் முப்பது இலட்சம் கொடுக்க ஒப்புக்கொண் டார். அவ்விதம் இலட்சக் கணக்கில் பணம் வந்து குவிந்தது. சுதந்திர அரசின் தனசாலை யொன்றும் ஏற் பட்டது.

அரசு என்றிருந்தால் அதற்குப் பூமிவேண்டும் அல் லவா? ஆனதுபற்றி அந்தமான் தீவுகளை ஜப்பான் தேசம் அந்த அரசுக்கு அளித்தது. அத்துடன் பர்மா விலே ஐம்பது சதுர மைல் பரப்புள்ள பூமியையும் கொடுத்தது. உடனே காங்கிரஸ் மகாசபையின் கொடியை அந்த இரண்டு இடங்களிலும் ஏற்றிவைத்து அவரும் பிறரும் வணக்கம் செலுத்தினர். அங்கிருந்தே ரேடியோவின் மூலம் இந்திய மக்களுக்கு அவர் ஓர் ஆசிச் செய்தி அனுப்பினர்.

## 28. தேசீய அரசின் அறிக்கை

**தற்காலிக தேசீய சுதந்திர அரசின் தலைமை பூண்டு,** தேசீயச் சேனை திரட்டியதும், சுபாஷ் சந்திர போஸ் நமது பாரத புத்திர புத்திரிகளுக்கு ஓர் அறிக்கை விடுத்தார். அதன் முக்கியமான கருத்து என்னவென்றால்:—

"1757-ம் வருடம் பிளாஸி நகரில் இந்தியர் தோற்ற பின்பு ஆங்கிலேயருடன் ஒரு நூறு வருடகாலம் ஓயாமல் மகத்தான சண்டைபோட்டு வந்தனர். அப்போது அவர்கள் காட்டிய வீரதீரமும், செய்த தியாகமும் மெச்சத்தக்கனவாம். சுராஜதௌலன், மோஹன்லால், ஹைதர் அலி, திப்பு சுல்தான், வேலுத் தம்பி, அப்பா ஸாஹிப், ராணி இலட்சுமிபாய், நானா ஸாஹிப், இவர்களின் பெயர்களையும், போராற்றலையும், எவரும் மறக்க முடியாது.

"ஆங்கில ஆட்சியினால், அனர்த்தமே விளையும் என்பதை நமது முன்னோர் அன்று அறியாது போயினர். காலப் போக்கும் நமக்குக் கெடுதலாக இருந்தது. ஆதலின் இந்தியர் அனைவரும் அப் போர் முனைப்பிலே ஒரு முகமாகத் திரண்டு நிற்கவில்லை. ஆனாலும், 1857-ம் ஆண்டிலே, அருமையும் பெருமையுமான சுதந்திர யுத்தம் நடைபெற்றது. ஆரம்பத்திலே, நம்மவர் அதில் நல்ல வெற்றியும் அடைந்தனர். ஆனால், கெட்ட காலமும் தவறான தலைமையும் கூடிக்கொள்ளவே, முடிவில் தோல்வியே கிட்டியது.

"1858-ம் ஆண்டிலே, ஆங்கிலேயர் நம்மை, நிராயுத பாணிகளாக்கினர்; நம்மை அடக்கி அவமானமும் கண்டனர். எனினும், 1885-ம் வருடம் காங்கிரஸ் மகாசபை உதிக்கவே, மக்களுக்குள் புதிய விழிப்பு தோன்றியது. தோன்றவே, இழந்துபோன சுதந்திரத்தை எய்த இந்தியர் பலரும் சேர்ந்து முயன்றனர். கிளர்ச்சி, ஆங்கிலப் பொருள் விலக்கு, வெடிகுண்டு வீச்சு, முதலிய உபாயங்களையும், மேற்கொண்டனர்.

"1920-ம் ஆண்டிலே மகாத்மா காந்தி, முன்வந்து ஒத்துழையாமை, சட்டமறுப்பு, என்னும் உபாயங்களைக் கையாண்டு, சுதந்திரப் போரை மும்முரமாக நடத்தலானார். அதன் பயனாக, சுதந்திர உணர்ச்சி, கிராமங்களிலும் பரவிற்று. குடிசைகளிலும் புகுந்து, புத்துயிர் ஊட்டியது. அதனால் இந்தியரனைவரும் ஒருமுகமான நோக்கும் போக்கும் கொள்ளலாயினர்.

"1937-ம் ஆண்டிலே, காங்கிரஸ்காரர், மந்திரி சபைகளை அமைத்து, மாகாண ஆட்சியை நன்கு நடத்தவே, நம்மவரின் ஆட்சித்திறமை அற்புதமாக வெளியாயிற்று. இரண்டாவது உலக மகாயுத்தம் உதித்த உடனே, சுதந்திரத்தை நாடி, நம்மவர் இறுதியான போராட்டம் செய்ய நேர்ந்தது. ஜெர்மனியோ, ஐரோப்பாவிலே ஆங்கிலேயரை அநேகமாக, அடித்துப்போட்டு விட்டது. ஜப்பானோ கிழக்கு ஆசியாவில், ஆங்கிலேயருக்குச் சொந்தமான நாடுகள் அனைத்தையும் பிடித்துக் கொண்டது. சூழ்நிலைகளை நோக்குகையில், இது நமக்கு நல்ல சமயமாகும்; பரிபூர்ண சுதந்திரம் அடையும் தருணமுமாம்.

"ஆண்டவனது அருள் என்றே கூறவேண்டும். வெளிநாடுகளிலுள்ள நம்மவரனைவரும், ஒன்றாகக் கூடியுளர்; பிறந்த பூமியான பாரததேசம், சுதந்திரம்

அடைய வேண்டி, நம்மவர் எவ்வகையான தியாகமும், முயற்சியும் செய்ய முனைந்து நிற்கின்றனர்; சுமார் 30 இலட்சம் ஜனங்கள் ஒன்ருகத் திரண்டுள்ளனர்; டில்லிமாநகரின் மீது பாயவேண்டும், என்னும் கோஷமும் செய்கின்றனர்.

"வெளிவேஷத்தால் ஆங்கிலேயர் நம்மை ஏமாற்றி விட்டதனுலும், நம் நலபலன்களையெல்லாம் கொள்ளை கொண்டு, நம்மையெல்லாம் பசிப்பிணிக்கும், பஞ்சத்திற்கும் ஆளாக்கி விட்டதனுலும், நாம் ஆத்திரமடைந்து நிற்கின்ருேம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அழிந்துபோக வெகுநாள் ஆகாது. இந்திய மகா ஜனங்களின் மனப்பான்மையை மனத்துள் கொண்டே தேசியச் சேனை திரண்டு நிற்கின்றது.

"சுதந்திரம் நம்மை நெருங்கியுள்ளது. நமது இறுதிப் போராட்டம் இதுவேயாம். ஆதலினுல்தான், தேசியச் சேனையின் தலைமை வகித்துப் போர் முனையில் குதிக்கின்றேன். நமது தாய் பூமி, விரைவில் சுதந்திரம் எய்த, நாங்கள் எங்களது உயிரின் மீது ஆணையிட்டு உரைக்கின்ருேம். பாரத பூமியின் விடுதலையைக் காணும் வரையில் நாங்கள் வாளாயிரோம்.

"நாமோ வீரரின் பரம்பரையில் வந்தவர்கள். வீரமும், தீரமும் தியாகமும், நமது இரத்தக் குழாய்களில், குழைந்து ஓடுகின்றன. ஆதலின் இந்திய சோதர சோதரிகளே! நாங்கள் வெளியிடங்களிலிருந்து போர் புரிகையில், நீங்களும் இந்தியாவில் திரண்டெழுந்து தோள் தட்டிப் போர் முனையில் குதிக்கவேண்டும். இச் சமயம் தவறினுல் வேறு சமயம் வாய்ப்பது அரிது".

## 29. படுகளப் பாய்ச்சல்

**கிழக்கு ஆசியாவில் இருந்த நம்மவர் அனைவரும் நேதாஜி** என்று சுபாஷ் சந்திர போஸைச் செல்வமாக அழைக்கலாயினர். சிவாஜி வேந்தனுக்கு வலது கைபோல் விளங்கி, வெற்றிகள் பலத் தேடித் தந்த தளபதியின் பெயர் நேதாஜி. அப் பெயரே சுபாஷுக்கு அமைந்தது.

சுபாஷ் பாபு திரட்டிய தேசியச் சேனை 1944-ம் வருஷம் ஜனவரி மாதக் கடைசியில் படுகளத்தில் பாயத் தொடங்கியது. சிறிது சிறிதாகப் பர்மா வழியே அப் படைஞர் வந்து இந்தியாவுக்குள் புகுந்தனர். புகுந்ததும் ஆங்கிலச் சேனையை எதிர்த்து அரும்போர் விளைத்தனர். பல பல சிறு வெற்றியும் கொண்டனர்.

அத் தேசியச் சேனையில் ஜான்ஸி ராணி பட்டாளம் என்பது ஒரு பிரிவு. அதில் இந்திய மாதரே ஆயுதம் தாங்கி வீரராக விளங்கி அமர்க்களம் குறுகினர். அம் மாதர் படைவகுப்பு ஒன்று இந்தியாவின் வட கிழக்கே உள்ள அஸ்ஸாம் நாட்டின் மலை அடிவாரத்தில் தங்கியிருந்தது. எதிரியின் வரவையும் எதிர்நோக்கி நின்றது.

தேசியச் சேனையை எதிர்க்க வந்த ஆங்கிலப் பட்டாளம் ஒன்று பெருமிதமாக அம்மலை அடிவாரத்தைச் சார்ந்தது. மாதரின் படைவகுப்பு அங்கே தங்கி நிற்பதை அது அறிந்து கொள்ளவில்லை; படாடோபமாக முன்னேறி வந்தது; வரவே மாதர் படைவகுப்பினிடம் சிக்கிக் கொண்டது.

ஆங்கிலப் பட்டாளத்திலோ அதிக வீரர் இருந்தனர். மாதர் படைவகுப்பிலோ வீரரின் தொகை கொஞ்சம்தான். ஆனுலும், அம் மாதரின் முன்னே

அந்த ஆடவர் சரிசமமாகப் போர் முறுக்க முடியவில்லை. மாதரின் ஈட்டிக் குத்தும் துப்பாக்கி வேட்டும் கண்டு ஆற்றாது அந்த ஆடவர் சரண் அடைந்தனர்.

அவ்விதம் ஆங்கில வீரரை நமது தேசியச் சேனையின் வீரர் பரிபவம் கண்டது ஒரு முறை இரு முறை அன்று. மணிபுரி சமஸ்தானத்திலே பல இடங்களை தேசியச் சேனை கைப்பற்றிக் கொண்டது; இம்பால் என்னும் நகரிலும் நமது காங்கிரஸ் கொடியை ஏற்றியது; எக்களிப்பும் எய்தியது.

அவ்வாறு தேசியச் சேனை முன்னேறி வருதல் கண்டு ஆங்கில அரசாங்கம் அச்சம் கொண்டு, மேலும் மேலும் துணைப் படைகளை அந்த அரங்கத்துக்கு அனுப்பி வந்தது. இதற்கு இடையிலே மழையும் பொழியத் தலைப்பட்டது. தேசியச் சேனைக்குத் துணைவலி கிட்டவில்லை.

மேலும், வாகன வசதிகளும், ஆயுத வசதிகளும் தேசியச் சேனையிடம் குறைவாகவே இருந்தன. உதவி புரிவதாக வாக்களித்த ஜப்பானியரோ சொன்ன வண்ணம் நடக்கவில்லை. தேசிய வீரர் அதனால் பெரிதும் வருந்த நேர்ந்தது. ஆள்வலியும் இதர வசதிகளும் நிரம்ப உள்ள எதிரிகளுடன் எத்தனை நாள் போர் புரிய முடியும்?

ஜப்பானியரோ சிறிது சிறிதாக அஸ்ஸாம் நாட்டிலிருந்து பின்வாங்கினர். அது பற்றி தேசிய வீரரும் பின்வாங்க நேர்ந்தது. ஆனாலும் ஆங்கிலேயரிடம் சரண்புக அவ்வீரர் இணங்கவில்லை. சண்டை செய்து கொண்டே மிகச் சாமர்த்தியமாகப் பின்வாங்கினர்.

ஒன்றரை வருஷ காலம் அரும்போர் விளைத்து நின்றது நமது தேசியச் சேனை. பின்வாங்கிய போதும் அது சோர்வு கொள்ளவில்லை; தனது இலட்சியத்திலும் குன்றவில்லை. மீண்டும் போதிய பலத்துடன் வந்து போர்புரியவே அது ஆவல் கொண்டது.



அச்சேனையின் பாய்ச்சல் கேட்டு இந்தியரில் பலரும் மகிழ்ச்சி கொண்டனர். ஆங்கில அதிகாரிகளோ அடி வயிற்றில் இடி விழுந்ததுபோல் துடி துடித்தனர். அப்போதுதான் பெருவாரியான படைகளுடன் ஜப்பான் வந்து இந்தியாவிலே வேறு இடங்களில் புகும் என்று அஞ்சலாயினர்.

அச்சமயத்தில்தான் இந்தியாவின் கிழக்குக் கடலோரத்தே உள்ள நகரங்களில் சில காலியாயின. சென்னை மாநகரிலிருந்து கவர்னரும் பிற அதிகாரிகளும் உள் நாட்டுக்கு ஓடிவிட்டனர். நகர மக்களும் வீடு வாசல்களைத் துறந்து வேற்றிடம் போயினர்.

ஜப்பானிய விமானங்களும் தோன்றிக் கல்கத்தாவிலே குண்டுகள் வீசின. ஒரு விமானம் சென்னை நகரையும் எட்டிப் பார்த்தது. இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்ட பின்பே, இந்தியாவை இனிக் கட்டியாள முடியாது, கைகழுவி விட வேண்டியதுதான் என்று இங்கிலாந்தின் மந்திரிகள் தமது மனத்தூடே நிச்சயித்தார்கள். ஆயினும் அவ்வாறே காரியம் செய்ய அவர்கள் உடனே முன்வரவில்லை.

இனி பின்னாளிலே சுபாஷின் சீரிய முயற்சியையும் முனைப்பையும் தேசம் உணர்ந்து கொண்டது. அவரையும் அவர் படைஞரையும் எல்லாரும் பாராட்டினர். காந்தி மகானும் சுபாஷ் சந்திர போஸின் தியாகமே தியாகம் என்று மனங்கனிந்து மொழிந்தார். பண்டித ஜவாஹர்லால் நேருவும் பரவசம் மிகுந்து புகழ்மாலை சூட்டினார்.

# 30. இராஜ தந்திர சூழ்ச்சி

ஆகஸ்டு புரட்சியின் போது, சேனதிபதியாக இருந்த லார்டு வேவல் என்பார் தமது யுத்த முயற்சியெல்லாம் இந்திய மக்களின் மனப்புழுக்கத்தால், மண்ணுயினதை நன்கு அறிந்து கொண்டார். அத்தகையவர் 1945-ம் வருஷம் அரசப் பிரதிநிதியாக இங்கே வந்து அமர்ந்தார்.

வந்து அமர்ந்ததும், தேச மக்களின் பிணக்கைப் போக்கினுல் அல்லாமல், இங்கே ஆங்கிலேயர் வாழ முடியாது என்று அவருக்குப் புலப்பட்டது. உடனே அவர் இலண்டன் மா நகருக்குப் பறந்து சென்ருர்; அங்குள்ள மந்திரிகளுடன் கலந்து பேசி இங்கே திரும்பினுர்; திரும்பியதும் சிம்லா நகரிலே ஒரு மகாநாடு கூட்டினுர்.

தேசத்திலுள்ள பலவாருன கட்சிகளின் தலைவர்களை அவர் வரவழைத்தார். "இந்தியாவின் அரசிலே அரசப் பிரதிநிதியும் இராணுவ மந்திரியும் தவிர, மற்றையோர் அனைவரும் இந்தியராக இருக்கலாம். ஜப்பானுடன் நடக்கும் யுத்தத்துக்கு இந்தியா உதவி புரிய வேண்டும்," என்று அவர் கூறினுர்.

ஆகவே, உண்மையில் "இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்க மனம் இல்லை. யுத்தத்தை நன்கு நடத்துவதிலேயே நமது உதவியை நாடுகின்றனர்," என்னும் உண்மை காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரிய வந்தன. ஆதலின் அந்த யோசனையை நமது தலைவர்கள் ஏற்கவில்லை.

அன்றியும், அன்றளவும் சுதந்தரப் போராட்டத்தில் பங்கு கொள்ளாது விலகி நின்ற கட்சித் தலைவர்



களை வேவல் பிரபு அழைத்ததும், காங்கிரஸ் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதனை ஒரு சாக்காகக் காட்டி, "நாங்கள் அரசியல் திருத்தம் அளிக்க முன் வந்தும், தேசத் தலைவர்களுக்குள் ஒற்றுமை இல்லை, என்ன செய்வது?" என்று அப்பிரபு பழி சுமத்த முயன்ருர்.

ஆனுலும், 'ஆங்கிலேயரே, வெளியேறுக' என்ற தீர்மானம் நிலையாக நிற்பதால் ஆங்கில அரசுக்கு அது ஓர் அவமானமாகவே இருந்தது; அதன் யுத்த முயற்சிக்கும் இடறு கட்டையாகத் துலங்கியது. ஆதலினுல், அத் தீர்மானத்தை வாபஸ் பெறவேண்டுமென்று அப்பிரபு வற்புறுத்தினுர். காங்கிரஸ் தலைவர்கள் அதற்குச் சம்மதி தரவில்லை.

அந் நிலையில் சுபாஷ் போஸ் திரட்டிய இந்திய தேசியச் சேனையில் பிரதம தளபதிகளாக இருந்த **ஷா நவாஸ் கான், ஸெய்கால், தில்லன்** ஆகிய மூவரையும் அதிகாரிகள் சிறை செய்து, டில்லியிலே காவலில் வைத்திருந்தனர். சக்கரவர்த்திக்கு விரோதமாகப் போர் புரிந்தார்கள் என்ற குற்றம் காட்டி, அவர்களை விசாரிக்கவும் ஆயத்தமாக இருந்தனர்.

அரிய சேவை செய்த அம்மூன்று வீரத் தியாகிகளைக் கைவிட நம்மவர் ஒப்பவில்லை. விசாரணை நடந்தது. **புலாபாய் தேசாய்** என்பவர் பிரதம வக்கீலாக விளங்கி அற்புதமாக வாதாடினுர்.

"தேச நலம் கருதி, ஆயுதம் தாங்கி, அரசுக்கு எதிராகப் போர் புரிதல் மானிட உரிமை. இந்த உரிமையை உலக மேதாவிகள் ஒப்புக் கொள்வர். அவ்விதம் போராடுவோர் வெற்றி பெற்றுவிட்டால், அவர்களை உலகம் உச்சிமீது கொண்டு கொண்டாடும். எனவே

அம் மூவர்மீதும் யாதொரு குற்றமும் இல்லை," என்பன அவ்வாதத்தின் சுருக்கமாம்.

அம் மூவருக்காகவும் எதிர் வழக்கு ஆடுவதில் ஏராளமான திரவியம் செலவாயிற்று. மக்கள் அனைவரும் பணம் கொடுத்து உதவினார்கள். இந்தியச் சேனையிலே நிலப் படையிலும், நீர்ப் படையிலும், ஆகாயப் படையிலும் சேவித்து நின்ற வீரரில் பலரும் தாராளமாக அவ் வழக்கினுக்கு உதவி புரிந்தார்கள்.

ஆங்கில அரசுக்கு இங்கே உயிர்நிலை போன்றது இராணுவமே. அந்த இராணுவத்தாரே எதிர் வழக்கினுக்கு உதவி புரிந்தது கண்டு, இனி இந்தியாவை ஒரு கணமும் ஆளமுடியாது, என்று இங்கிலாந்தின் மந்திரிகள் கைநெல்லிக் கனிபோல் அறிந்து கொண்டார்கள். கௌரவமாக அரசியல் சுதந்திரம் வழங்காவிடின், அடிபிடி கட்டாயமாக அதனை இந்தியர் அடைந்தே தீருவர் என்றும் அவர்களுக்குப் புத்தி வந்தது.

அதன்மேல், இங்கிலாந்தின் பார்லிமெண்டு சபை உறுப்பினரில் பதின்மர் இங்கு வந்து, தேசமெங்கும் சுற்றிப்பார்த்து, மரியாதையாகச் சுதந்திரம் வழங்குதலே மேலாம் என்று, அம் மந்திரிகளுக்கு வலியுறுத்தினர். அதன்மேல் அம் மந்திரிகளில் மூவர்—இந்தியா மந்திரி என்பார் உட்பட—இங்கே வந்து நம் தலைவர்களுடன் ஓர் உடன்பாடு கொள்ள முயன்றார்கள்.

## 31. அரசுரிமை அடைதல்

மண்டி யெழுந்த சுதந்திர ஆவேசம் இங்கே அடங்கினபாடில்லை. மாணவரும் தொழிலாளரும் ஆங்காங்கே கூட்டம்கூடி, சுதந்திரக் கோஷத்தைக் கிளப்பி வந்தனர். 'ஆசியாவை விட்டும் ஆங்கிலேயர்கள் வெளியேறவேண்டும் என்று சர்தார் வல்லபாய் படேல் கர்ஜனை செய்தார்.

அங்நிலையிலே, 1946-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஆங்கில மந்திரிகள் இந்தியா வந்து சேர்ந்தனர்; சேர்ந்ததும், பலவாறான அரசியல் கட்சியினரை அழைத்துப் பேசினர்; அப்பால் காங்கிரஸ் மகாசபை, முஸ்லீம் லீக் சபை இரண்டின் பிரதிநிதிகளையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தனர்.

சுதந்திரப் போராட்டத்தில் அன்றளவும் கலந்து கொள்ளாமல் விலகி நின்ற முஸ்லீம் லீக் பிரதிநிதிகளை அழைத்தல் அழகோ, என்று காங்கிரஸ்காரருக்கு ஆத்திரம் மூண்டது. ஆனாலும் ஒருவகையில் சமரசம் கொண்டு தேச அரசியலை ஏற்கவேண்டும் என்று காந்தியும் பண்டித நேருவும் கருதினர்.

கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாது போகும் எண்ணம், அப்போதும் ஜனாப் ஜின்னா முட்டுக்கட்டை போட்டார். ஆங்கிலேயர் வெளியேறினால் போதும் என்பதைக் குறியாகக் கொண்டிருந்த சர்தார் படேலும் பிறரும், லீகிடமே தேச அரசியலை வழங்கினாலும் அதற்கு ஒப்புவோம் என்று உலகறிய உரைத்தனர்.

"இத்தேச அரசியலை இந்தியரே வகுத்துக்கொள்ளலாம். அதற்கான இந்திய அரசியல் நிர்ணய சபை

ஏற்படுவதில் எங்களுக்குச் சம்மதமே. இதற்கு இடையில் தேச ஆட்சியை இந்தியரிடம் ஒப்படைத்து விடுவோம். காங்கிரஸும் லீகும் சேர்ந்து தேசத்தின் ஆட்சியை நடத்திவருமாக'', என்று அம் மந்திரிகள் முடிவாக உரைத்தனர்.

அப்போதும் ஜனுப் ஜின்னு வழிக்கு வரவில்லை. தேசத்தைத் துண்டாக்கி, ஒரு பகுதியை முஸ்லீம்களுக்குக் கொடுத்துவிடவேண்டும் என்று பிடிவாதம் பேசினர். தேச அரசியலைக் காங்கிரஸுடன் சேர்ந்து நடத்திவரவும் அவர் ஒப்பவில்லை.

அதன்மேல், "நாங்கள் இத்தேசத்தை விட்டுப் போகிறோம். ஹிந்துக்களும் முகம்மதியரும் சமரசமாகப் போதலே மேல்,'' என்று ஆங்கில மந்திரிகள் கூறினர். இடைக்காலத்தில் அரசியலை ஏற்று நடத்த ஜனுப் ஜின்னு ஒப்பாததால், பண்டித நேரு முன்வந்து இடைக்கால சர்க்காரை அமைத்தார். அதற்கு ஆங்கில மந்திரிகள் சம்மதி கொடுத்தனர்.

அது கண்டதும் ஜின்னுவுக்கு உதைப்பு எடுத்தது. பின்பு இடைக்கால சர்க்காரில் சேர ஜின்னு இசைந்தார். ஆயினும் முழுமனதுடன் ஒத்துழைக்க அவர் விரும்பவில்லை. எனினும் விதியின்றி லீகரை மந்திரிகளாக நேரு சேர்த்துக்கொண்டார். ஆங்கிலேயரை வெளியேற்றினல் போதும் என்பதே நேருவின் நோக்கமாயிருந்தது.

1946-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இத்தேச ஆட்சியை நம்மவர் ஏற்றுக்கொண்டனர். தேச நிர்வாகத்தில் லீக் மந்திரிகள் அக்கறை காட்டவில்லை; வகுப்புவெறியை வளர்க்கும்வகையில் பேசிவந்தனர்.



அதனுல் வங்காளம், பீகார், பஞ்சாப் இந்த இடங்களிலே ஹிந்து முஸ்லீம் கலகம் கொழுந்துவிட்டது. அதில் நேர்ந்த உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் சொல்லி முடியா.

அந்த வகுப்புக் கலகத்தை அடக்கும் பொறுப்பும் அதிகாரமும் அப்போது அரசப் பிரதிநிதியின் கையில் இருந்தன. அவரோ வாளா இருந்துவிட்டார். லீக் மந்திரிகளைப் பகைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. ஸ்தல அதிகாரிகளும் அக் கலகம் வளருவதில் கருத்து மிகுந்து நின்றனர்.

அந்நிலையில், ஆங்கிலேயர் அடியோடு இத்தேசத்தை விட்டு அகன்றல் அல்லாமல் வகுப்புக் கலகம் அடங்காது என்று மகாத்மாகாந்தி வற்புறுத்தினர். அதற்கு இங்கிலாந்தின் முதன்மந்திரி இசைந்தார்; அதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்ய மௌண்ட்பேட்டன் பிரபு என்பவரை அரசப் பிரதிநிதியாக இங்கே அனுப்பி வைத்தார்.

அப்பிரபுவும் இங்கே வந்து நிலையை அறிந்துகொண்டார்; முகம்மதியரையே பெரிதும் கொண்டசிந்து நாடு, வடமேற்கெல்லை மாகாணம் கிழக்கு வங்காளம் இவற்றை லீக் மந்திரிகளிடம் கொடுத்து, மிஞ்சியதை இந்திய யூனியன் என்ற பெயருடன் காங்கிரஸ்காரர் ஆண்டுவர ஆலோசனை கூறினர்.

அவ்வாறு அப்பிரபு சொன்ன யோசனையை நேருவும் படேலும் விதியின்றி ஏற்றுக்கொண்டனர். தேசத்திலே வகுப்புப் பூசல் ஓய்ந்தால் போதும் என்பதே அவ்[illegible]ன் ஆவலாயிற்று. அவ்விதம் 1947-ம் வருஷம் ஆகஸ்டு [illegible]ம் 15-ந் தேதி நமது தேசம் இருதுண்டாயிற்று.

# 32. பாரதக் குடியரசு

முஸ்லீம்களுக்குப் பிரித்துக் கொடுத்த பாகம் பாகிஸ்தான் எனப்படும். எஞ்சிய பாகமோ இந்திய யூனியன் அல்லது **பாரதபூமி** எனப்படும். அவ்விதம் நமது தேசம் இரண்டாகப் பிளவுபட்டதற்கு இடையில் பஞ்சாப், சிந்து இந்த இடங்களிலிருந்து ஹிந்துக்கள் தங்களது வீடு, வாசல், உடைமைகளைத் துறந்து, பாரதத்துக்குள் ஓடிவர நேர்ந்தது. உயிர் தப்பினால் போதும் என்றே அவர்கள் ஓடிவந்தார்கள்.

அங்கே அவர்கள் விட்டுவந்த ஆஸ்தி ஏறக்குறைய ஆயிரத்து நானூறு கோடி ரூபாய் ஆகும். ஹிந்து மாதரிலும் பலர் பாகிஸ்தானில் சிக்கிக்கொண்டு சிரமுற நேர்ந்தது. ஏட்டிக்குப் போட்டியாக இங்குள்ள முகம்மதியரை அப் பாகிஸ்தானுக்கு ஓட்டிவிட முயற்சி எழுந்தது. மகாத்மா காந்தியும், பண்டித நேருவும் அதனைத் தடுத்து நின்றனர்.

இரண்டாவது உலக மகா யுத்த சமயத்தில் நாலைந்து இலட்சம் பேர் **பிரான்ஸ்** தேசத்திலே இடம் பெயர்ந்து ஏங்கி ஓடினர். அதனை ஆற்றமுடியாமல் அத் தேசம் நிலைகுலைந்து ஜெர்மனிக்கு அடிபணிந்தது. ஒரு கோடி மக்கள் பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்தும் அதனை நேருவும் படேலும் மிக்கத் திறமையுடன் சமாளித்தனர். அரசும் குலையாமல் காத்து நின்றனர். அச் சாதனை கண்டு ஆங்கிலேயரே அதிசயித்தனர். இது நிற்க.

காங்கிரஸ் மகாசபையின் ஆதரவில் அமைந்த இந்திய நிர்ணய சபை ஒரு வருஷம்போல் கூடி ஆலோ



சனை செய்து இந்திய பாரதத்தின் அரசியலை வகுத்துள்ளது. அந்த அரசியல், குடியரசு அரசியலாகும். அதன் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். தேசத்தின் நிர்வாகத்தை இந்தியரே நடத்தி வருவர்.

ஆங்கில ஆட்சி நிலைநின்ற காலத்தில் இங்கிருந்த ஆங்கிலச் சேனை இங்கிலாந்துக்குப் போய்விட்டது. இங்கிருந்த ஆங்கில அதிகாரிகளிலே சிலர் உடனே தமது வேலையைவிட்டுப் போயினர். மற்றவர்களோ ஒப்பந்த காலம்வரையில் வேலைபார்க்க ஒப்பி இருக்கின்றனர்; இந்தியக் குடியரசுக்கு உண்மையான ஊழியமும் புரிந்து வருகின்றனர்.

முடிவிலே மனமொப்பி, இத்தேச அரசியலை நம்மிடம் ஒப்படைத்ததனால், ஆங்கிலேயருக்கும் நமக்கும் இடையே மனக்கசப்பு இல்லை. நல்லெண்ணமும் உறவுமே நிலவி வருகின்றன. இங்கே வர்த்தகம் புரிந்து வரும் ஆங்கிலேயரும் பாரதமக்களுடன் உண்மை அன்பு பூண்டுளர்.

# 33. முஸ்லீம் லீக்

நமது பாரத பூமியின் மொத்த ஜனத் தொகை சுமார் நாற்பது கோடி. அதில் முகம்மதியர் என்போர் ஏறக்குறைய ஒரு பத்துக்கோடியேயாம். முகம்மதியரின் ஆட்சிக் காலத்தில் தான், இங்கே முகம்மதியர் பெருகினர். அம் மன்னவரிலே மகா அக்பர் போன்றவர்கள் இந்துக்களையும் முகம்மதியர்களையும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் நடத்தி வந்தார்.

அதனால் ஹிந்து என்றும் முஸ்லிம் என்றும் வேற்றுமை உணர்ச்சி எழும்பவில்லை. எல்லாரும் இந்தியா மக்கள் என்னும் உணர்ச்சியே உதிக்கலாயிற்று. இருவரின் கலையும் பண்பும், குழைந்து ஓங்கி வந்தன. ஆங்கிலேயர் இத் தேசத்தை ஆளத் தொடங்கியது முதல் இருவரையும் பிரித்தே வைக்கும் முயற்சி எழுந்தது.

பிரித்து ஆளும் தந்திரத்தை ஆங்கிலேயர் நன்கு அறிந்தவர்கள். அத் தந்திரத்தை நமது நூல்கள் பேதோபாயம் என்று பேசும். அதனைத் தழுவி, முகம்மதியருக்கு விசேஷ உரிமையும் சலுகையும் அளிக்க ஆங்கில அதிகாரிகளில் சிலர் தவறவில்லை.

காங்கிரஸ் மகாசபை தோன்றிய பொழுது, ஹிந்துக்கள் அதிகமாக அதில் சேர்ந்தார்கள். முகம்மதியரில் ஒரு சிலரே அச்சபையிடம் சார்பு கொண்டனர். ஒரு சில முகம்மதியர் அவ்விதம் சார்பு கொண்டது கூட, ஆங்கிலேயரில் சிலருக்குப் பிடிக்கவில்லை. ஆதலின், தனிச் சபை கொள்ளவேண்டும் என்று முகம்மதியரை அன்னார் தூண்டி வந்தனர்.



அதன் பயனாகவே முஸ்லீம் லீக் என்னும் சபை தோன்றியது. முகம்மதியரின் நலத்தை மட்டும் அது நாடிநின்றது. மதியூகிகளான முகம்மதியரில் சிலர் அத்தகைய பான்மை கூடாது என்று அறிவுறுத்தி வந்தனர். காங்கிரஸ் மகா சபையோ தேசமக்கள் அனைவருக்குமாகவே பாடுபட்டு வரலாயிற்று.

ஒரு சமயம் அந்த இரு சபைகளும் ஒரே நோக்கம் கொண்டு உழைத்து வந்தன. அதிகார வர்க்கம் அது கண்டு பொறுக்கவில்லை; ஆதலின் பிரித்தாளும் தந்திரத்தை மேலும் கையாண்டு வந்தனர். நகர சபை, சட்டசபை இவைகளில் முகம்மதியருக்கு இத்தனை ஸ்தானங்கள் என்று ஒதுக்கி, அந்த ஸ்தானங்களுக்கு உரிய முகம்மதியப் பிரதிநிதிகளை முகம்மதியரே தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தனர்.

அதுகண்டு சொக்கிப்போன முகம்மதியரில் சிலர் காங்கிரஸின் மீது பகைமை கொண்டனர். இதனை அதிகார வர்க்கம் வளர்த்து வந்தது. அதனால் வகுப்புக் கலகங்கள் அடிக்கடி மூண்டன. கொள்ளையும் கொலையும் மிகுந்தன. வேற்றுமை உணர்ச்சியும் வலுத்து வந்தது.

ஜனாப் ஜின்னா என்பார் ஆதியிலே தீவிர காங்கிரஸ்வாதியாக விளங்கினார்; அதிகார வர்க்கத்தை ஆட்டிப் படைத்தும் வந்தார். பின்பு அவர் முஸ்லீம் லீகின் தலைவராக அமர்ந்தார். அதுமுதல் அச்சபை காங்கிரஸ் மகாசபையுடன் பிணக்கே கொண்டு நின்றது. சுதந்திரப் போராட்டத்தில் மனம் வைக்கவில்லை.

ஆதிமுதல் இன்றளவும் காங்கிரஸ் மகாசபையினிடம் மிக்கவும் பற்றுக்கொண்டிருந்த முகம்மதியர்

பலர் ஆவர். இப்போது இந்தியாவின் கல்வி மந்திரியாக இருக்கும் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் என்பவர் அத்தகைய கனவான்களில் ஒருவர்; சுதந்திரப் போராட்டத்தில் பன்முறை சிறையும் புகுந்தவர்.

முகம்மதிய சமூகத்தின் நலத்தை நாடி வரம்புமீறி அதற்குச் சலுகையும் உரிமையும் அளித்து வந்தார் காந்தி மகான்; வகுப்புக் கலகம் ஏற்படும் பொழுது தமது உயிரையும் மதியாமல் உண்ணு விரதம் இருந்தார். இரு சமூகமும் இணைந்து பிணைந்து வாழ வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் அரும் பாடுபட்டனர்.

இரு சமூகத்தாரும் ஒன்று சேர்ந்து விட்டால், ஆங்கில ஆட்சி அக் கணமே அழிந்துபோம், என்பதை அறிந்தே முஸ்லீம் லீகை அதிகார வர்க்கம் தட்டிக் கொடுத்து வந்தது. ஜனுப் ஜின்னுவும் காங்கிரஸுடன் சேராமல் பிடிவாதமாக விலகியே நின்றார். அவருக்கு உட்பட்ட லீகும் அவ்வாறே இருந்து வந்தது.

ஒத்துழையாப் போராட்டம், உப்புச் சண்டை, ஆகஸ்டு புரட்சி முதலிய சுதந்திரப் போராட்டத்திலே முஸ்லீம் லீக் அக்கறை காட்டவில்லை. ஆயினும் காங்கிரஸ்காரர் போராடி, அரசியல் திருத்தம் பெற்ருல், அதில் தனக்கும் பங்கு வேண்டும் என்று கூசாமல் வாதாடி, அடைந்தும் வந்தது.

"முஸ்லீம்கள் தனி ஜாதி. தனி மதம், ஹிந்துக்களோ தனி மதம். ஆதலின் ஹிந்துக்களுடன் சேர்ந்து வாழ முடியாது. முஸ்லீம்கள் தனித்தே வாழ வேண்டும்", என்று ஜனுப் ஜின்னு ஓயாமல் கூறிவந்தார். அதனை அதிகாரிகளும் மறைமுகமாக ஆதரித்து வந்தனர்.



இந்தியாவிலே ஒரு பாகத்தில் முஸ்லீம் அரசை ஏற்படுத்த வேண்டும் என்று ஜின்னு கருதி நின்றார். லீகும் அவ்வாறே கருமம் புரிந்து வந்தது. அந்நிலையிலும் மகாத்மா காந்தி உள்பட பிரபல காங்கிரஸ் தலைவர்கள் அவ்வப்போது அவரைக் கண்டு பேசி ஓர் உடன்பாடுகொள்ள முயன்றனர்.

எதற்கும் ஜின்னு சாகிப் பிடி கொடுக்கவில்லை. பாரத தேசத்தை இருகூருக்கி ஒரு பாகத்தை முஸ்லீம்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றே வாதித்து வந்தார். இந்தியாவை விட்டுப் போகும் சமயத்திலும் ஜனுப் ஜின்னுவை அந்தரங்கத்தில் ஆங்கிலேயர் தூண்டி வந்தனர்.

ஹிந்துக்களும் முகம்மதியரும் பாரதபூமியின் இரு கண்களே போல்வர். நீண்டகாலமாக ஒருமித்து வாழ்ந்து வந்தோருமாவர். ஒரு தாய் வயற்றில் வந்த அண்ணன் தம்பியர் பிரிந்து வசித்தாலும், சோதரரேயாம். ஹிந்துக்களும் முகம்மதியரும் அப்படித்தான். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கினுல் அனைவருக்கும் தாழ்வு என்பார் பாரதியார்.

# 34. முடிவுரை

**பல் பூண்டும் இடையூறு இன்றேல், இனிது வளரும்.** பறவைகளும் விலங்குகளும் இஷ்டப்படி வாழவே இச்சைகொள்ளும். மானிடனும் அப்படித்தான். கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்து வைத்துப் பாலும் சோறும் பரிந்து ஊட்டினாலும், ஊட்டும் கையை அது கொத்தும்; கூண்டை விட்டு வெளியே பறந்து செல்லவும் விரும்பும்.

மனிதராவோர் பிறருக்குக் கட்டுப்பட்டு வாழ்தல் என்பது இயற்கைக்கு மாறாகும். ஒரு சமூகத்தார் அல்லது தேசத்தார் பிற சமூகத்துக்கோ தேசத்துக்கோ அடங்கி ஒடுங்கி வாழ்தல் என்பது அடுக்காது. ஆண்டவன் ஒருவனுக்கு அல்லது வாய்மைக்கு அனைவரும் அடங்கி நடத்தல் அவசியமே.

அவ்வாறு இல்லாமல் ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தார் கட்டி ஆளுகையில் ஆளப்படும் தேசத்தார் பல வகையிலும் குன்றி நிற்கவே நேரும்; உயர்வு எய்துதல் என்பது இயலாத தாகிவிடும். ஆனதுபற்றி ஆளப்படும் தேசத்தார் அக் கட்டிலிருந்து விடுபடவே பெரிதும் முயல்வர்.

அம் முயற்சி அறவழி, மறவழி என இருவகைப் படும். ஆளும் தேசத்தாரின் மனத்தை அன்பு வழியில் கவர்ந்து அவர்களின் ஆன்மாவையும் புனிதமாக்கி அன்னாருக்கு யாதோர் இடையூறும் புரியாமல் அன்னார் இழைக்கும் தீமைகளைப் பொறுத்து நின்று விடுதலை அடைதலே அறவழியாம்.



இனி ஆளும் தேசத்தாரை ஆயுதம் கொண்டு அடித்துப் புடைத்து, அன்னார் கொடுக்கும் அடி உதைகளையும் வாங்கிக்கொண்டு, அவர்களை வீழ்த்தி விடுதலை பெறுதலே மறவழி எனப்படும். அம் மறவழியில் அழியா மனக் கசப்பும் அளவற்ற உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் நேரும்.

உலக சரித்திரத்தை உற்று நோக்கினால், ஆயுதம் தாங்கி இரத்தம் சிந்தி எத்தனையோ சேதம் விளைத்தே பல நாடுகள் சுதந்திரம் அல்லது விடுதலை அடைந்திருத்தலை அறியலாம். 1914-ம் ஆண்டில் ஒன்றும், 1939-ம் ஆண்டில் ஒன்றுமாக இரண்டு உலகமகா யுத்தங்கள் நடந்தன. இரண்டிலும் உண்டான இரத்தக் களரிக்கு ஒரு கணக்கு இல்லை.

வெற்றி கொண்ட தேசங்கள் நிம்மதியுடன் இருக்க முடியவில்லை. உலகிலே அமைதியும் நிலவுவதற்கு வகையில்லை. எங்கும் அச்சப் பேய் தாண்டவம் ஆடுகின்றது. எனவே, மறவழியில் வெற்றி அடைவதில் விழுமிய பலன் எதுவும் விளைவதாகக் காணோம்.

அன்பே சிவம், தர்மமே ஜெயம், அறமே ஆக்களிக்கும் என்பன நமது பாரதபூமியின் பழமையான போதப் பொருள்களாம். ஆதியிலே புத்தர் பிரானும், மகாவீரரும் அன்பும் அருளும் நிரம்பிய வழியையே நமக்கு உபதேசித்தனர்.

அப்பால் ஏசுமகான் தோன்றி, ஒருவன் ஒரு கன்னத்தில் அடித்தால், மற்றொரு கன்னத்தையும் காட்டு என்று அருளிப்போனார். தம்மைக் காட்டிக் கொடுத்

தோரையும், துன்புறுத்தினோரையும் நோக்கி, அவர் சீற்றம் கொள்ளவில்லை. 'ஆண்டவனே! அவர்களை மன்னித்துவிடுங்கள்' என்று வேண்டி நின்றார்.

ஒருவன் நம்மை அடிப்பின் நாம் அவன்மீது ஆத்திரம் அடையாமல் 'அப்பனே என்னை அடித்த உனது கை நோகுமே' என்று கனிந்து கூறி, அக் கையைத் தடவிக் கொடுத்தல் வேண்டும் என்பது நமது பாரதபூமியின் புராதனமான பண்பாடாகும். அக்குணநலத்தை அறியாமல் உலகிலுள்ள மானிடர் ஒருவரை யொருவர் அடித்துப் புடைத்து, கொன்று குவித்துக் கோலாகலம் கொள்வதைக் கண்டு காந்திமகான் சகிக்கவில்லை.

ஆதலின் மானிட கோடிகளுக்கு மகிமையான மார்க்கமொன்று காட்டவே அன்பு நெறியில், அஹிம்சை வழியில் நமது சுதந்திரப் போரை நடத்திவந்தார்; சுயராஜ்யமும் நமக்குத் தேடித்தந்தார். எதிரியின் ஒரு துளி இரத்தத்தையும் சிந்தாமல், அவனது மனத்தை இளகவைத்து, அகிலமெலாம் மெச்சும் முறையை அவர் உலகினுக்கு எடுத்துக் காட்டினார்.

அவரது அரிய நெறியை நம்மவர் பின்பற்றி அடியும், உதையும் பட்டு, எலும்பும் முதுகும் முறிந்து, ஆவியையும் கொடுக்க ஆயத்தமாகி, அரிய தியாகம் செய்ததை ஆங்கிலேயரே நன்குணர்ந்து அதிசயித்துளர். எனவே, நமது சுதந்திரப் போரின் வரலாறு மானிட கோடிகளுக்கே ஒரு வழிகாட்டியாகும்.

சுதந்திரம் அடைந்த பின்பும் அந்த அரிய மார்க்கத்தை நாம் மறவாமல், இப் பாரத பூமியில் வசிக்கும்



பலவாறான ஜாதி மத வகுப்பு வர்ணமுள்ள மக்கள் அனைவரும், சட்டத்தின் முன்னே சரிசமானம் என்பதாக [illegible]து குடியரசு அரசியலை வகுத்துள்ளோம். எல்லாரும் இன்புற்றிருக்கவேண்டும் என்றே எண்ணுகின்றோம். எல்லாருக்கும் பணிபுரியவே ஆவல் கொண்டுள்ளோம்.

உலகெலாம் சுகமே வாழவேண்டும் என்று ஆதி முதல் அரிய போதம் புகன்று வரும் தேசம் நமது பாரத பூமியைத் தவிர வேறு உண்டோ!

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று (ஆடு)

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமம் என்பதுறுதி யாச்சு
சங்கு கொண்டே வெற்றியூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லாம் எடுத்து ஓதுவோமே. (ஆடு)

112752
44525